

# விருந்தோம்பலும் உட்படுத்தாமையும்

## பாசிக்குடாவில் யுத்தத்திற்குப் பிந்திய சுற்றுலாத்துறை பற்றிய ஓர் ஆய்வு

வகிஷா குணசேகர, மீரா பிலிப்ஸ் மற்றும் விஜய் நாகராஜ்

நவம்பர் 2016

ஆய்வுக்கட்டுரை தொடர்: 22 - 2016



centre for poverty analysis

# விருந்தோம்பலும் உட்படுத்தாமையும்

**பாசிக்குடாவில் யுத்தத்திற்குப் பிந்திய சுற்றுலாத்துறை பற்றிய ஓர் ஆய்வு**

வகிஷா குணசேகர, மீரா பிலிப்ஸ் மற்றும் விஜய் நாகராஜ்

நவம்பர் 2016

ஆய்வுக்கட்டுரை தொடர் இல : 22 - 2016

வெளியீட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்கள் மீரா பிலிப்ஸ் மற்றும் CEPA ஊழியர்களுக்கு உரித்தானவையாகும்

வறுமை ஆராய்ச்சி நிலையம் 2016

முதலாவது வெளியீடு - 2016

ISBN: 978-955-1040-96-3

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட பிரசுரிப்புக்களின் தரவு அட்டவணை

குணசேகர, வகிஷா.

விருந்தோம்பலும் உட்படுத்தாமையும் : பாசிக்குடாவில் யுத்தத்திற்கு பிந்திய சுற்றுலாத்துறை பற்றிய ஓர் ஆய்வு / வகிஷா குணசேகர, மீரா பிலிப்ஸ், விஜய் நாகராஜ் - கொழும்பு : வறுமை ஆராய்ச்சி நிலையம், 2016 – ப. 55; செமீ. 29. ஆய்வுக் கட்டுரை தொடர். இல : 22

ISBN: 978-955-1040-96-3

i. 338. 4791072 டிவி 23 ii. தலைப்பு

1. சுற்றுலாத்துறை – ஆய்வு

# எம்மைப் பற்றி

மோதலினால் பாதிக்கப்பட்ட சூழ்நிலைகளில் எவ்வாறு மக்கள் வாழ்க்கையொன்றை மேற்கொள்கிறார்கள், தமது பிள்ளைகளைப் படிப்பிக்கின்றார்கள், சுகவீனத்தைக் கையாள்கின்றார்கள் அத்துடன் வேறு அடிப்படையிலான சேவைகளை அடைகின்றார்கள் என்பன மீது பலமான சான்றிலான தளமொன்றைத் தோற்றுவிப்பதைப் பாதுகாப்பிலான வாழ்வாதார ஆராய்ச்சிக் கூட்டிணைப்பு (Secure Livelihoods Research Consortium (SLRC)) குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதத்தன்மையிலான சேமநலனுக்காக அடிப்படைச் சேவைகள் மற்றும் சமூகப் பாதுகாப்புக்கு சிறந்த அடைதலை வழங்குதல், அத்துடன் வாழ்வாதார விடயங்களுக்கு ஆதரவு வழங்குதல், நிலைத்திருத்தல் அபிவிருத்திக் குறிக்கோள்கள் போன்ற அபிவிருத்தி இலக்குகளை சாதித்தல் மற்றும் சமாதானத்திலும், நாட்டைக் கட்டியெழுப்புவதிலும் சர்வதேச முயற்சிகள்.

தீவிரமான ஒரு வருட ஆரம்பக் கட்டமொன்றின் மார்க்கத்தின் மேலாக விருத்தி செய்யப்பட்ட மூன்று உள்மையக் கருப்பொருள்களே SLRC ஆராய்ச்சியின் மையத்தில் உள்ளன:

- அரசாங்கத்தின் சட்டபூர்வதன்மை: அரசாங்கத்தின் அனுபவங்கள், முன்னுணர்வுகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் அத்துடன் மோதலினால் பாதிக்கப்பட்ட சூழ்நிலைகளில் உள்நாட்டு ஆட்சி
- அரசாங்கத்தின் ஆற்றலளவு: மோதலினால் பாதிக்கப்பட்ட சூழ்நிலைகளில் சேவைகளையும்,சமூகப் பாதுகாப்பினையும் வழங்கும் பயனுறுதிவாய்ந்த அரசாங்கங்களைக் கட்டியெழுப்புதல்
- மோதலின் கீழ் வாழ்வாதார விசைவீச்சு விளைவுகள் மற்றும் பொருளாதாரச் செயற்பாடு

கடல் கடந்த அபிவிருத்தி நிறுவனம் [Overseas Development Institute (ODI)] தலைமைத் தாபனமாகும். இலங்கையில் வறுமை ஆராய்ச்சி நிலையம் [Centre for Poverty Analysis (CEPA)] ,பெயின்ஸ்ரெயின் சர்வதேச நிலையம் [Feinstein InternationalCenter (FIC, Tufts University)], ஆப்கானிஸ்தான் ஆராய்ச்சி, மீளாய்வு அலகு [Afghanistan Research and Evaluation Unit (AREU)], பாகிஸ்தானில் நிலைத்திருத்தல் அபிவிருத்திக் கொள்கை நிறுவனம் [Sustainable Development Policy Institute (SDPI)], நெதர்லாந்தில் வாகனிங்கன் அனர்த்தகற்கைகள் பல்கலைக்கழகம் [Disaster Studies of Wageningen University (WUR)], நேபாளம் சமகால ஆராய்ச்சி நிலையம் [Nepal Centre for ContemporaryResearch (NCCR)] மற்றும் உணவு,விவசாயதாபனம் [Food and Agriculture Organization (FAO)] ஆகியவற்றை SLRC பங்காளர்கள் உள்ளடக்குகின்றன.

# ஒப்புகை

## எழுதியோர் பற்றி

மோதலினால் பாதிக்கப்பட்ட சூழ்நிலைகளில் வாழ்வாதாரங்களையும், அடிப்படைச் சேவைகளையும் மற்றும் சமூகப் பாதுகாப்பினையும் ஆராயும் ஆறு வருட உலகளாவிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டமொன்றான பாதுகாப்பிலான வாழ்வாதார ஆராய்ச்சிக் கூட்டுக்கு பங்களிப்பொன்றாக இலங்கை, கொழும்பு வறுமை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்களினால் இந்த ஆய்வறிக்கை எழுதப்பட்டுள்ளது.

வகிஷா குணசேகர, மீரா பிலிப்ஸ் மற்றும் விஜய் நாகராஜ் ஆகியோரை உள்மைய ஆராய்ச்சிக் குழாம் கொண்டிருந்தது. கிருஷ்ணா வேலுப்பிள்ளை, கிருத்திகா உமாசுதன், தம்பிப்பிள்ளை சரோஜினி மற்றும் நாகராசா நந்தகுமார் ஆகியோரின் முயற்சிகள் இன்றி பாசிக்குடாவிலும், மட்டக்களப்பிலும் வெளிக்கள ஆராய்ச்சி சாத்தியப்பட்டிருக்கமாட்டாது. மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சமூக-பொருளாதாரத் தரவை தொகுப்பதற்கும், பகுப்பாய்வதற்கும் உதவிய யாஜ்னா சன்குஹனுக்கு (CEPA) நன்றிகள்.

இந்த ஆராய்ச்சியை நடத்துவதில் அவரது ஆதரவுக்கும் அத்துடன் வரைவு மீதான கருத்துரைகளுக்கும் கிழக்கு மாகாணத்தில் தளத்தைக் கொண்ட ஓர் ஆராய்ச்சியாளரும், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான சரளா இமானுவேலுக்கு விசேடமாக நன்றி கூறப்படுகின்றது. இந்த அறிக்கை மீது விரிவான கருத்துகளுக்காக அடம்பெயினுக்கும் நாம் நன்றி தெரிவிக்கின்றோம்.

# சுருக்கக்குறியீடுகள்

| | | |
|---|---|---|
| BRA | British Resorts Association (பிரித்தானிய உல்லாசத்தளங்கள் சங்கம்) |
| EPF | Employee Provident Fund (ஊழியர் சேமலாப நிதியம்) |
| ETF | Employee Trust Fund (ஊழியர் நம்பிக்கை நிதியம்) |
| FDI | Foreign Direct Investment (வெளிநாட்டு நேரடி முதலீடு) |
| FGD | Focus Group Discussion (இலக்குக் குழு கலந்துரையாடல்) |
| GN | Grama Niladhari (கிராம உத்தியோகத்தர்) |
| ICG | International Crisis Group (சர்வதேச நெருக்கடிநிலைக் குழு) |
| ICT | Information and Communication Technology (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) |
| ILO | International Labour Organization (சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம்) |
| KKC | Karenkalaicholai (கரங்கலைச்சோலை) |
| LSR | Lanka Sportreizen |
| LTTE | Liberation Tigers of Tamil Eelam (தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்) |
| NGO | Non-Governmental Organisation (அரச-சார்பற்றதாபனம்) |
| PC | Paddiyadichenai (பட்டியடிச்சேனை) |
| SLTB | Sri Lanka Tourist Board (இலங்கை சுற்றுலாச் சபை) |
| SLTD | A Sri Lanka Tourism Development Authority (இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை) |
| SMEs | Small and Medium-Sized Enterprises (சிறிய, நடுத்தர அளவிலான வியாபாரமுயற்சிகள்) |
| STZ | Special Tourism Zone (விசேட சுற்றுலாத்துறை வலயம்) |
| TMVP | Tamil Makkal Viduthalai Puligal (தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்) |

# பொருளடக்கம்


ஒப்புகை IV

சுருக்கக்குறியீடுகள் V

1 அறிமுகம் 01

1.1 ஆய்வுக்கான பின்னணி 01

1.2 ஆராய்ச்சி வினாக்கள் 03

2 முறைமையியல்

2.1 ஒரு பண்பறிதல் அணுகுமுறை 05

2.2 ஆராய்ச்சியின் அமைவிடம் 07

3 சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் அரசியல் மற்றும் தற்சார்புடைய பொருளாதாரம்

3.1 வர்த்தகமயமாக்கப்பட்ட விருந்தோம்பல் 10

3.2 சுற்றுலாத்துறை தொழில் உருவாக்கம் 12

3.3 சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் தற்சார்புடைய பரிமாணங்கள் 14

4 முடிவுகளின் பகுப்பாய்வு

4.1 யுத்தத்தின் மரபுரிமை மற்றும் பாசிக்குடாவின் சமூக-பொருளாதாரப் புறவரை 15

4.2 உல்லாசத்தளப் பொருளாதாரத்தின் நிழலில ஆரம்பநிலை உற்பத்தியாளர்கள்: பாசிக்குடாவில் மீனவர்கள் 16

4.3 பாசிக்குடாவின் சுற்றுலாத்துறைப் பொருளாதாரத்தில் நிச்சயமின்மை,
ஊதியத்திலான சரீரஉழைப்பு மற்றும் தொழில் 20

4.4 பாசிக்குடாவின் சுற்றுலாத்துறைப் பொருளாதாரத்தில் பெண்களின் தொழில் 24

4.5 தேர்ச்சித்திறன்களின் இடைவெளி மற்றும் பாகுபாட்டினதும்,
வெளியேற்றத்தினதும் விவரணங்கள் 28

4.6 சுய-தொழில் மற்றும் கடன் 31

5 முடிவுரைகள்

5.1 உள்ளூர்வாசிகளின் வெளியேற்றம் 36

5.2 இனத்துவ விரோதத்தையும்,
வம்சாவழி தரங்களையும் பிரதியெடுக்கும் தற்சார்புத் தன்மைகள் 38

5.3 அபிவிருத்தியின்மையின் ஒரு கருத்துருவம் 39

5.4 முன்னோக்கி நகருதல்: மெதுவாக நகர்வதிலிருந்து பங்கிடப்படுகின்ற நீதிவரை 40

உசாத்துணைகள் 42

# 1 அறிமுகம்

## 1.1 ஆய்வுக்கான பின்னணி

இலங்கையின் 30 வருட சிவில் யுத்தத்தின் முடிவைத் தொடர்ந்து, பொருளாதார வளர்ச்சியை உச்சமாக்கும் பாதையொன்றின் மீது நாட்டை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்தார். உலகளாவிய மூலதனத்தையும். சுற்றுலாத்துறையையும் கவர்வதற்காக பாரிய அளவிலான நகர உருமாற்றத்தினதும், உட்கட்டமைப்பு அபிவிருத்தியினதும் மீது வலியுறுத்தல் இருந்தது. அடுத்த பாரிய விடயமாக சுற்றுலாத்துறைக் கைத்தொழிலுக்கான (சுற்றுலாத் தொழிற்துறைக்கான) உன்னதமான உயரிய நோக்கங்களுக்கு அமைவாக, தொழிலைத் தோற்றுவிப்பதற்கும், வருமானங்களை அதிகரிப்பதற்குமான அதன் ஆற்றலளவில் யுத்தத்திற்குப் பிந்திய அரசாங்கத்தின் நம்பிக்கை விளங்கியது. எனவே, நியாயபூர்வமான தன்மையொன்றில் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் நன்மைகளை வழங்கக்கூடியதும், அதேவேளை வர்த்தக மற்றும் பொருளாதாரத் திரும்பல்கள் மீதான அடிப்படையிலான உட்கட்டமைப்பு மீது மூலதனங்களை முன்னேற்றுவதுடன், 'ஆதாயமுள்ள பொருளாதாரச் செயற்பாடுகளில் மக்கள் ஈடுபடுவதை இயலச் செய்வதற்கு அத்தகைய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு சமவளவிலான அடைதலை' உருவாக்கக்கூடியதுமான முக்கியமான தொழிற்துறையொன்றாக சுற்றுலாத்துறையை முன்னைய ஆட்சியின் தேசியக் கொள்கை வரைச்சட்டமான மகிந்த சிந்தனை அடையாளங் கண்டது (தேசியத் திட்டமிடல் திணைக்களம், 2010).

இன மோதலுக்கான சர்வரோக நிவாரணியொன்றாக பொருளாதார அபிவிருத்தி விளங்கும் என்ற கருத்தின் மீது யுத்தத்திற்குப் பிந்திய ராஜபக்ஷவின் செயல்திட்டம் ஆதாரமாக விளங்கியது. யுத்தமானது அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் தடையாகவும் அத்துடன் யுத்தத்தின் முடிவானது விசேடமாக வடக்கிலும், கிழக்கிலும் விரைந்த காலடித்தொலைவிலான முன்னேற்றமொன்றின் சகாப்தம் ஒன்றின் அங்குரார்ப்பணமாகவும் எடுக்கப்பட்டது. யுத்தத்தினால் சிதைந்த நாட்டிலிருந்து 'ஆசியாவின் ஆச்சரியம்' என்ற இலங்கையின் நிலைமாற்றத்தைக் காட்சிப்படுத்தக்கூடியதாக அனேகளவில் இராணுவத்தின் சம்பந்தத்துடன் உயர்வான மூலதனத்துடன் மத்திய அரசினால் முன்னெடுக்கப்பட்ட மிகப் பாரிய அபிவிருத்தி தலையீடுகளாக இவை காணப்பட்டன.

இலங்கையின் கிழக்கு கடற்கரை மீதுள்ள ஆடம்பர உல்லாசத்தளமொன்றான இன்றைய பாசிக்குடா இந்த சிந்தாந்தத்தின் ஓர் உற்பத்திப் பொருளாகும். பாசிக்குடாவின் உல்லாசத்தளங்களுக்கு மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு விருந்தினர்களின் எண்ணிக்கை அண்ணளவாக வருடமொன்றுக்கு 58,000 ஆகும் (ILO, 2014:9). ஒவ்வொரு வருடமும் அண்ணளவாக 17,000 உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு வருகைதருவதுடன், சராசரியாக ஒவ்வொரு சுற்றுலாப்பயணியும் பாசிக்குடாவில் ஐந்து நாட்களைக் கழிக்கிறார். அதேவேளை, ஒவ்வொரு வருடமும் கடற்கரைக்கு 62,000 பேர் நாள் சுற்றுலாக்களை மேற்கொள்கிறார்கள் (அதே அறிக்கை). தரவு சேகரிக்கப்பட்ட காலப்பகுதியில், பாசிக்குடா-கல்குடா பகுதியில் ஏழு உல்லாசத்தளங்களும், 14 விருந்தினர் இல்லங்களும் மற்றும் குடித்தனத்தங்குமிடங்களும் என மொத்தமாக 469 இடவசதி அலகுகள் அல்லது அறைகள் இருந்தன (அதே அறிக்கை).

பாசிக்குடாவும் மற்றும் வேறு அதையொத்த குறித்தொதுக்கப்பட்ட சுற்றுலாத்துறை வலயங்களும் வெறுமனே தொழிற்துறையொன்றின் அங்கமல்ல. ஆனால், தேசத்தின் அரசியல் மற்றும் தற்சார்புடைகளைக் கொண்ட பொருளாதாரங்களை உருமாற்றுவதற்கு முக்கியமானதொன்றாகும். பாசிக்குடாவில் யுத்தத்திற்குப் பிந்திய சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் சூழமைவில் சமூகங்களின் அனுபவங்கள், கண்ணோட்டங்கள் மற்றும் தொழிற்துறையில் பங்கெடுக்கும் வழியை அரசியல் பொருளாதார உறவுகள் வடிவமைத்துள்ளன. அவ்வாறாக, தற்சார்புடைகளிலான பொருளாதாரம் முதலாளித்துவ உறவுகளின் தற்சார்புடைகளுடன் அல்லது உளவிய ரீதியிலான பரிமாணங்களுடன் வெறுமனே ஈடுபடுவதில்லை. ஆனால், அத்தகைய உறவுகளினால் உருவாக்கப்படுகின்ற தற்சார்பு நிலைகளின் வழிகளிலும் ஈடுபடுகின்றன.

[1]2009 மே மாதம் இலங்கை அரசாங்கத்தின் இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) மீதான வெற்றியை உறுதி செய்து 1983 இலிருந்து தீவினை அழிவுக்கு உள்ளாக்கிய உள்நாட்டு யுத்தத்தின் முடிவை பிரகடனம் செய்தது.

பொருளாதாரச் செல்வத்தைத் தோற்றுவிப்பதற்கும், சுற்றுலாத்துறை உல்லாசத்தளங்களின் அமைப்பொன்றாக இலங்கையை மீள்-அடையாளமிடுவதற்குமான திறவுகோலாக இந்த சுற்றுலாத்துறை வலயங்கள் நோக்கப்பட்டன. 2016க்குள் 'உலகின் மிகவும் பொக்கிஷமான பச்சைப் பசுமையிலான தீவகத்திற்கு' வருகைதர எதிர்பார்க்கப்பட்ட அதிகளவில் செலவழிக்கும் 2.5 மில்லியன் சுற்றுலாப்பயணிகளின் உத்தேசிக்கப்பட்ட வருகைதரல்களினால் 700,000 புதிய தொழில்களைத் தோற்றுவிப்பதற்கு மேலதிகமாக, 2020க்குள் முதலாம் இடத்தில் அந்நியச் செலாவணி ஈட்டுனராக விளங்குவதற்கு சுற்றுலாத்துறை நிலைப்படுத்தப்பட்டது (தேசியத் திட்டமிடல் திணைக்களம், 2010:164).

மேலும், யுத்தத்தினால் சிதைவடைந்த வடக்கு மற்றும் கிழக்கிற்கு மீளத்திரும்பும் அபிவிருத்தியானது, யுத்தத்தின் முடிவின் பின்னர் தொடர்ந்துமிருக்கும் ஏதேனும் அபிவிருத்தி பிரச்சனைகள் தொடர்பானவையே என்பதுடன், இயற்கை நீதி தொடர்பானவை அல்ல என்ற புரிந்துணர்வொன்றினால் ஆதரவளிக்கப்பட்டிருந்தது. 2015 ஜனவரியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமானது பொருளாதார அபிவிருத்தியையும் (சுற்றுலாத்துறை உட்பட), நல்லிணக்கத்தையும் மற்றும் நீதியையும் இணைப்பது மீதான வலியுறுத்தலிலிருந்து ஏதேனும் தெளிவான மாற்றத்தை கொண்டிருக்கவில்லை. 2015 நவம்பர் 5 அன்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க, தனது பாராளுமன்ற உரையில், சிறந்த கொடுப்பனவிலான தொழில்களையே பெருமளவு தகைமைவாய்ந்த மக்கள் விரும்புகின்றனர் என்றும் 'குறைந்த கொடுப்பனவிலான உற்பத்தி அடிப்படையிலான பொருளாதாரமொன்றைப் பேணுவது சாத்தியமில்லை' என்றும் 'குறுகிய காலத்தில் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத்துறை போன்ற துறைகளை நோக்குவது எமக்கு அவசியமாகும்' என்றும் தெரிவித்திருந்தார் (News.lk.2015). அவ்வாறாக, சுற்றுலாத்துறையிலான மூலதனம் வரவு-செலவுத் திட்ட முன்மொழிவில் உயர்வாக விளங்குவதுடன் (News.lk.2011), 2011-2016 சுற்றுலாத்துறை அபிவிருத்தி மூலோபாயம் இன்னுமே கொள்கையை வடிவமைத்துக்கொண்டிருக்கிறது.

அரசாங்கத்தின் நம்பிக்கைக்கு முற்றிலும் மாறானதன்மையில், இலங்கையில் யுத்தத்திற்குப் பிந்திய அபிவிருத்தி முன்னெடுப்புகள் உண்மையிலேயே தொழில் தோற்றுவிப்புக்கு மிகச் சொற்பமான அளவிற்கே பங்களித்துள்ளமைக்கு சான்றுள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களிலிருந்து மக்களுக்கு நிலைத்திருக்கத்தக்க தொழில்களை உருவாக்குவதற்கு, குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கிலும், கிழக்கிலும் சுற்றுலாத்துறை அபிவிருத்தியினால் சமாளிக்க முடியவில்லை என மட்டுப்படுத்தப்பட்ட தொகையிலான சில ஆய்வுகளே சான்றினை முன்வைக்கின்றன (Sarvananthan, 2016).

இந்தப் பின்னணியிலேயே, இலங்கையில் யுத்தத்திற்குப் பிந்திய சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் இயக்காற்றல்களைப் புரிந்துகொள்வதை இந்த ஆராய்ச்சி குறிக்கோளாகக் கொண்டுள்ளது. எவ்வாறு பல்-எண்ணிக்கையிலான உள்ளூர் மற்றும் மேல்-நிலையிலானஉள்ளூர் அக்கறைகளும்,மோதல் தொடர்பிலான வலுவற்ற இயல்புகளும் யுத்தத்திற்குப் பிந்திய சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் சிக்கியுள்ளன என்பதற்கான காரணத்தை பாசிக்குடாவின் சம்பவக்கற்கை ஒன்றின் ஊடாக இது மதிப்பிடுகின்றது.



பொது மக்களையும், தனிப்பட்ட கடற்கரைகளையும் பிரிக்கும் கயிறு: ஒவ்வொரு வருடமும் பாசிக்குடாவின் மிகச் செலவிலான உல்லாசத்தளங்களுக்கு அண்ணளவாக 58,000 வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் வருகைதருகின்ற அதேவேளை உள்ளூர் பகுதிக்கு 17,000 உள்ளூர் சுற்றுலாப்பயணிகளும், 62,000 ஒரு நாள் மட்டுமே தங்குகின்ற சுற்றுலாப் பயணிகளும் வருகைதருகின்றனர்.

இவ் ஆய்வானது 'தாக்கங்களை' விட 'செயல் விளைவுகள்' ஊடாக சுற்றுலாத்துறையினை விளங்கிக்கொள்வதற்கு முற்படுகிறது. இந்த நோக்கத்திற்காக, பாசிக்குடாவில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை அடக்கியுள்ள சமூகங்களின் அரசியல் அத்துடன் தற்சார்புடைய பொருளாதாரங்களின் சூழமைவுரீதியில் அடித்தளமிட்டுள்ளதும், நேர்த்தியாக சரிவரக் கட்டமைக்கப்பட்டதுமான பகுப்பாய்வொன்றை அது முன்வைக்கின்றது.

இலங்கையில் ஏற்பட்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை மேம்போக்காக பார்க்கும் போது, எதிரிடையான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் குற்றங்குறைகளின் நெடுகிலும் நிலைப்படுத்தப்பட்டிருந்தது. அதேவேளை, வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்காகவும், தமது வாழ்க்கையை மீள்-கட்டியெழுப்புவதற்காகவும் முடிவில்லாத போராட்டமொன்றில் ஈடுபட்டிருந்தமையையும் குறிப்பிடும் தன்மையை வழங்குவதை இத்தகைய பகுப்பாய்வுகள் அனுமானிக்கின்றன. இந்தக் குற்றங்குறைகள் பால்நிலை, வகுப்பு, சாதி மற்றும் இனத்துவம் ஆகியவற்றைக் கொண்ட மட்டத்தில் மட்டும் செயற்படுவதில்லை. ஆனால், மூலதனம் மற்றும் சரீரஉழைப்பு, சந்தை மற்றும் அரசாங்கம், மத்தி மற்றும் புறஎல்லை ஆகியவற்றிலும் செயற்படுகின்றது (Murray, 2001: 2).

இந்தக் குறுக்குவெட்டிலான குற்றங்குறைகள் வேறுபட்ட மட்டங்களின் முழுவதும் சிதைவுகளையும், நலிவடையும் தன்மைகளையும் தோற்றுவித்து, ஒன்றுதிரள்வின் பாங்குகளையும், அதிகாரத்தினதும், செலுத்துகின்ற வறுமையினதும் மற்றும் வெளியேற்றத்தினையும் ஊக்கப்படுத்தி உறவுகளையும் மீள்-உற்பத்தி செய்கின்ற அத்துடன் சிதைக்கின்ற சிக்கலான நிலைமைகளையும் உருவாக்குகின்றது (Murray, 2001: 5). தனிப்பட்ட பொருளாதார ஆதாயத்திற்கும் அத்துடன் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மைக்குமான வாய்ப்புக்களின் உருவாக்கத்திற்கு இடையிலான இணைப்பு தொடர்பில் ஏதேனும் எடுத்துக்காட்டிலான அனுமானங்களை அவை குறைத்து மதிப்பிடுகின்றன.

வழமையாக, வாழ்வாதார ஆராய்ச்சி பகுப்பாய்வின் ஒரு குறிப்பிட்ட மட்டமொன்றின் (விசேடமாக குடித்தனம்) மீது நிர்ணயிக்கப்படும் என்பதுடன், அனேகமாக வாழ்வாதாரங்களினது மாதிரிகளின் இணைப்புக்களையும் அத்துடன் அவற்றுக்கு இடையிலான தொடர்புகளையும் பரீட்சிக்கின்றது. இதைச் செய்வதிலிருந்து விலகி, அரசியல், பொருளாதார மற்றும் சமூக உறவுகளில் தொடர்ச்சியினதும், மாற்றத்தினதும் பரந்த போக்குகளை அனுமானிப்பதிலும்,பாரிய, நடுத்தர மற்றும் நுண் மட்டங்களிலும் அவற்றுக்கிடையிலுமான தொடர்புகளை இணக்கம் செய்யும் கட்டமைப்புகளையும், நடைமுறைகளையும் மற்றும் நிறுவனரீதியிலான வரைச்சட்டங்களையும் திறனாய்வுசார்ந்ததாக ஆய்வுசெய்வதிலும் நாம் நோக்கினைக் கொண்டுள்ளோம் (Bagchi et al., 1998; Bryceson, 1999; Carney, 1998; de Haan, 1999; de Haan and Brock, 2000; Francis, 2000; van Onselen, 1996). யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் ஓரங்கட்டப்படுதலினதும், சொத்துப் பறிப்பினதும், ஒன்றுதிரள்வினதும் மற்றும் வகைப்படுத்தலினதும் இன்றியமையாத முக்கியமான நடைமுறைகளை சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு எதிரே இது ஆய்வுசெய்கின்றது. சம்பந்தப்பட்ட விதத்தில் பாசிக்குடாவில் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு வேறுபட்ட செயற்பாட்டாளர்களினால் ஒதுக்கப்பட்ட பன்னிலையிலான தற்சார்புடையிலான கருத்துருக்களின் சிறப்பியல்பையும், கருத்தினையும் ஆய்வு ஆராய்கின்றது.

## 1.2 ஆராய்ச்சி வினாக்கள்

இந்த வினாவைச் செலுத்தும் பிரதான ஆராய்ச்சி வினா என்னவெனில்: *பாசிக்குடா போன்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் இயக்காற்றல்களும், விளைதிறன்களும் எவை?* யுத்தத்திற்குப் பிந்திய சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் அரசியல் மற்றும் தற்சார்புடையிலான பொருளாதாரம் ஆகியன தொடர்பில் இந்த வினா மேலும் துணை-வினாக்களினுள் கூறுகளாக்கப்படுகின்றது.

- பாசிக்குடாவில் அரசியல் பொருளாதார உறவுகளை எவ்வாறு சுற்றுலாத்துறை அபிவிருத்தி மாற்றியமைத்துள்ளது?
    - வாழ்வாதாரங்களினதும், தொழிலினதும் பாங்குகளில் தொடர்ச்சியான நிலையும், மாற்றங்களும் எவை?
    - மேற்படி வினாக்கள் தொடர்பில், அரசாங்கத்தின் வகிபங்கு என்னவாக இருந்தது என்பதுடன், சுற்றுலாத்துறை தொடர்பிலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க மற்றும் தனியார் செயற்பாட்டாளர்களின் வகிபங்கு மீதான பொறுப்புக்கூறுதலினதும், பொறுப்பினதும் கருத்துக்களை அது எவ்வாறு உருக்கொடுத்துள்ளது?

- பாசிக்குடாவில் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு வேறுபட்ட செயற்பாட்டாளர்களினால் ஒதுக்கப்பட்ட பன்னிலையிலான தற்சார்புடையிலான கருத்துக்கள் எவை?
    - விசேடமாக (i) பால்நிலை மற்றும் இனத்துவ உறவுகள் மற்றும் (ii) சுற்றுலாத்துறை தொடர்பிலான செயற்பாடுகளில் அரசாங்கத்தினதும், தனியார் செயற்பாட்டாளர்களினதும் வகிபங்கு ஆகியன தொடர்பில் இந்தக் கருத்துக்களின் சமூக மற்றும் அரசியல் பொருளாதாரக் கருத்து என்ன?
    - எவ்வாறு சுற்றுலாத்துறை அபிவிருத்தி யுத்தத்திற்குப் பிந்திய சமூகக் கட்டுமானத்தை மீள்-ஒழுங்குபடுத்துகின்றது?
    - உடனிருக்கின்ற அக்கறைகளினதும், வாய்ப்புக்களினதும் தன்மை என்ன என்பதுடன், விசேடமாக முன்கூட்டியே நிலவுகின்ற அல்லது புதிய சமூகக் குற்றங்குறைகளில் அவை எவ்வாறு வரிசைப்படுத்தப்படுவதுடன், நெம்புகோல்படுத்தப்படுகின்றன?

புத்திசாலித்தனமாக தெளிவாக உச்சரிக்கப்பட்ட தலைப்புக்களாயிருப்பதை விட, இந்த வினாக்கள் வழிப்பாதைகளாகவும், கைகாட்டிகளாகவும் செயல்படும் உத்தேசத்தைக் கொண்டுள்ளன. இந்தப் பரிமாணங்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுலாத்துறையின் அபிவிருத்தியாக விளங்கும் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் வலையினுள் ஒன்றுடன் ஒன்று நெய்யப்பட்டுள்ளதாகவும், முறைமையியலும், பகுப்பாய்வும் இந்த ஒன்றுடன் ஒன்றான தொடர்புத்தன்மையைப் பேணுவதாகவும் விளங்குகின்றன.

கட்டுரையின் மீதியானது பின்வருமாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது: பகுதி 2இல், ஆராய்ச்சியின் முறைமையியலை நாம் சுருக்கமாக விபரித்துள்ளதுடன், பகுதி 3ஆனது பாரிய இலக்கியங்களினுள் எடுக்கப்பட்டுள்ள அரசியல் மற்றும் தற்சார்புடையிலான பொருளாதாரம் ஆகியன தொடர்பான அணுகுமுறையை எல்லைப்படுத்துகின்றது. பகுதி 4இல், யுத்தத்திற்குப் பிந்திய சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் அரசியல், பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்களை வெளிச்சமிட்டுக்காட்டும் ஆறு வெளிப்படுகின்ற கருப்பொருள்களினுள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள முடிவுகளை நாம் முன்வைத்துள்ளோம். பகுதி 5இல், முடிவுரைகளையிட்டு நாம் கலந்துரையாடுவதுடன், ஆராய்ச்சியினால் எழுப்பப்பட்ட பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுப்பதற்காக பரந்தளவில் பரிந்துரைகளை விபரித்துள்ளோம்.

# 2 முறைமையியல்

## 2.1 ஒரு பண்பறிதல் அணுகுமுறை

கைவசமுள்ள ஆராய்ச்சிக்கு ஒரு மிகவும் உயர்வான பண்பறிதல் அணுகுமுறைக்கு மேலே சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி வினாக்கள் அழைப்புவிடுத்துள்ளன. பாசிக்குடாவில் பொருளாதார மற்றும் அரசியல் இயக்காற்றல்களை எவ்வாறு சுற்றுலாத்துறை அபிவிருத்தி மாற்றியமைத்துள்ளது என்பதைப் புரிந்துகொள்வதற்கான முயற்சியொன்று 'கருத்துக்களையும், கருத்துருக்களையும், வரைவிலக்கணங்களையும், குணவியல்புகளையும், அடையாளச் சின்னங்களையும் மற்றும் விடயங்களின் விவரணங்களையும் கைப்பற்றுவதற்கு' பொருள்விளக்கமளிப்பதும், உருப்படியானதுமான கருவிகளை வேண்டுகின்றது (Berg, 2001: 3). அரசியல் பொருளாதாரத் துறையில், பன்னிலையிலான கோட்பாடுகளை விருத்தி செய்வதற்கும் அத்துடன் விமர்சிப்பதற்கும் மற்றும் அரசியல் பொருளியலாளர்களினால் ஆய்வுசெய்யப்பட்ட பெருமளவு விடயங்களை பிரகாசமாக்குவதற்கும் விடய ஆய்வுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன (Ahiakpor, 1985; Evans, 1979; Gereffi, 1978; Greico, 1990; Keohane and Milner, 1996;Krasner, 1991). பாசிக்குடா என்ற தனித்த விடயமொன்றின் வரலாற்றினையும், அரசியல் பொருளாதாரத்தினையும் ஆராய்ந்தறிகின்ற பகுப்பாய்வொன்றின் ஊடாக, இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் தாக்கங்களை தெளிவுபடுத்த இந்த ஆராய்ச்சி முயல்கின்றது. மதிப்பாய்வின் வழிவகைகளாகவும், அத்துடன் எவ்வாறு அல்லது ஏன் ஏதாவது இடம்பெற்றது எனக் கேட்கும் ஆராய்ந்தறிகின்ற ஆராய்ச்சி சந்தேகங்களுக்கு விடய ஆய்வு முறையானது குறிப்பிடத்தக்கவிதத்தில் பயனுறுதிவாய்ந்ததாகும் என Yin (2012) சுட்டிக்காட்டுகின்றார். வேறுபடுகின்ற முக்கியத்துவத்தின் சிக்கலான மாறலிகளின் ஆய்வினை இந்த முறையானது அனுமதிப்பதுடன், உண்மையான வாழ்க்கைச் சூழ்நிலைகளில் நிலைநிறுத்தப்படுகின்ற நடைமுறைகளின் வளமானதும், முற்றுமுழுதானதுமான புரிந்துணர்வையும் வழங்க முடியும் (Merriam, 2009).

பல்-எண்ணிக்கையிலான பண்பறிதல் முறைகளை ஆராய்ச்சி செயற்படுத்தியது. சுற்றுலாத்துறை மீது கொள்கை ஆவணங்களைப் பகுப்பாய்வதற்காக ஆவணப்பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டது. Altheide இடமிருந்து (1996) தழுவப்பட்ட சில நடவடிக்கைகளை இந்த ஆய்வில் பின்பற்றப்பட்ட செயன்முறையானது உள்ளடக்கியுள்ளது: (i) ஆவணங்களுக்கான உள்ளடக்க மூலப்பிரமாணத்தை - சுற்றுலாத்துறை தொடர்பான அரசாங்கக் கொள்கை ஆவணங்களுக்கு நிர்ணயித்தல்; (ii) ஆவணங்களைச் சேகரித்தல் - பொதுசெயற்களத்திலிருந்து ஆவணங்கள்; (iii) பகுப்பாய்வின் முக்கியமான துறைகளைத் தெளிவுபடுத்தல் - சுற்றுலாத்துறையை விருத்திசெய்வதற்கு செயல் நோக்கங்கள் மற்றும் மூலோபாயங்கள்; (iv) ஆவணத்தைக் குறியிடுதல் மற்றும் பகுப்பாய்தல் - சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கு செயல் நோக்கங்கள் மற்றும் மூலோபாயங்களின் கீழ் சுற்றுலாத்துறையினால் அடையாளங்காணப்பட்ட கருப்பொருள்களை அது விபரித்துள்ள, கவனத்திற்கெடுத்துள்ள அல்லது கரிசனைக்கெடுத்துள்ள அளவை நிர்ணயிப்பதற்காக ஒவ்வொரு ஆவணமும் பகுப்பாயப்பட்டது; அத்துடன் (v) சரிபார்த்தல் - ஆவண மதிப்பீட்டின் முரண்படாதன்மையையும், நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கு, ஒவ்வொரு ஆவணத்தினதும் பகுப்பாய்வு இரண்டாவது நபர் ஒருவரினால் சரிபார்க்கப்பட்டது.

ஆரம்பநிலையிலான தரவுச் சேகரிப்பு நடைமுறையானது மூன்று கட்டங்களில் திட்டமிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆராய்ச்சி வினாக்களினதும், விடயத் தெரிவினதும் வடிவமைப்பு 17 முக்கிய நபர் நேர்முகங்காணல்களின் மூலம் அறிவிக்கப்பட்டது. இதில் இலங்கையில் சுற்றுலாத்துறையில் அத்துடன்/அல்லது கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையில்; யுத்தத்திற்குப் பிந்திய அரசியல் பொருளாதாரத்தில் அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பால்நிலைப் பிரச்சனைகளில்; மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் மற்றும் பொருளாதார இயக்காற்றல்களில் ஆழமான புரிந்துணர்வைக் கொண்டதும், அனுபவத்தைக் கொண்டதுமான கல்விமான்கள், அபிவிருத்தி ஊழியர்கள், சமூக ஊழியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர். சூழமைவில் பரந்த ஆராய்ச்சி வினாவையும், துணை ஆராய்ச்சி வினாக்களையும் முன்னேற்றுவதற்கு இந்த ஆரம்பச் சுற்றிலான நேர்முகங்காணல்கள் உதவிபுரிந்தன; இந்த நடைமுறையின் ஊடாகவே மேலே சுருக்கமாக விளக்கப்பட்டுள்ள வினாக்களை ஆராய்வதற்கு சிறந்த இடமாக பாசிக்குடா விளங்குகிறது என்பதை ஆராய்ச்சிக் குழாம் புரிந்துகொண்டது.

முதலாவது கட்டத்திலான தரவுச் சேகரிப்பு 2014 ஒக்ரோபருக்கும், டிசம்பருக்கும் இடையில் இடம்பெற்றதுடன், பாசிக்குடாவில் ஆரம்பநிலையிலான தரவுச் சேகரிப்பு 2015 ஜனவரியிலிருந்து ஜூன் வரை பல்-எண்ணிக்கையிலான அளவுகளில் நடத்தப்பட்டன. ஆரம்பத்தில் பாசிக்குடாவில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் சூழமைவைப் புரிந்துகொள்வதற்காக 10 முக்கிய நபர் நேர்முகங்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்விடயத்தில் மட்டக்களப்பில் உள்ள அரசாங்க அலுவலர்கள், அபிவிருத்தி அத்துடன்/அல்லது சமூக ஊழியர்கள்,ஆராய்ச்சியாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரிவோர் ஆகியோர் முக்கிய நபர்களாக உள்ளடங்கியிருந்தனர். பிரதானமாக மட்டக்களப்பு மற்றும் பாசிக்குடா ஆகியன மீதும்இ அரசியல் மற்றும் பொருளாதார இயக்காற்றல்கள் மீதும் அத்துடன் பொதுவான மட்டக்களப்பினதும், குறிப்பாக பாசிக்குடாவினதும் வரலாறு மீதும் நோக்கினைக் கொண்டு, கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையைப் புரிந்துகொள்வதே இந்த நேர்முகங்காணல்களின் குறிக்கோளாகும்.

பாசிக்குடாவுக்கு அடிக்கடியிலான வருகைதரல்களில், கல்குடா கிராம உத்தியோகத்தர் பிரிவில் (பாசிக்குடா சார்ந்துள்ள நிருவாக அலகு) பெருமளவு நேர்முகங்காணல்களும், நோக்குக் குழு கலந்துரையாடல்களும் (மொத்தமாக 40 சந்திப்புக்கள்) மேற்கொள்ளப்பட்டன.

நடைமுறையிலான உள்ளூராட்சி அலுவலர்கள் (கிராம உத்தியோகத்தர்கள்) (நான்கு தடவைகள் நேர்முகங்காணப்பட்டனர்), ஒரு முன்னாள் கிராம உத்தியோகத்தர் (இரு தடவைகள் நேர்முகங்காணப்பட்டார்), ஒரு தொழில் திணைக்கள அலுவலர், ஆறு பிரதேசச் செயலக அலுவலர்கள் (ஒரு நோக்குக் குழு கலந்துரையாடல்), ஐந்து வங்கி ஊழியர்கள், ஏழு உல்லாசத்தள முகாமையாளர்கள், மூன்று சிறிய அளவிலான ஹொட்டேல் உரிமையாளர்கள், உல்லாசத்தளங்களில் அல்லது ஹொட்டேல்களில் பணிபுரியும் கல்குடாவைச் சேர்ந்த மூன்று தனிப்பட்டவர்கள் மற்றும் பத்து ஹொட்டேல் ஊழியர்கள் ஆகியோரைப் பதிலிறுப்பாளர்கள் உள்ளடக்கியிருந்தனர்.

பாசிக்குடாவுக்கான வருகைதரல்களின் போது, சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் மனவுணர்வுகளையும், அனுபவங்களையும் உறுதிப்படுத்துவதற்காக (Asbury, 1995) பட்டியடிச்சேனை மற்றும் கரங்கலைச்சோலை ஆகிய உல்லாசத்தளங்களுக்கு மிகவும் கிட்டியதாகவுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள பெண்கள், இளைஞர் மற்றும் வயதானோர் மத்தியில் ஆறு நோக்குக் குழு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. மேலதிகமாக, உள்ளூர் மீனவர் கூட்டுறவுச் சங்கமொன்றுடனும் (ஆறு ஆண்பதிலிறுப்பாளர்கள்) மற்றும் சிறிய ஹொட்டேல் உரிமையாளர்கள் சங்கத்துடனும் (ஒரு பெண் மற்றும் ஐந்து ஆண் பதிலிறுப்பாளர்கள்) நோக்குக் குழு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. பகுதியுடன் நன்கு பரிச்சயமான தமிழ் மொழி பூர்வீகமான ஒருவரினால் நெறிப்படுத்தப்பட்ட பகுதியாக கட்டமைக்கப்பட்ட குழு நேர்முகங்காணல் நடைமுறையொன்றின் ஊடாக தரவுகள் சேகரிக்கப்பட்டன. நோக்குக் குழு கலந்துரையாடல்களில் இரண்டு அல்லது மூன்று குறிப்பெடுபபோர் கலந்து கொண்டதுடன், ஒவ்வொருவரும் வாய்மொழியிலானதும், வாய்மொழியற்றதுமான தரவுகளை எடுத்துக்கொண்டனர்.

தொழிலையும் மற்றும் உல்லாசத்தளங்களினதும், சிறிய ஹொட்டேல்களினதும் மூலத்தைப் பெறும் நடைமுறைகளையும் பற்றிய தகவலைச் சேகரிப்பதற்கு துரித அளவீடொன்று நடத்தப்பட்டது. இது பாசிக்குடாவில் உள்ள சகல உல்லாசத்தளங்களையும் (ஏழு) அத்துடன் பதினான்கு சிறிய தாபனங்களில் பத்தையும் உள்ளடக்கியிருந்தது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தரவுச் சேகரிப்பு முறைகளுக்கு மேலதிகமாக, பாசிக்குடாவில் மக்களையும் அத்துடன் சுற்றுலாத்துறை தொழிற்துறைகளின் அமைப்புக்களையும் பரீட்சிப்பதற்கு பங்கெடுப்பாளர் அவதானிப்பும் (Creswell, 1998) நடத்தப்பட்டது. ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பிரிவுகளும், செயற்பாடுகளும் கலந்துரையாடப்பட்ட போது, தனிப்பட்ட ஆராய்ச்சியாளர்களின் விஸ்தாரமான வெளிக்களக் குறிப்புகள் தொகுக்கப்பட்டன.

இந்த ஆய்வில் தரவுகளின் மட்டுப்படுத்தல்கள் வருமாறு: உல்லாசத்தள முகாமையாளர்களுடனான நேர்முகங்காணல்களில் பாசிக்குடாவுக்கு வருவதற்கு சுற்றுலாப்பயணிகளின்/விருந்தினர்களின் காரணங்கள் பிரதிபலிக்கப்படக்கூடும் என அனுமானம் செய்யப்பட்டதனால் அவர்களை ஆராய்ச்சிக் குழாம் நேர்முகங்காணவில்லை; தமது கூட்டாண்மை மனித வள நடைமுறைகளை அணுகுதலை உல்லாசத்தளங்கள் வழங்கவில்லை; உல்லாசத்தள உரிமையாளர்களுக்கும், அரசாங்க அலுவலர்களுக்கும் இடையிலான காணிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் ஏதேனும் பதிவேடுகளை/ஆவணங்களை அடையக்கூடியதாக ஆராய்ச்சிக் குழாம் இருக்கவில்லை; பாசிக்குடாவில் மூலதனப் பதிவேடுகளுக்கான அல்லது மூலதனத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அணுகும் வசதியினை ஆராய்ச்சியாளர்கள் கொண்டிருக்கவில்லை. அத்துடன் தமது வேலைத்தலத்திலேயே பதிலிறுப்பாளர்களை ஆராய்ச்சிக் குழாம் நேர்முகங்கண்டதுடன், இது பாசிக்குடாவில் சுற்றுலாத்துறை பற்றி அவர்களது எண்ணங்களைப் பரிமாறிக்கொள்வதில் அவர்கள் அதிகளவு எச்சரிக்கையுடன் இருந்திருக்கக் கூடும் என்ற கருத்தை வழங்குகின்றது.

## 2.2 ஆராய்ச்சியின் அமைவிடம்

இலங்கையில் உள்ள மிகவும் அழகான கடற்கரைகளின் சிலவற்றுக்கு இல்லமாக கிழக்கின் கடற்கரைப் பகுதி விளங்குகிறது என்பதை வழங்குகையில், அபரிதமான ஆற்றலளவுடன் முக்கியமானதொரு துறையொன்றாக சுற்றுலாத்துறை எப்பொழுதுமே கருக்கொள்ளப்படுகின்றது. உண்மையில், 1967இலேயே, முதலாவது சுற்றுலாத்துறை அபிவிருத்தி பெருந்திட்டத்தினால் (1967-1976) அடையாளங் காணப்பட்ட ஐந்து உல்லாசத்தளப் பிராந்தியங்களின் பகுதி ஒன்றாக கிழக்கின் கடற்கரை விளங்குகின்றது. திருகோணமலையின் நிலாவெளியிலிருந்து, அம்பாறை மாவட்டத்தின் பாணம வரையில் நீளுகின்ற கடற்கரை துண்டாக இருப்பதனால் 'கிழக்குக் கரையோர உல்லாசத்தளங்களிலான பிராந்தியமாக' இந்தத் திட்டம் அடையாளங்கண்டது.

2008இல் அதிகளவில் போட்டியிடப்பட்ட கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களுடனும், அதைத் தொடர்ந்த சிவில் நிருவாகத்தின் மீள்-தாபித்தலுடனும் பிரதானமாக கரையோர வலயத்தின் நெடுகிலும் மாகாணத்தின் சுற்றுலாத்துறையை விருத்திசெய்வதற்கான சாத்தியவளமானது கொள்கைச் செயற்களத்தினுள் மீள்-தோன்றியது. கிழக்கை விருத்திசெய்வதற்கான நடக்கப்போகின்ற முன்னேற்றத்திற்கு சமிக்ஞை காட்டுவதற்காக நகினஹிர உதாவ (கிழக்கின் உதயம்) என்ற சுலோகத்தை அரசாங்க அதிகாரிகள் பிரசித்தப்படுத்தினர். 2008க்கு முன்னர் கூட, 2004இல் சுனாமியினால் முழுமையாக அழிந்து போன பாசிக்குடாவில் உள்ள சுற்றுலாத்தொழிற்துறையை மீள்-அபிவிருத்தி செய்வதை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்பித்திருந்தது. எனினும், 2008இன் பின்னரே, பாசிக்குடாவில் உல்லாசத்தள அடிப்படையிலான விசேட சுற்றுலாத்துறை வலயமொன்றை (STZ) விருத்திசெய்வதற்கான அதன் திட்டத்தை மத்திய அரசாங்கம் புதுப்பித்தது.

பாசிக்குடா விசேட சுற்றுலாத்துறை வலயத்தின் அபிவிருத்தி, அந்நேரத்தில் திவிநெகும சட்டமூலம் (2013 ஜனவரியில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது) போன்ற வாதத்திலான அரசியல் மாற்றங்களின் சூழமைவில் இடப்பட வேண்டும். இது 'வாழ்க்கையை உயர்த்தும்' நோக்கத்தில், திவிநெகும திணைக்களம் என்ற ஒரு நிறுவனத்தின் கீழ் அண்ணளவாக 81 அரசாங்கத் திணைக்களங்களை ஒன்றிணைப்பதற்கு முயற்சித்தது என்பதுடன், அவ்வாறாக இலங்கையின் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை மீறி, மாகாண சபைப் பணிகளின் செயல் எல்லையினுள் ஊடுருவியது. தரவுச் சேகரிப்பு நேரத்தில் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் சகோதரர் பசில் ராஜபக்ஷவின் தலைமையிலான திவிநெகும திணைக்களம் கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி விடயங்கள் மீது இறுக்கமான கடிவாளத்தைக் கொண்டிருந்தது. அபிவிருத்தி முன்னுரிமைகளை உருக்கொடுப்பதில் அவர்களது வகிபங்கு மீது கூட இறுக்கமான கட்டுப்பாடுகளை மத்திய அரசாங்கம் சுமத்தியுள்ளதாகவும், அத்துடன் அவர்களது ஒவ்வொரு நடவடிக்கையும் நுணுக்கமான கண்காணிப்புக்கு உட்பட்டிருப்பதாகவும் எம்மிடம் சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசாங்கம் சாராத செயற்பாட்டாளர்களும் அத்துடன் உள்ளூராட்சிச் சபை அலுவலர்களும் நம்பகமாகத் தெரிவித்தனர். குறிப்பிடுவதற்கு தேவையின்றி, தரவுச் சேகரிப்பு நேரத்தில் சிவில் சமூக ஈடுபாட்டுக்கான இடைவெளி சகல வேளையிலும் குறைந்தே இருந்தது.

[2]விசேட சுற்றுலாத் துறை வலயம் தொடர்பான கோட்பாடு பெரும் எண்ணிக்கையான கரையோரத்திலான சுற்றுலாத்துறை ஸ்தாபிதங்கள் அழிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டு சுனாமியின் பிற்பாடு வரை உத்தியோகபூர்வ மொழியின் மேற்பரப்பில் இருக்கவில்லை எனினும் அரசாங்கத்தின் விசேட சுற்றுலாத்துறை வலயத்தை ஸ்தாபிக்கும் திட்டம் 1999-2000 இற்கு பிந்திய திகதியிடப்பட்டது (சமரநாயக்க2012:750). அண்மைக்காலம் வரை பெந்தோட்டையைத் விதிவிலக்காக்கி தெற்கு மற்றும் மேதகு பிராந்தியங்களில் இடம்பெற்ற அனைத்து சுற்றுலா அபிவிருத்திகளும் திட்டமிடப்படாதவையாகும்.எதையும் கருத்திலெடுக்காத வகையில் வியாபார முயற்சியாண்மையாளர்களால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டன. சிறிது காலத்தின் பின்னர் தீவிரமான சூழல் பிரச்சனைகளை சிறிதளவு காலத்திலேயே தோற்றுவித்த தாமாகவே திட்டமிட்ட உட்கட்டுமான வசதிகளை - வீதிக்கான அணுகல் கழிவுநீர் மற்றும் கழிவுப் பொருள் அகற்றும் முறைகள் மின்சாரம் நீர் மற்றும் தொடர்பாடல் - இந்த ஸ்தாபிதங்கள் கொண்டிருந்தன. அத்தகைய பிரச்சினைகள் மோசமான வீதிகள், மலசலகூடக் குழிகள் மற்றும் குப்பைக்குழிகளின் வெடிப்புக்கள், சுகாதாரமற்ற கழிவகற்றல் போன்றவற்றையும் உள்ளடக்கியிருந்தன. (அதே கற்கை.: 751). இத்தகைய பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் வகையில் குறிப்பிட்ட உட்கட்டுமானங்களை மேம்படுத்தும் வகையில் தெற்கு மற்றும் மேற்கு பிராந்திய கரையோரங்களில் இலங்கை சுற்றுலா சபை (SLTB) பணிபுரிந்தது. சர்வதேச முகவராண்மைக்கான ஜப்பான் வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் போன்றவற்றின் நிதி அனுசரணை மற்றும் உலக சுற்றுலா நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் தெற்கு மற்றும் மேற்கு பிராந்தியங்களில் திட்டமிட்ட சுற்றுலா வலயங்களை நடைமுறைப்படுத்தும் விரிவான திட்டமொன்றை SLTB2000 ஆம் ஆண்டு நவம்பரில் பட்டயமிட்டது. (அதே கற்கை.: 752).

யுத்தத்திற்குப் பிந்திய சகாப்தத்தில் சுற்றுலாத்துறையினுள்ளும் மற்றும் பிரயாணச் சேவைகளினுள்ளும் இராணுவத்தின் துரிதமான சூறையாடுதலே சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் ஆரம்பக் கட்டங்களின் முக்கியமான உண்மை நிலையொன்றாகும். இது தேசியப் பாதுகாப்பு நிலையினுள் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலைத் தழுவுவதற்கு இயலச் செய்ததுடன் (சேனாரத்ன, 2014), அதனில் சிவிலியன் வாழ்க்கையின் இராணுவமயமாக்கலும், கருத்து வேறுபாடு மீதான கடுமையான நடவடிக்கையும் ஊழலுக்கான பூரணமான சூழலொன்றை உருவாக்கியது. சுற்றுலாத்தொழிற்துறையில் இராணுவத்தின் சம்பந்தமானது அவர்களது வர்த்தகமயப்படுத்தலுக்குச் சமாந்தரமாக மீளக்கிளர்ந்தெழ முயலும் சிங்களப் பௌத்த தேசியவாதத்தின் ஒன்றினால் இலங்கையில் இயற்கையான வாழிடங்களைப் பாழாக்குவதை இயலச்செய்ததுடன், இந்த சூழமைவுசார்ந்த மாற்றங்கள் யுத்தத்திற்குப் பிந்திய சுற்றுலாத்துறை பொருளாதாரத்தின் மீள்-சீரமைத்தலுக்கு அடிப்படைக் காரணமாகவுள்ள அரசியல் தளத்தையும் வழங்கின.

பாசிக்குடா விசேட சுற்றுலாத்துறை வலய ஊல்லாசத்தளப் பகுதியில் இலங்கை சுற்றுலாத்துறைச் சபையின் (SLTB) உரித்துரிமை 1972இன் காணி சீர்திருத்தங்களுக்குப் பிற்பட்டதாகும் (SLTDA, 2014). காணிக்கான சட்டபூர்வ உரிமையை அரசாங்கம் கொண்டுள்ள அதேவேளை, யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் உல்லாசத்தளங்களை விருத்திசெய்வதற்கான பங்கெடுப்பிலான நடைமுறையொன்றை அது பின்பற்றவில்லை. அரசாங்கத்தின் நடவடிக்கை மீது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடத்தின் உறுப்பினர் ஒருவர் பின்வரும் விதத்தில் பிரதிபலித்தார்: *'காணியை சுற்றுலாத்துறை சபை உரித்தாகக் கொண்டிருந்தாலும் கூட, கிழக்கு மாகாணத்திலேயே காணி உள்ளது. அவர்கள் எந்தளவுக்கு கிழக்கு மாகாண சபையை சம்பந்தப்படுத்தினார்கள்? உல்லாசத்தளங்கள் எவ்வாறு காணியை பெற்றன என்பன பற்றி சந்தேகங்கள் உள்ளன'* (நேர்முகங்காணல், 7 மார்ச், 2015). உல்லாசத்தளங்களைக் கட்டுவதற்கு முன்னதாக, பெருமளவு பங்காளர் ஆலோசனைகள் இருந்ததாக வாழைச்சேனையில் உள்ளூராட்சி சபையின் சம்பந்தப்பட்டவர்களுடனான நோக்குக் குழு கலந்துரையாடலில் வெளிப்பட்டது. SLTB இனால் கூட்டப்பட்ட இந்தக் கூட்டங்களில், உல்லாசத்தளங்களின் உத்தேசமான முதலீட்டாளர்கள், உள்ளூராட்சிச் சபையின் பிரதிநிதிகள், உல்லாசத்தளப் பகுதியின் அபிவிருத்தியின் விளைவொன்றாக வாழ்வாதாரங்கள் ஆபத்தாக விளங்கிய பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் என அதிகளவானோர் பங்கெடுத்தனர். இந்தக் கூட்டங்களில் பங்கெடுத்த உள்ளூராட்சி சபையின் பிரதிநிதியொருவரின் கூற்றுப்படி, அபூர்வமாகவே யாரேனும் சமூக உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர்.

இந்த ஆய்வின் போது, முதலீட்டாளர்களைத் தெரிவுசெய்யும் நடைமுறையிலும், உல்லாசத்தளங்களைக் கட்டுவதற்கு ஒதுக்குவதிலும் ஒன்றில் வெளிப்படைத்தன்மையோ அல்லது பாசிக்குடாவில் உள்ள அரசாங்கச் செயற்பாட்டாளர்களின் பங்கெடுப்போ சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்பதை நாம் கண்டறிந்தோம். அரசாங்க அலுவலர்களுடனான எமது நேர்முகங்காணல்களின் ஒவ்வொன்றிலும், முதலீட்டாளர்களைத் தெரிவுசெய்வது மீதான தகவலை எம்மிடம் பங்கிடமுடியுமா என நாம் விசாரித்த போது கிடைத்த பதில்,*'அது பொதுசன செயற்பாடுகளுக்கு விடுவிக்கப்படமுடியாது'*என ஒரே மாதிரியானதாகும். உல்லாசத்தள உரிமையாளர்களும் அதே அணுகுமுறையை பின்பற்றியதுடன், நாம் *'நிறுவனத்தின் இரகசியமான தகவலைக் கேட்கின்றோம்'* என எம்மிடம் தெரிவித்தார்கள். அவ்வாறாக, தெரிவுகள் செய்யப்பட்டமை மீதான அடிப்படை மீதானதும் அத்துடன் உத்தியோகபூர்வ ஆவணங்களில் கைச்சாத்திட்டுள்ள அரசாங்கத்தினதும், தனியார் தரப்புக்களினதும் தனிப்பட்டவர்கள் மீதானதுமான உத்தியோகபூர்வத் தகவல் தொடர்ந்துமே கிட்டவில்லை. அரசியல் ஆதரவின் மீதான அடிப்படையிலேயே உல்லாசத்தளங்களுக்கான காணியின் உரித்துரிமை விளங்கியதாக சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களுடனான



கல்குடா கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு பாசிக்குடா சார்ந்தாகும். கிழக்கு கடற்கரைப்பிரதேசத்தில் அமைந்துள்ள இப் பகுதி சிவில் யுத்தத்தின் போது ஓர் அனுகூலமற்ற சூழ்நிலையில் விளங்கியது.

நேர்முகங்காணல்கள் வெளிப்படுத்தின: *'இந்தப் உல்லாசத்தளங்கள் பசிலுக்கும்(ராஜபக்ஷ) மற்றும் கோதாவுக்கும் (கோத்தபாய ராஜபக்ஷ - முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் சகோதரர்களில் ஒருவர்) பங்கிடப்பட்டதுடன், அதை வசதிப்படுத்துவதற்கு கருணா இங்கிருந்தார்'* என சர்வதேச அரச சார்பற்ற தாபனமொன்றைப் பிரதிநிதிப்படுத்தும் மட்டக்களப்பைத் தளமாகக் கொண்ட அரச சார்பற்ற தாபனத்தைச் சேர்ந்த பதிலிறுப்பாளர் ஒருவர் தெரிவித்தார் (நேர்முகங்காணல், 26 ஜனவரி, 2015).

பிரதேச அல்லது மாவட்டச் செயலகங்களில், உள்ளூராட்சிச் சபைகளில் அல்லது மாகாண சபையில் கூட உள்ள உள்ளூர் அலுவலர்களுடன் அல்லது பிரதிநிதிகளுடன் சிறிதளவு ஆலோசனைகளுடனேயே முதலீட்டாளர்களுக்கான (உல்லாசத்தளங்களுக்கு) தெரிவுக்கான நடைமுறை மத்திய அரசாங்க மட்டத்தின் உயர்நிலையில் இடம்பெற்றது. கொழும்பில் SLTDA தலைமையில் பெருமளவு அரசாங்க முகவராண்மைகள் மத்தியில் முதலீட்டாளர்களுக்கான பூர்வாங்க மதிப்பாய்வு இடம்பெற்றதுடன், இது நகர அபிவிருத்தி அதிகாரசபை, முதலீட்டுச் சபை, மத்திய சூழல் அதிகார சபை, கரையோரப் பேணல் திணைக்களம், மற்றும் வனவாழ்வுப் பேணல் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கியிருந்தது. இந்த ஆலோசனையில் கலந்துகொள்வதற்கு மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் (அதாவது மாவட்டஅத்துடன் /அல்லது பிரதேச செயலகங்களின் அலுவலர்கள்) ஊக்கமளிக்கப்பட்டதாக மேற்படி முகவராண்மைகளின் ஒன்றின் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்ட அதேவேளை, அதன் பின்னரான எமது நேர்முகங்காணல்கள் ஏதேனும் அத்தகைய ஈடுபாட்டினைப்பற்றி வெளிப்படுத்தவில்லை.

மதிப்பாய்வு முடிவடைந்து குறிப்பிட்ட முதலீட்டாளர்கள் தொடர்பில் பரிந்துரைகள் செய்யப்பட்டதன் பின்னர் அவற்றுக்குரிய திட்ட முன்மொழிவுகளானவை பதிவு செய்யும் செயன்முறைகளை நிறைவேற்றுவதற்காக உள்ளூர் அதிகாரசபைகளுக்கு அனுப்பப்படும் என பிரதேச செயலக அலுவலர்களுடனான நேர்காணல்களின் போது வெளிப்படுத்தப்பட்டது. சுற்றுலாத்துறை அபிவிருத்தியானது மத்திய அரசாங்கத்தின் ''பசுந்தரை/புற்றரை'' என்பதுடன், தீர்மானமெடுக்கும் நடைமுறையில் உள்ளூராட்சி சபைகள் (மத்திய அரசாங்கத்தின் செயற்கருவியின் நோக்கெல்லையின் கீழ் அவை வந்தாலும் கூட) உள்ளடக்கப்படவில்லை என்பதே வாழைச்சேனையில் பெருமளவு மத்திய அரசாங்கப் பிரதிநிதிகள் பரிமாறும் ஒரு கருத்தாகும்: *'பொதுவாக இங்கு வெற்றிகரமான சுற்றுலாத்தொழிற்துறையொன்றை கொண்டிருக்குமுகமாக பகுதியை அபிவிருத்தி செய்வது எமக்கு அவசியமாகும். உதாரணமாக,தகுந்த ஹொட்டேல் பயிற்சிப் பாடசாலை ஒன்றைக் கொண்டிருப்பதற்கு, தொழிற்துறைக்கு ஆதரவளிப்பதற்கு உள்ளூர் உள்கட்டுமானங்கள் மிகவும் முக்கியமானதாகும். ஆனால், இந்த விடயங்களில் எம்முடன் ஆலோசனை நடத்தப்படுவதில்லை'* என நடைமுறையுடன் தனது அதிருப்தியை வெளிப்படுத்தி, வாழைச்சேனையில் உள்ள பிரதேச செயலக அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

எனவே, செல்லுமிடமொன்றாக பாசிக்குடா ஒரு மாறுபட்ட பண்புகளைக் கொண்ட யுத்தத்திற்குப் பிந்திய தோற்றப்பபடாகும். 'பண்பு கெடாததும்' அத்துடன் 'நாசமாக்கப்படாததுமான' கடற்கரைகளில் யுத்தத்திற்குப் பிந்திய விவரணங்களும், உலகளாவிய சுற்றுலாத்துறையின் அரசியல் பொருளாதாரத்தினுள் அவற்றின் ஒன்றிணைப்பும் சமூக மற்றும் பொருளாதார உறவுகளை உருக்கொடுத்து வன்முறையினதும், மோதலினதும் மற்றும் இராணுவமயமாக்கலினதும் பொருளாதாரத்திற்கு முகமூடியைப் போடுகின்றது. ஆயிரக்கணக்கானோர் தொடர்ந்துமே இடம்பெயர்ந்தவர்ளாக, உரிமைகள் பறிக்கப்பட்டவர்களாக அத்துடன் இராணுவமயமாக்கலின் உயர் மட்டங்களுக்கு ஊறுபடத்தக்கவர்களாக (இலகுவில் பாதிப்படையக்கூடியவர்களாக) இருந்த அதேவேளை கூட, யுத்தத்தின் முடிவின் பின்னர் மிக விரைவிலேயே உல்லாசத்தளமொன்றாக பாசிக்குடா வியாபாரத்திற்காக திறந்திருந்தது. இந்த அர்த்தத்தில், 'சுற்றுலாத்துறை இலக்குகளின் மேலோட்டமானதும், பொருள்சார்ந்ததுமான உற்பத்தி - சுற்றுலாத்துறையின் நடைமுறையின் தீவிரமானதொரு நடைமுறையாகும் (Hyndman, 2015, citing Ojeda, 2013 on Colombia) என்பதுடன், யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையில் பாசிக்குடாவையும், வேறு உல்லாசத்தளங்களையும் உற்பத்தி செய்வதற்கு பலதரப்பட்ட கடன் வகைகளை ஒன்று சேர்க்கும் நிதிசார் நடைமுறையுடன் கைகோர்த்துச் சென்றது.

[3]விநாயகமூர்த்தி முரளிதரன் அல்லது 'கேணல் கருணா' LTTE இன் கிழக்கு இராணுவ கட்டளைத்தளபதிஇ LTTE இலிருந்து பிரிந்து பின்னாளில் கிழக்கில் ஆட்சி எதிர்ப்பிக்கான கிளர்ச்சிக்கு எதிரான அரசாங்கத்தின் பிரச்சாரங்களில் முக்கியமான அங்கமான தமிழ் மக்கள் விடுதலை முன்னணியை (TMVP). பின்னர் TMVP மற்றும் அரசாங்கத்தின் சார்பான முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் ஆளும் கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சி 2008 இல் மாகாண சபைத் தேர்தல்களில் வெற்றிபெறக்கூடியதாக இருந்தது. 2008 இல் கருணா பாராளுமன்றத்தின் ஆசனமொன்று அளிக்கப்பட்டு நியமிக்கப்பட்டார்.

# 3 சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் அரசியல் மற்றும் தற்சார்புடைய பொருளாதாரம்

## 3.1 வர்த்தகமயமாக்கப்பட்ட விருந்தோம்பல்

அதன் துல்லியமானதன்மையினால் சுற்றுலாத்துறையானது பாவனையாளர்களின் பலமான உணர்வுபூர்வமான தாக்கங்களை வரவழைக்கும் தகுதியைக் கொண்டுள்ளதுடன், உண்மையிலேயே அடிக்கடி இந்த ஆற்றலளவுக்கு ஏற்ப பொருள்விளக்கம் அளிக்கப்படுகின்றது. குறிப்பாக சுற்றுலாத்துறையின் உளப்பாங்கு பரிமாணத்தைப் புரிந்துகொள்வதற்கான பொதுவான வழியொன்றாக விருந்தோம்பல் விளங்கியுள்ளது. சுற்றுலாத்துறையின் சூழமைவில் விருந்தோம்பல் பற்றிப் பேசுகையில் Hemmington (2007) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:'சேவை விநியோகத்தை வாடிக்கையாளர்கள் வாங்குவதில்லை, அவர்கள் அனுபவங்களை வாங்குகிறார்கள். அவர்கள் சேவைத் தரத்தை வாங்குவதில்லை, அவர்கள் நினைவுகளை வாங்குகிறார்கள்; அவர்கள் உணவையும், குடிபானத்தையும் வாங்குவதில்லை, அவர்கள் உணவு அனுபவங்களை வாங்குகிறார்கள்; அவர்கள் நிகழ்வுகளை அல்லது வைபவங்களை வாங்குவதில்லை, அவர்கள் சந்தர்ப்பங்களை வாங்குகிறார்கள்.'

விருந்தோம்பலின் இந்தக் கருத்தில் முழுவதும் வெளிப்படையாக விளங்குவது பரிமாற்றத்தின் பொருளாதாரமொன்றாகும் (Westmoreland, 2008), அதாவது ஒருவர் சுற்றுலாத்துறைக்கு ஒன்றையுமே வழங்குவதில்லை, ஆனால் 'வர்த்தகமயப்படுத்தப்பட்ட விருந்தோம்பலை' வழங்குகிறார் (Cohen,in Scott, 2006: 105). அப்படியெனில் சுற்றுலாத்துறையின் சூழமைவில் விருந்தோம்பலானது, சந்தைப் பரிமாற்றத்தினால் மத்தியஸ்தப்படுத்தப்பட்ட ஒரு உறவு என்பதுடன், அதன் விடயம் அதிகளவில் அந்நியமானதல்ல, ஆனால் பதிலாக 'விருந்தினர்' ஒருவர் பாவனையாளர் என மறைக்கப்பட்ட நிலையில் மென்மையாகக் குறிப்பிடப்படுகின்றார்.

இலங்கையில், அந்நியச் செலவாணியை ஈட்டுவதற்காக சுற்றுலாத் தொழிற்துறையின் ஆற்றலளவு அரசாங்கக் கொள்கைக் கருத்தாடலில் வெளிப்படையானதாகும். 2011-2016 சுற்றுலாத்துறை அபிவிருத்தி மூலோபாயமானது, 'பொருளாதாரத்தில் மிகப் பெரிய அந்நியச் செலாவணி ஈட்டுனராக 2020க்குள் இலங்கையின் சுற்றுலாத்துறையை உருமாற்றுவதே அரசாங்கத்தின் தொலைநோக்காகும்'(பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, 2011:24) எனக் குறிப்பிடுகின்றது. வெளிப்படையானதல்ல என்ற போதிலும், அந்நியச் செலாவணி ஆதாயங்களுக்காக சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான உயரிய நோக்கமானது உயர் பெறுமதியிலான அந்நிய நாணயத்துடனான (அதாவது அமெரிக்க டொலர்கள்,யூரோக்கள்,ஸ்ரேலிங்பவுண்ட்ஸ் போன்ற) நாடுகளிலிருந்து வரும் விருந்தினர்கள் வேறு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அல்லது உள்ளூர்வாசிகளுக்கு மேலாக முன்னுரிமைப்படுத்தப்படுகிறார்கள்.

தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்காக சுற்றுலாத்துறையைச்சார்ந்துள்ள ஆற்றலளவு இன்னொரு காரணமாகும். இது இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியமான துறையொன்றாகக் கருதப்படுகின்றது. 2011-2016 சுற்றுலாத்துறை அபிவிருத்தி மூலோபாயமானது, 'தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதிலும், முக்கியமாக சிறிய, நடுத்தர அளவிலான வியாபார முயற்சித்துறையில் பலதரப்பட்ட பொருளாதாரச் செயற்பாடுகளின் ஊடாக செல்வத்தைப் பங்கிடுவதிலும் அத்துடன் ஒரு புறத்தில் நுண்-வியாபார முயற்சிகளையும், மறுபுறத்தில் பாரிய அளவிலான கூட்டாண்மைத்துறையையும் இணைப்பதற்கு இயலாதிருப்பதற்கான சிறிய, நடுத்தர அளவிலான வியாபார முயற்சிகளின் அனுகூலத்தை எடுப்பதிலும் சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் விளைபயனை அரசாங்கம் அங்கீகரிக்கின்றது' (பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, 2011:4) எனக் குறிப்பிட்டுள்ளது. சுற்றுலாத்துறையில் தொழிலாற்றுகின்ற ('நேரடியான தொழில்' எனக் கருதப்பட்ட) நபர்களின் எண்ணிக்கை 2013இல் 112,550 தொகையாகும்; முன்னைய ஆண்டு 67,862 நபர்களை (65.9% அதிகரிப்பு) கொண்டிருந்தது.

2011-2016 சுற்றுலாத்துறை அபிவிருத்தி மூலோபாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 2009இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் உடனடியான காலத்தில் சுற்றுலாத்துறை மீதான அரசாங்கக் கொள்கையை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்திய முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடமிருந்து செய்தியானது சிறிய, நடுத்தர அளவிலான வியாபார முயற்சித் துறையில் பலதரப்பட்ட பொருளாதாரச் செயற்பாடுகளின் ஊடாக தொழிலைத்

தோற்றுவிப்பதும், செல்வத்தைப் பங்கிடுவதுமான அதன் எடுகோளிலான 'பெருகுகின்ற தாக்கத்தை' வழங்குகையில், அபிவிருத்தியின் முக்கியமான துறையொன்றாக சுற்றுலாத்துறையில் மூலதனமிடுவதில் அரசாங்கத்தின் அக்கறையையும், அர்ப்பணிப்பினையும் உறுதிப்படுத்துகின்றது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற முக்கியமான துறைகளில் ஒன்றாக சுற்றுலாத்துறை அடையாளம் காணப்பட்டுள்ளது. மகிந்த சிந்தனையின் உள்மையக் கோட்பாட்டின் பிரகாரம், சுற்றலாத்துறை அபிவிருத்தி மூலோபாயத்தின் இறுதியான பயனாளியாக நாட்டின் மக்கள் அதாவது, அரிசியையும், மரக்கறிகளையும் மற்றும் பழங்களையும் விநியோகிக்கும் விவசாயிகள், நாளின் மீன்பிடியை விநியோகிக்கும் மீனவர்கள், நினைவுச்சின்னங்களைத் தயாரிக்கும் கைவினைஞர்கள், வருகைதருவோர்களுக்கு வழிகாட்டும் வழிகாட்டிகள், புதுமையான இலங்கையின் புன்னகையுடனும், விருந்தோம்பலுடனும் தொழிற்துறையில் சேவையாற்றும் இளம் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர் விளங்க வேண்டும். 2016க்குள் 500,000 நேரடியானதும், மறைமுகமானதுமான தொழில்களை உருவாக்கும் தகுதியை இந்தத்துறை கொண்டிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது (பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, 2011).

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நன்மைகளை முனைவுபடுத்துவதில் ஐந்து வருடங்களுக்கு பெருமளவு நோக்கங்களை 2011-2016 சுற்றுலாத்துறை அபிவிருத்தி மூலோபாயம் சுருக்கமாக விபரிக்கின்றது. அவற்றின் மத்தியில் (i) சுற்றுலாத்துறை தொடர்பிலான தொழிலை அதிகரித்தல் மற்றும் (ii) சமூகத்தின் பாரிய குறுக்குவெட்டிலான பிரிவினருக்கு சுற்றுலாத்துறையின் பொருளாதார நன்மைகளைப் பங்கிடுதல் ஆகியன சுற்றுலாப் பயணிகளின் வருகைதரல்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், வெளிநாட்டிலான நேரடியிலான மூலதனத்தைக் கவர்வதற்கும் இரண்டாவது நிலையாக மட்டுமே விளங்குகின்றன (பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, 2011:4).

2011-2016 சுற்றுலாத்துறை அபிவிருத்தி மூலோபாயத்தின் நோக்கங்களைச் சாதிக்குமுகமாக, ஒரு தொகையிலான மூலோபாயத்திலான முன்னுரிமைகளை அரசாங்கம் வகுத்தமைத்தது. இது 'சுற்றுலாப் பயணிகளின் சரியான வகையைக் கவர்வதை' உள்ளடக்கியிருந்தது (பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, 2011:5) என்பதை உள்ளடக்கியிருந்தது. 'குறைந்த ஆகுசெலவிலான சுற்றுலாத்துறையிலிருந்து தொலைவில்' என்பதனை வழிநடத்தும் வகையில், அதிகளவு செலவழிக்கும் சுற்றுலாப்பயணிகளுக்கு ஈடுசெய்வதற்கான தொழிற்துறையொன்றை விருத்திசெய்வதை நோக்கிச் செல்வதற்குமான அதன் முயற்சிகளில் அரசாங்கம் வெளிப்படையாக இருந்தது; அடுத்த 10 ஆண்டுகளின் போது நாளொன்றுக்கு சுற்றுலாப்பயணியின் செலவழிக்கும்தன்மை 200 அமெரிக்க டொலர்களுக்கு மேலாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது (அதே கற்கை: 12.26). இந்த நோக்கத்திற்காக பின்வரும் துறைகள் மீது நோக்கினைக் கொண்டிருப்பதற்கு கைத்தொழில்/தொழிற்துறை செயற்பாட்டாளர்களை மூலோபாயம் வலியுறுத்துகின்றது:

1 உயர்ந்தளவில் செலவழிப்பவர்களின் கவனத்தைக் கவர்கின்ற சுற்றுலாத்துறை உற்பத்திப்பொருட்கள்

2 உயர் தரத்திலான இடவசதி மற்றும் சேவைகள்

3 பெறுமதிசேர்ப்பு மற்றும் உற்பத்திப் பொருள்களை துண்டு துண்டாக்குதல்

மேற்படி துறைகளில் மூலதனமிடுவதன் மூலம், 'உலகின் மிக உயர்ந்தளவிலான பொக்கிஷத்திலானதும், பச்சைப் பசுமையானதுமான தீவகமாக இலங்கையை நிலைப்படுத்துவதற்கும், உயர்ந்தளவில் செலவழிக்கும் சுற்றுலாப்பயணிகளைக் கவர்வதற்கும்' அதன் தொலைநோக்கினை அரசாங்கம் பரிமாறிக்கொள்கிறது (பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, 2011:24). 'சரியான வகையிலான சுற்றுலாப் பயணிகள்' என்பதன் கருத்துப் பற்றி உத்தியோகபூர்வ மொழியில் குறைந்தளவிலேயே வெளிப்படையானது என்ற போதிலும், இலங்கையின் சுற்றுலாத்தொழிற்துறை அதன் விருந்தோம்பலை வழங்கும் விதத்தில் விரும்பத்தக்க வாடிக்கையாளர் தளமாக மேற்கத்தைய நாடுகளிலிருந்து அத்துடன் /அல்லது செல்வந்த மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பணக்கார சுற்றுலாப்பயணிகளைச் சம்பந்தப்பட்டவர்கள் மனதில் கொண்டுள்ளார்கள் என்பது ஓரளவுக்கு வெளிப்படையானதாகும். இருந்தும் பிரத்தியேக உல்லாசத்தளங்கள், ஆடம்பரக் கப்பல்கள், கடைத் தொகுதியிலான ஹொட்டேல்கள் மற்றும் தோட்டஞ் சூழ்ந்த மனைகள் (villas) போன்ற அதிகளவில் செலவழிக்கும் வாடிக்கையாளர்களை இலக்குப்படுத்தும் சூழல் நட்புறவிலான ஆடம்பரத்திலான அனுபவங்கள் ஐந்து வருட மூலோபாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் எனத் தோன்றுகின்றது. வெளிநாட்டு வருகைதருவோர்களுக்கு சலுகை காட்டுகின்ற அனுபவங்களை உருவாக்கும் நடைமுறையில் உள்நாட்டுச் சுற்றுலாப்பயணிகள் உதாசீனம் செய்யப்படலாகாது என மூலோபாயம் குறிப்பிடுகின்ற அதேவேளை, உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளுக்கு புறம்பான இடைவெளிகளின் அணுகுமுறை ஒன்றை அது உச்சரிக்கின்றது. வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளுக்கு ஈடுகொடுப்பதற்காக உல்லாசத்தளங்கள், தோட்டஞ் சூழ்ந்த மனைகள் மற்றும் உடல் நலக்குளிப்பு (spas) ஆகியன

உள்ளதுடன், அரசாங்கத்திணைக்களங்களுக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள், அரசாங்கத்தினால் நிருவகிக்கப்படும் விருந்தினர் இல்லங்கள் ஆகியன உள்ளூர்வாசிகளுக்கு ஒதுக்கப்படுகின்றன (பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, 2011:22)

## 3.2 சுற்றுலாத்துறை தொழில் உருவாக்கம்

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர், உலகளாவிய ரீதியில் கவனத்திலெடுக்கப்பட்ட விடயம் ஒன்றாக விளங்கிய சுற்றுலாத்துறையானது அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல்களின் உச்சிக்கு அதன் வழியைத் துரிதமாக வகுத்துக்கொண்டது. ஏனெனில் அது ‘ தொழிற்துறைக்குப் பிந்திய சமூகத்தின் அம்சங்களைக் குணவியல்புபடுத்துவதுடன், எதிர்காலத்திற்கு பாரிய போக்குகளினுள் பூரண அறிவையும் முன்வைத்தது’ (Eadington and Redman, 1991: 41). இதன் தொடர்ச்சியாக சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்புக்கு இணைப்பினைக் கொண்டிருந்த உலகளாவிய அறிவு அதிகாரப்படி நிலையில் விளங்கியவர்கள் தமது தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் முன்னுரிமைத்துறையொன்றாக சுற்றுலாத்துறையை உள்ளடக்குவதற்கு அபிவிருத்தியடைந்து வரும் தேசங்களுக்கு ஊக்கமளித்தனர். உதாரணமாக, ஐ.நா. முகாமையினுள் மட்டும் ஐ.நா. வர்த்தக, அபிவிருத்தி ஆணைக்குழு, உலகச் சுற்றுலாத்துறை தாபனம் போன்ற முகவராண்மைகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சுற்றுலாத்துறையின் முக்கியத்துவத்தை மேம்படுத்துவதை ஆரம்பித்தன. சுற்றுலாத்துறைக்கான கிராக்கியில் மிகத்துரிதமான அதிகரிப்பானது நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன் பொருளாதார, அரசியல், சமூக மற்றும் சூழல் செலவுகளின் அதிகளவு கவனமான பகுப்பாய்வு இன்றியதொழிற்துறையொன்றாக சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதை முன்னேற்றுவதற்கும், அதில் மூலதனமிடுவதற்கும் பெருமளவு வர்த்தக தொழில்முயற்சிகளுக்கும், அரசாங்கங்களுக்கும் வழிகாட்டியுள்ளன (de Kadt, 1979; Timothy, 1999; Tosun and Jenkins, 1999; Tosun and Timothy, 2001).

நேரடியானதும், மறைமுகமானதும் அத்துடன் இயக்காற்றலிலானதுமான விளைபயன்களைச் சுற்றுலாத்துறை இன்றியமையாததாக்குவதாக அடிக்கடி விவாதிக்கப்படுகின்றது . தேர்ச்சிதிறனடைந்ததும், தேர்ச்சித்திறனடையாததுமான சரீரஉழைப்பின் சார்புரீதியில் உயர்ந்தளவிலான விகிதாசாரமொன்றைச் சுற்றுலாத்துறை பயன்படுத்துவதனால், அதன் நேரடியிலான விளைபயன்கள் அதன் தொழில் உருவாக்கத்திற்குக் கட்டுப்பட்டுள்ளது (Mitchell and Faal, 2006). வீழ்ச்சியடைகின்ற விவசாயத்திலிருந்து மிதமிஞ்சிய சரீர உழைப்பை உறிஞ்சுவதற்கு சுற்றுலாத்துறை இயலக்கூடியதாக இருப்பதனால், தமது பொருளாதாரங்களின் கட்டமைப்பிலான உருமாற்றத்தினை மேற்கொள்கின்ற நாடுகளுக்கு இது குறிப்பிட்ட விதத்தில் கவர்ச்சிகரமானதாகும். தொழிலை உருவாக்குவதற்கான ஆற்றலளவு அனேகமாக சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு பிரதான காரணமாக இருக்கின்ற போதிலும், உண்மையான தொழில் உருவாக்கத்தின் மீது போதியளவு தகவல் இல்லை என விவாதித்து, இது தொடர்பில் சுற்றுலாத்துறையின் ஆற்றலளவில் கொள்கை வகுப்போர்களின் தன்னம்பிக்கையை பலருமே பிரச்னையாக்கியுள்ளனர் (Hall, 2000; Hudson and Townsend, 1993; Leiper, 1999).

2011-2016 இலங்கைச் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மூலோபாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெறுமனே எதிர்காலத்தில் தொழிற்துறை உருவாக்கவுள்ள தொழில்களின் எண்ணிக்கை மீது - முற்கணிப்புகள் அனேகமாக நுட்பமானவை என்பதுடன், பெருமளவில் அனுமானங்கள் மீது அடிப்படையைக் கொண்டவை- சுற்றுலாத்துறையில் மூலதனமிடுவதற்கான அவர்களது தீர்மானங்களைக் கொள்கை வகுப்போர் அடிப்படையாகக் கொண்டிருப்பது பொதுவானதாகும். எனினும், உத்தேசமான ஊழியர்களின் ஊதியங்கள், தொழில் பாதுகாப்பு, பேரம்பேசும் அதிகாரம், தொழில் வாய்ப்புக்கள் மற்றும் தேர்ச்சித்திறன் ஆகியன தொடர்பில் தொழில்களின் வகைகளுக்கு குறைந்தளவு கவனமே செலுத்தப்படுகின்றது. உண்மையில், சுற்றுலாத்துறையில் தொழிலானது சார்புரீதியில் குறைந்த வேதனத்திலானது, பருவகாலத்திலானது அத்துடன் பகுதி நேரத்திலானது என பெரும்பாலானோர் விவாதிக்கின்றனர் (Blank, 1989; Luloff et al., 1994; Stynes and Pigozzi 1983). அத்துடன் உயர் ஊதியத்திலான தொழில் உருவாக்கத்தின் நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களுடன் பொதுவாகவே முரண்படுகின்றது (Bernhardt et al., 2003; Pond, 1988). இங்கிலாந்தின் கரையோரப் பகுதிகளில் உல்லாசத்தளச் சுற்றுலாத்துறை மீதான சான்றானது சுற்றுலாத்துறை ஆதிக்கத்திலான கரையோரப் பொருளாதாரம் பெரிதுமே வலுவற்றது என்பதுடன், இப் பகுதிகளில் பொருளாதாரச் செயற்பாடு தேசிய சராசரிக்கு கீழே சராசரியாக 8% ஆகும் என எடுத்துக்காட்டுகின்றது (BRA, 2000).

சுற்றுலாத்துறை பெறுமதிச் சங்கிலியும் கூட மறைமுகமான விளைபயன்களை முன்வைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது (Ashley et al., 2007). உதாரணமாக, உணவு மற்றும் குடிபானங்கள், நிருமாணம், ஏற்றி இறக்குதல், மரத்தளபாடங்கள், கலைகள் மற்றும் கைவினைப் பொருட்கள் மற்றும் வேறு சிறு குடிசைக் கைத்தொழில்கள் ஆகியவற்றுடன் இணைப்பினைக் கொண்டுள்ள பாவனை-பளுவான தொழிற்துறையொன்றாக சுற்றுலாத்துறை விளங்குகின்றது. நேரடி நன்மைகளின் 60-70%ஐக் கொண்ட அளவுக்கு பெறுமதியை சுற்றுலாத்துறையில் மறைமுகமான விளைபயன்கள் சேர்க்க முடியும் என சில ஆய்வுகள் கண்டறிகின்றன (Lejarraga and Walkenhorst, 2006). எனினும், சுற்றுலாத்துறையின் அதிகளவு வாடிக்கையாளர்களைச் சம்பாதிக்கும் 'பெருக்கும் எண்ணிக்கையிலான விளைபயனும்' வாதாடப்படுகின்றது. ஏனைய தொடர்பான தொழிற்துறைகளை/கைத்தொழில்களை அதிகரிப்பதற்கு சுற்றுலாத்துறையின் ஆற்றலளவை மதிப்பிடுவதற்கான ஆராய்ச்சி அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறியுள்ளது என்பதுடன், பங்கீட்டிலான விளைபயன்களை மதிப்பிடுவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை கலப்பிலான முடிவுகளைக் கண்டுள்ளது. ஏனைய இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை கைத்தொழில்களுடன் ஒப்பிடுகையில், வருமானத்தின் மிதமானவிதத்தில் சமமான பங்கீட்டினை சுற்றுலாத்துறை தோற்றுவிப்பதாக Lee மற்றும் Kang (1988) ஆகியோர் கண்டறிகின்றனர் (also Leatherman and Marcouiller, 1996; Wagner, 1997).

ஆனால், விவசாயம் போன்ற ஆரம்பநிலைக் கைத்தொழில்களுடன் ஒப்பிடுகையில் குறைந்தளவு மனதில் பதியத்தக்கதாகவே செயற்படுகிறது. சுற்றுலாத்துறையானது குறைந்த ஊதியத்திலான தொழிற்துறை ஒன்றாகும் என Lee மற்றும் Kang இன் ஆராய்ச்சி கண்டறிவதுடன், துறையில் அவர்கள் தொழிலாற்றினால் குறைந்த வருமான வகுப்புக்களின் (வேறு வருமான வகுப்புக்களுடன் ஒப்பிடுகையில்) வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்கான ஆற்றலளவைக் கொண்டிருக்கக்கூடும் எனவும் கண்டறிகிறது.

வாழ்வாதாரங்கள், வியாபாரக் காலநிலை, மூலதன ஒன்றுதிரட்டலின் பாங்குகள், உட்கட்டமைப்பு மற்றும் செல்லுமிடத்தின் இயற்கையான மூலவளங்கள் ஆகியவற்றை மாற்றுவதில் அதன் எழுச்சிசார்ந்த தன்மைக்கு சுற்றுலாத்துறையின் இயக்காற்றலிலான தாக்கங்கள் தொடர்பினைக் கொண்டவையாகும் (Ashley et al., 2007). மூன்றாவது உலக அபிவிருத்தியடையாத நாடுகளின் அரசியல் பொருளாதாரத்தின் சூழமைவில் சுற்றுலாத்துறையை கண்டறிவதில் 'பௌதீக, வர்த்தக மற்றும் சமூக-உளவியல் ரீதியிலான பதங்களில்... புறஎல்லையிலான பொருளாதாரமொன்றில் சுற்றுலாத்துறையானது சிற்றூர்ரீதியிலான கைத்தொழிலொன்றாக/தொழிற்துறையொன்றாக கருக்கொள்ளமுடியும்' என 1982இல் Britton குறித்துக்கொண்டார் (341). உலகமயமாகிய பெருநகர் மையங்களிலிருந்து சுற்றுலாப்பயணிகளின் இயக்கம் உல்லாசத்தளங்களின் ஊடாக பிரயாண ஒழுங்கமைப்பாளர்களினாலும், முகவர்களினாலும் மத்தியஸ்தம் செய்யப்படுவதுடன், இங்கிருந்து பொருட்களை வாங்குவதற்கும், பொழுதுபோக்கிற்கும் அத்துடன் இயற்கையை ரசிப்பதற்கும் கைவினைஞர் மற்றும் பொருளாதாரத்தின் மான்ய துறைகளுக்கு தமது "சூழல் நீர்க்குமிழிகளிலிருந்து" சிறிது காலத்திலான சுற்றுலாப்பயணங்களைச் சுற்றுலாப்பயணிகள் மேற்கொள்வார்கள் (அதே கற்கை.:343).

ஆனால், அது முக்கியமானதாக இருப்பதைப் போன்றுள்ள இந்த இரட்டைத்தன்மையிலான விவரணமானது, பொருளாதாரத்தின் போதியளவு பகுப்பாய்விலான வேறுபடுத்திக்காட்டலை இயலச்செய்வதில்லை. 'பெருமளவு காலனித்துவத்திற்கு பிற்பட்ட நாடுகளின் மீள்-பங்கீட்டிலான ஆற்றலளவை மீறுகின்ற அளவொன்றின் மீது வாழ்வாதாரத்தின் பிரச்சனையொன்றை' முறைசாராப் பொருளாதாரமொன்றினுள் மேன்மிகையிலான சரீரஉழைப்புப் படை முன்வைப்பதாக Sanyalமற்றும் Bhattacharyya (2009) ஆகியோர் உறுதிபடக்கூறுகின்றனர் (36). அவ்வாறாக, மானிய மட்டமொன்றில் ஒன்றுதிரண்டுள்ள பொருளாதாரத்திலிருந்து நன்மையை அடையாதவர்களுக்கு பொருளாதார இடைவெளியொன்றைப் பேணுகின்ற 'அவசியப் பொருளாதாரத்தின்' முறைசாராத் துறையினுள் மேன்மிகையிலான சரீரஉழைப்புப் படையின் நிலையற்ற நிலைமைகளின் உருவாக்கத்தை அவசியப்படுத்துகின்றது (அதே கற்கை). இதுவே இந்த மான்யத்தின் அல்லது அவசியப் பொருளாதாரத்தின் முக்கிய அங்கமொன்றான நுண்-வியாபார முயற்சிகள் ஊடாக சில்லறை ஆரம்பநிலை உற்பத்தியினதும் அத்துடன் சுய-தொழிலினதும் இடைவெளியாகும். Sanyal (2007) சுட்டிச்சொல்கின்றவாறு, இந்த இடைவெளிகள் மூலதனத்தின் சுற்றுக்களின் வெளியே உள்ள அதேவேளை, மூலதனத்தின் முறைமையான சுற்றுக்களினுள்ளும் அத்துடன் உண்மையிலேயே முறைமையான துறை என அழைக்கப்படுவதன் உள்ளேயும் விஸ்தாரமான தகவலொன்று உள்ளது.

Britton மற்றும் Sanyal ஆகியோர் மீது ஈர்த்தெடுக்கையில், பாசிக்குடாவின் அரசியல் பொருளாதாரத்தின் கூறுகளாகப் பிரிந்துள்ள கருத்தொன்றைக் கரிசனைக்கெடுப்பது முக்கியமாகும். அதன் முக்கிய பொருளாதார இடைவெளிகளினுள் வகைப்படுத்தலையும் அத்துடன் அவற்றுக்கு இடையிலான இணைப்புக்களையும்அடையாளங்காண்பது விசேடமாக முக்கியமானதாகும். இதனால் பின்வருவன மீது இந்த ஆய்வு நோக்கினைக் கொண்டுள்ளது: உல்லாசத்தளங்கள்,உள்ளூர் விருந்தினர் இல்லங்கள், மீன்பிடித்தொழில் என்ற அமைப்பில் ஆரம்பநிலை உற்பத்தி மற்றும் ஊதியச் சரீரஉழைப்பு. பாசிக்குடாவில் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான இந்த அணுகுமுறையை எடுப்பதன் மூலம், யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையில் இரு சக்திநிறைந்த விவரணங்களைச் சூழவுள்ள சுற்றுலாத்துறை அபிவிருத்தியினால் முன்வைக்கப்பட்டுள்ள விவாதங்களைப் பிரித்தறிய அது முயல்கின்றது. துரிதமான உள்ளூர் பொருளாதார உருமாற்றத்திற்கும் அத்துடன் தொழில் உருவாக்கத்திற்கும் பாரிய அளவிலான ஆடம்பரச் சுற்றுலாத்துறையானது சர்வரோக நிவாரணி என்பதே இவற்றில் முதலாவதாகும் என்பதுடன், கலாசாரரீதியில் கூருணர்வுத்தன்மைக்கும் அத்துடன் சமூகம் முன்னெடுப்பிலான பொருளாதார அபிவிருத்திக் குறிக்கோள்களுக்கும் சுற்றுலாத்துறையானது முற்றுமுழுதாக ஊறுவிளைவிக்கின்றது என்பதே இரண்டாவதும், எதிர்ப்பதுமானதாகும்.

## 3.3 சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் தற்சார்புடைய பரிமாணங்கள்

அதன் துல்லியமான தன்மையினால் மனித அபிவிருத்தி போன்ற ஆற்றலளவுகளிலும், சேமநலன் அணுகுமுறைகளிலும் அத்துடன் கருத்துக்களிலும் உதாரணம் காட்டி விளக்கப்பட்டுள்ளவாறு பொருட்கூறு மற்றும் தற்சார்புப் பரிமாணங்களில் அபிவிருத்தி ஈடுபடுகின்றது. எனினும் எமது இந்தக்கற்கைக்கான நோக்கத்திற்காக நாம் தற்சார்பின் ஒரு விசாலப்படுத்திய கண்ணோட்டத்தை பெரிதும் தழுவியுள்ளோம். எமது அக்கறையானது வாழ்க்கைத் தரத்தினதும் மற்றும் கண்ணோட்டங்களினதும் அத்துடன் அவைகளுடைய கட்டுமானங்களினதும் தொடர்பாக பெரிதுமே பொதுவான பதங்களில் விளக்கமளிக்கப்பட்டுள்ள பொருள்-சாராத அம்சங்களில் மட்டும் வெறுமனே இருக்காமல் கூடவே, பொருள் சார்ந்த மூலத்துவங்களுடன் பரஸ்பரரீதியில் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள உறவில் எவ்வாறு இவை உள்ளன என்பதிலும்இருக்கிறது. தற்சார்புடைய பொருளாதாரத்தின் கருத்து முக்கியமானதாகும். ஏனெனில் வாழ்வாதாரங்களின் பெருமளவு ஆய்வுகள் இந்த வாழ்வாதாரங்கள் தொடர்பில் கணக்கிலடங்கா கருத்துக்களினதும், தற்சார்புடையவைகளினதும் தோற்றுவிப்பினையும், விநியோகத்தினையும் புரிந்துகொள்ளாமல், பொருளாதார விடயங்களாக மக்கள் மீது நோக்கினைக் கொண்டிருக்க முயல்கின்றன. 'தற்சார்புத்தன்மையின் உற்பத்தியுடன் பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் சமூகப் பாய்வுகளின் இணைப்பாக தற்சார்புடைய பொருளாதாரத்தை நாம் எடுத்துக்கொள்கின்றோம்' (Lazz.to, 2011:8). விடுமுறை இடமொன்று என்பதை விட தமது ஊராக பாசிக்குடா சுற்றுலாத்துறை வலயத்தை அழைப்பவர்களுக்கு பாசிக்குடாவில் எவ்வாறு சுற்றுலாத்துறை அபிவிருத்தி அர்த்தமாகியுள்ளது என்பதில் நாம் அக்கறையைக் கொண்டுள்ளோம். பாசிக்குடாவில் சமூகங்களினுள் சுற்றுலாத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள கருத்து, அவற்றின் பிரதியெடுப்பு மற்றும் விநியோகம் ஆகியன பொருள்ரீதியான அடிப்படையொன்றையும் அத்துடன் எழுச்சிசார்ந்த பரிமாணம் ஒன்றையும் கொண்டுள்ளன.



சொகுசான உல்லாசத்தளத்தில் பாதுகாப்பு காவலர்: சிதையும் நிலையினாலும், வெளியேற்றத்தினாலும் குறிக்கப்பட்டுள்ள சூழமைவொன்றில் ஆடம்பரத்தையும், விருந்தோம்பலையும் சந்தைப்படுத்துவது மீது பாசிக்குடாவின் அரசியல் பொருளாதரம் செழிப்படைகின்றது.

சுற்றுலாத்துறையின் சூழமைவில், இடத்தின் கருத்துக்களைத் தோற்றுவிப்பதற்கு இந்த கருத்துப் பொருளாதாரமும் முக்கியமானதாகும். முதலீட்டாளர்களுக்கும், வியாபார முயற்சியாளர்களுக்கும் மற்றும் சுற்றுலாப்பயணிகளுக்கும் ஒன்றுசேர சந்தைப்படுத்தக்கூடிய ஒன்றாக விளங்குகின்ற 'இலக்காக' அதை உருமாற்றுவதற்கு வடிவமைக்கப்பட்ட இடத்திலான அமைப்பே பாசிக்குடாவில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் கருத்துக்கான மையமாகும். அத்தகைய இட அமைப்பும் சந்தைப்படுத்தலும் அனுபவத்தின் புவியியல்களை உண்மையாகவே உருவாக்கும் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நடைமுறைகளை இன்றியமையாததாக்குகின்றது (Pierce et.al., 2011).

# 4 முடிவுகளின் பகுப்பாய்வு

## 4.1 யுத்தத்தின் மரபுரிமை மற்றும் பாசிக்குடாவின் சமூக – பொருளாதாரப் புறவரை

பாசிக்குடா கடற்கரையின் நிருவாக அலகான கல்குடா கிராம உத்தியோகத்தர் பிரிவு இலங்கையின் கிழக்குக் கடற்கரையோரப் பகுதியில் அமைந்துள்ளதுடன், இது யுத்தத்தின் போது வன்முறையின் அனுகூலமான சூழ்நிலையில் விளங்கியது. 1980களுக்குள், தமிழ் ஈழம் என்ற தனிநாடொன்றை உருவாக்குவதற்காக போராடும் தமிழ் தேசியவாத இயக்கத்தின் மையமாக கிழக்கு விளங்கியது. 2002-2006 சமதான நடைமுறை முழுவதும் கடுமையானளவு இராணுவமயமாக்கப்பட்ட பிராந்தியமாக கிழக்கு ஸ்திரமற்றநிலையில் இருந்தது. அச்சமயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பெருமளவு எதிர்ப்புத் தெரிவித்த தமிழர்களைக் கொன்றார்கள், சிறுவர்களைக் கட்டாயமாக தமது இயக்கத்தில் சேர்த்துக் கொண்டார்கள். அத்துடன் தொடர்ந்துமே முஸ்லிம்களுக்கு தொந்தரவைக் கொடுத்தார்கள் (ICG, 2008).இயக்கத்திலிருந்து எல்.ரி.ரி.ஈ. இன் கிழக்கின் இராணுவத் தளபதியான கேணல் கருணா விலகி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை (TMVP)2004 மார்ச்சில் அமைத்த போது, கிழக்கு மோசமடைந்தது. வடக்கின் எல்.ரி.ரி.ஈ.க்கும், அரசாங்கத்தினால் ஆதரவளிக்கப்பட்ட கருணா படைகளுக்கும் இடையில் அடுத்த சில வருடங்களாக நடைபெற்ற கெரில்லா யுத்தத்தினால் யுத்தநிறுத்தம் முடிவுக்கு வந்தது. கருணாவின் சொந்த ஊரான கிரானுக்கும், இன்னொரு எல்.ரி.ரி.ஈ. இராணுவத் தலைவரான பிள்ளையானின் கிராமமான பேதாழைக்கும் இடையில் புவியியல்ரீதியில் அமைந்திருந்த கல்குடா பகுதி தீவிரவாதக் குழுக்களுக்கு சிறுவர் மற்றும் வயதான போராளிகளின் ஆட்சேர்ப்புக்கு சௌகரியமான இலக்கொன்றாக விளங்கியது. 2004 டிசம்பர் சுனாமியினால் விளைவிக்கப்பட்ட பாரியளவிலான மரணமும், பேரழிவும் ஆயிரக்கணக்கானவர்களின் இடம்பெயர்வுக்கு இட்டுச்சென்றதுடன், வறுமையினதும், கடனினதும் மட்டங்கள் அதிகரித்தன.

கல்குடா அமைந்துள்ள பிரதேசச் செயலகப் பிரிவான கோரளைப்பற்று மிகவும் வறிய பிராந்தியங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. 38%ஐக் கொண்ட குடும்பங்கள் மாதமொன்றுக்கு ரூ.1,000க்கு ($6.90) குறைந்ததையே (2013இல்) சம்பாதித்தது. இந்த நிருவாக அலகில் மொத்தமாக 30% ஐக் கொண்ட குடித்தனங்கள் மலசலகூட வசதிகளைக் கொண்டிருக்காததுடன், 30%ஆனவை குடிநீருக்கான அடைதலைக் கொண்டிருக்கவில்லை (மட்டக்களப்பு மாவட்டச் செயலகம், 2014). கல்குடா கிராம அலுவலர் பிரிவானது கல்குடா, பட்டியடிச்சேனை, GTZ மீள்-குடியேற்ற வலயம், கரங்கலைச்சோலை மற்றும் வலைவாடி என்ற ஐந்து கிராமங்களைக் கொண்டுள்ளதுடன், இக் கிராமங்களில் மொத்தமாக 769 குடும்பங்கள் வாழ்கின்றன. அதிக சனத்தொகையைக் கொண்ட கிராமமாக பட்டியடிச்சேனை விளங்குவதுடன், இது 402 குடும்பங்களைக் கொண்டுள்ளது. 95%க்கு மேற்பட்ட மக்கள் தமிழர் என்பதுடன், இனத்துவ அடக்கத்தின் எஞ்சியோர் சிங்களவரும், பறங்கியரும் ஆவர். 60%ஐக் கொண்ட குடும்பங்களில் ஆகக்குறைந்தது ஓர் உறுப்பினராவது ஆரம்பநிலை வாழ்வாதாரமான மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ளனர். எனினும், மீன்பிடித்தலில் பல்-எண்ணிக்கையிலான குடும்ப உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளதனால், 78%ஐக் கொண்ட மக்கள் மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ளனர் (கிராம உத்தியோகத்தர், கல்குடா, உள்ளூரில் சேகரிக்கப்பட்ட புள்ளிவிபரம், மார்ச் 2015). தற்போது GTZ மீள்-குடியேற்ற வலயத்திலும், கரங்கலைச்சோலையிலும் வாழ்கின்ற பெரும்பாலான குடும்பங்கள் சுனாமியின் முன்னர் கடற்கரை நீள்வரித்துண்டில் (உல்லாசத்தளங்களின் அமைவிடம்) அல்லது அதற்கு அருகில் வாழ்ந்தனர் என்பதுடன், 2004இன் பின்னர் தமது தற்போதைய கிராமங்களில் மீள்-குடியேற்றப்பட்டனர். கிராம உத்தியோகத்தர் பிரிவில் வருமானத்தின் வறுமையின் விளைவொன்றாக, அரசாங்க அனுசரணையிலான சமூக பாதுகாப்புத் திட்டமான சமுர்த்தியின் அங்கமாக கல்குடாவில் அண்ணளவாக 60%ஐக் கொண்ட குடித்தனங்கள் விளங்குகின்றன. வருமானப் பற்றாக்குறையின் காரணமாக கல்குடாவில் அண்ணளவாக 100 குடும்பங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அரசாங்க அனுசரணையிலான பணம் சார்ந்த உதவியைப் பெறுகின்றன.

[4]கோரளைப்பற்றின் சராசரி –48% ஐ விட இந்த விகிதாசாரம் அதிகமானதாகும்.
பொதுசன மாதாந்த உதவிப்பணம் தற்காலிக ஊனமுற்றோர் கொடுப்பனவு மற்றும் நிரந்தர ஊனமுற்றோர் கொடுப்பனவு

## 4.2 உல்லாசத்தளப் பொருளாதாரத்தின் நிழலில் ஆரம்பநிலை உற்பத்தியாளர்கள்: பாசிக்குடாவில் மீனவர்கள்

*'மீன்பிடித்தலை மேற்கொண்டு உயிர்வாழ்வதற்கு எமது பிள்ளைகளுக்கு சந்தர்ப்பமே இல்லை.'*

தீவகத்தில் வேறு எங்கினும் உள்ள கரையோரப் பகுதிகளைப் போன்று, வாழ்வாதாரமொன்றாக மீன்பிடித்தல் பாசிக்குடாவிலும், அதனைச் சுற்றியும் நீண்ட வரலாறு ஒன்றைக் கொண்டுள்ளது. ஊதிய சரீரஉழைப்பு மற்றும் நெற்செய்கை ஆகிய ஏனைய அமைப்புக்களுக்கு மறுபக்கத்தில்உணவினதும், வருமானத்தினதும் பாரிய மூலமொன்றாக மீன்பிடித்தல் அமைந்துள்ளது (நேர்முகங்காணல், பிராந்திய திட்டமிடல் பணிப்பாளர், SOLID, 26 ஜனவரி 2015). யுத்தம், சுனாமி மற்றும் யுத்தத்திற்குப் பிந்திய சுற்றுலாத்துறை என மூன்று பாரிய ஊடறுப்புக் காரணிகளின் இணைப்பொன்றினால் இன்று பகுதியில் மீன்பிடித்தலின் அரசியல் பொருளாதாரம் உருக்கொடுக்கப்படுவதாக இந்த ஆய்வுக்கான நேர்முகங்காணப்பட்ட மீனவர்கள் உறுதிபடக் கூறினார்கள்.

யுத்தத்தின் போது, நிலத்திலும், கடலிலும் சண்டையுடனும், அத்துடன் இலங்கை இராணுவத்தினாலும், எல்.ரி.ரி.ஈ.இனாலும் மற்றும் வேறு ஆயுதபாணியிலான குழுக்களினாலும் விதிக்கப்பட்ட கடுமையான கண்காணிப்புடனும், கட்டுப்பாட்டுடனும் மீனவர்கள் போட்டியிட வேண்டியிருந்தது. சிக்கலானதும் எதிர்வு கூறப்பட முடியாததுமான சோதனைச் சாவடிகள் சுற்றிவளைப்புக்கள் பாதுகாப்புவலயங்கள், மற்றும் கடவுச்சீட்டுக்கள் (pass) போன்றவையால் மீன்பிடியானது இடர்பாடாக இருந்தது என்பதுடன் மிகக் குறுகிய இடைவெளியான கால அளவினுள் முன்னெடுக்கப்படவும் வேண்டியிருந்தது. மீனவர்கள் கடலுக்கு சென்ற போதும், அவர்கள் திரும்பி வந்த போதும் இராணுவத்திற்கும், எல்.ரி.ரி.ஈ.க்கும் இடையிலான சண்டை மூண்டதுடன், சில வேளைகளில் கடுமையான சண்டையின் காரணமாக, மீனவர்களினால் கரைக்குக் கூட திரும்பமுடியாதிருந்தது. மேலும், சந்தைகளுக்கு நேரகாலத்திற்குசெல்வது அடிக்கடி தடைப்பட்டது அல்லது அதிகளவில் முட்டுக்கட்டையாக விளங்கியது. இது அடிக்கடி தாமதங்களை விளைவித்து, உற்பத்திப்பொருளின் அழுகிப்போகும் தன்மையை வழங்குகையில், அது குறிப்பிடத்தக்க நஷ்டங்களை விளைவித்தது.

அச்சத்தின் சூழலினால், ஆட்கடத்தல், கொலை மற்றும் நிர்ப்பந்திக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஆகியனவற்றுக்கு உட்பட்டவர்களாக விசேடமாக ஆண்கள் காணப்பட்டதனால், சந்தைகளுக்கான அடைதலுக்கு சோதனைச்சாவடிகள் ஊடாக செல்கின்ற பாரிய பொதுசன வகிபங்கொன்றைப் பெண்கள் விருத்திசெய்வதற்கு இட்டுச்சென்றது (Bohle and Funfgeld, 2007: 678; Fernando and Moonesinghe,2012: 12; Goodhand et al., 2000: 399). ஆனால், பெண்களைப் பொறுத்தளவில் இதனால் ஏற்படுகின்ற ஆபத்துக்கள், இதுவும் ஒரு நம்பகமான அல்லது பாதுகாப்பான வழிமுறையாக எப்பொழுதுமே இருக்கவில்லை என்பதையே கருத்தாக வழங்கியது. இதன் விளைவொன்றாக, வெளியக காரணிகளிலும் பாதுகாப்பு சூழலிலும் பாரியளவு தங்கியிருப்பதாகவும் விளங்கியதால் மீன்பிடித்தல் அனேகமாக மானியமொன்றிலான அல்லது உயிர்வாழ்வதற்கான பொருளாதாரமொன்றாக விளங்கும் விதத்தில் குறைவடைந்தது. அத்துடன் வெளிவாரிக் காரணிகளுக்கும் அத்துடன் பாதுகாப்புச் சூழலுக்கும் கடுமையானளவு தங்கியிருப்பதாகவும் விளங்கியது.

யுத்தத்தின் போது பரிமாற்றத்தின் உறவுகள் நம்பகமாக இல்லாதிருந்த அதேவேளை, உயிர்வாழ்தல் அனேகமாக முன்னுரிமையொன்றாக விளங்கியதனால், யுத்தப் பொருளாதாரத்தினால் விதிக்கப்பட்ட மட்டுப்படுத்தல்களினுள் உணவினதும், வாழ்வாதாரத்தினதும் முக்கியமானதொரு மூலமாக மீன்பிடித்தல் தொடர்ந்துமிருந்தது. ஆனால், 2004இன் சுனாமி அப் பகுதியில் மீன்பிடிச் சமூகத்திற்கு ஒரு பாரிய பின்னடைவாக விளங்கியது. கடற்கரைக்கு அப்பாலுள்ள நிலத்தில் குறிப்பிடத்தக்க விதத்தில் குடியேற்றப்பட்டுள்ள மீனவர் சமூகங்களை உள்ளடக்கும் தற்போதைய குடியேற்றப் பாங்கானது சுனாமிக்குப் பின்னரான மீள்-குடியேற்றத்தின் விளைவொன்றாகும். சுனாமியின் பின்னர் மீனவர் சமூகங்கள் மீள்-குடியேற்றப்பட்ட இரு கிராமங்களாக கரங்கலைச்சோலை மற்றும் பட்டியடிச்சேனை ஆகியன விளங்குகின்றன. தமது மீள்-குடியேற்ற அமைவிடங்களையிட்டு பாசிக்குடாவில் உள்ள பெரும்பாலானோர் மகிழ்ச்சியடையவில்லை என கல்குடாவில் 'குமார்' என்ற உள்ளூர் அரசாங்க அலுவலர் (30 ஆண்) ஒருவர் ஒப்புக்கொண்டார் (நேர்முகங்காணல், 3 மார்ச் 2015). உதாரணமாக, பாசிக்குடா நீள்வரித் துண்டிலிருந்து கரங்கலைச்சோலையில் தமது குடும்பங்கள் மீள்-குடியேற்றப்பட்ட 56 வயதும், 57 வயதும் கொண்ட வயதான ஆண்கள் இருவர் தமது சொந்த அடைவிடம் கடலுக்கு மிகவும் கிட்டியது எனவும், கடலுக்கான இலகுவான அடைதலுக்கு அனுமதிக்கக்கூடிய வீதியொன்றைக் கட்டுவதற்கு அதன் வாக்குறுதியை அரசாங்கம் இன்னுமே நிறைவேற்றவில்லை எனவும் முறையிட்டனர் (வயது மூத்தோர் நோக்குக்குழு கலந்துரையாடல், 5 மார்ச் 2015).

சுனாமியைத் தொடர்ந்து, தமது சொந்த இடத்திலிருந்தான துறைமுகத்திலிருந்து மீனவர்கள் நகர்ந்து தற்போது பாசிக்குடா உல்லாசத்தள நீள்வரித் துண்டாக விளங்கும் SLTB காணியில் தமது படகுகளை நங்கூரமிட ஆரம்பித்தார்கள். பாசிக்குடாவில் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு திட்டங்களையிட்டு கலந்துரையாடுவதற்காக 'பங்காளர் கூட்டங்களுக்கு' மீனவர்கள் அழைக்கப்பட்டதாக வாழைச்சேனையில் பிரதேசச் செயலக அலுவலகம் உறுதிப்படுத்தியது. மீனவர்களுக்காக தகுந்த மீன்பிடி துறைமுகமொன்று கட்டப்படும் என்ற உறுதிமொழியைத் தொடர்ந்து, தமது படகுகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு ஆரம்பித்த காணி மீது உல்லாசத்தளங்களின் அபிவிருத்திக்கு மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என அவர்கள் கூறினார்கள். ஆனால், அந்த வாக்குறுதி தொடர்ந்துமே நிறைவேற்றப்படவில்லை.

கரங்கலைச்சோலையைச் சேர்ந்த 57 வயதான 'விநாயகமூர்த்தி' பின்வருமாறு கூறினார்: *'ஏற்கனவே (தற்போதுள்ள) ஹொட்டேல் நீள்வரித்துண்டுக்கு அருகில் உள்ள பகுதியொன்றில் மீனவர்கள் படகுகளை தரையிறக்கினார்கள். ஆனால், ஹொட்டேல் அபிவிருத்தியின் காரணமாக மிகவும் சிறிய பகுதியொன்றுக்கு நகர்வதற்கு அவர்கள் நிர்பந்திக்கப்பட்டார்கள்.'* தமது பழைய துறைமுகத்திற்குச் செல்லுமாறு தற்போது மீனவர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. ஆனால், இதைப் பெரும்பாலானோர் எதிர்க்கின்றார்கள். ஏனெனில் சொந்த இடத்திலான துறைமுகம் சிறியது என்பதுடன், உயர்வான வற்றுப்பெருக்குகளை அனுபவிக்கின்றதனால் தரையிறங்குவதற்கு மிகவும் அபாயகரமான இடமொன்றாக ஆக்குகின்றது. எனினும், மீனவர்களுக்கு காணி சட்டபூர்வமாக ஒதுக்கப்படவில்லை என்ற காரணத்தினால், தமது பழைய துறைமுகத்தை மீளப்பெற்றுக்கொள்வதில் கூட தமது சந்தர்ப்பங்கள் குறித்து இன்னொரு உள்ளூர் மீனவரும், உள்ளூர் மீனவர் கூட்டுறவுச் சங்கமொன்றின் உறுப்பினருமான ஒருவர் கரிசனையை வெளிப்படுத்தினார் (நோக்குக் குழு கலந்துரையாடல், 3 மார்ச் 2015).

மீனவர்களுக்கு புதிய சவால்களை யுத்தத்திற்குப் பிந்திய உல்லாசத்தளப் பொருளாதாரம் விடுத்துள்ளது. தற்போது பயன்படுத்தப்படும் இறங்குதுறைக்கு மிகவும் கிட்டியதாக அமைந்துள்ள உல்லாசத்தளமொன்று எவ்வாறு உல்லாசத்தளத்திற்கு அண்மித்துள்ள அடைதல் வீதியை தடுப்பதன் மூலம் கடலுக்கு மீனவர்களின் அடைதலைக் கட்டுப்படுத்துவதற்கு எத்தணித்துள்ளது என்பது பற்றி ஒன்றுக்கு மேற்பட்ட அரசாங்க அலுவலர்களும், பெருமளவு மீனவர்களும் தெரிவித்தனர். கிராக்கிப் பக்கத்தின் மீது, தாம் உள்ளூரில் மீன்களை வாங்குவதாகவும், இதனால் உள்ளூர் பொருளாதாரத்திற்கு பங்களிப்பதாகவும் பெருமளவு உல்லாசத்தளங்கள் வலியுறுத்தின. இது உண்மையாக உள்ள அதேவேளை, மீன்பிடியில் குறைவும், மீன்பிடித்தலின் அரசியல் பொருளாதார கட்டமைப்பும் பாசிக்குடாவில் மீன்பிடித்தொழிலில் (அதாவது மீன்பிடித் துறைமுகமொன்றைக் கட்டுதல், களஞ்சிய வசதிகளை வழங்குதல் மற்றும் 'ஐஸ்' பொறிகள் போன்ற) சாதகமான உருமாற்றமொன்றுக்கு ஆதரவளிக்கவில்லை. இது உள்ளூர் மீனவர்களின் உற்பத்தி ஆற்றலளவை மட்டுப்படுத்துகின்றது.

இதனிடையே, ஓர் உள்ளூர் விநியோகஸ்தரிடமிருந்தே மீன்களையும், கடல் உணவையும் பெற்றுக்கொள்வதாக உல்லாசத்தளங்கள் வலியுறுத்துகின்ற போதிலும், அப்படியானாலும் அல்லது அப்படி இல்லை என்றாலும் உள்ளூர் மீனவர்களிடமிருந்து மீன்கள் வருகின்றன என்பதற்கு உத்தரவாதமளிக்க முடியாது. ஏனெனில் வியட்நாம், ஷீஷெல்ஸ் மற்றும் சீனா போன்ற நாடுகளில் இருந்து இலங்கைக்கு மீன்களை இறக்குமதி செய்யும் வியாபார வட்டாரங்களினுள் மீன்பிடித் தொழிற்துறையில்உள்ள பெருமளவு இடைத்தரகர்கள் தற்போது பிரவேசித்துள்ளார்கள் ('மார்க்' மீன் இறக்குமதி நிறுவனத்தின் கொழும்பைத் தளமாகக் கொண்ட பிரதிநிதியொருவர்). யுத்தத்தின் போது மீன்களின் இறக்குமதி ஒரு நியம நடைமுறையாக விளங்கியதுடன், இறக்குமதி செய்யப்பட்ட மீன்களின் மிகப் பாரிய கொள்வனவாளர்களில் ஒருவராக ஆயுதப்படையினர் பிரதிநிதிப்படுத்துகின்றனர். 2009இல் யுத்தத்தின் முடிவுடன், விருந்தோம்பல் தொழிற்துறைக்கு விநியோகம் செய்வதை மீன் இறக்குமதி வட்டாரங்கள் பன்னிலைப்படுத்தின. அவை ஒன்றில் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் அல்லது சுதந்திரமாக தமது சொந்த வர்த்தக வலைப்பின்னல்கள் ஊடாக செயற்பட்டன. வேறு சொற்களில் என்றால், பாசிக்குடாவிலும், பொதுவாக இலங்கையிலும் பரந்த சூழல் பிரச்சனைகளும், மீன்பிடித்தலின் அரசியல் பொருளாதாரமும் இந்தச் சந்தையிலிருந்து மிகவும் குறிப்பிடத்தக்கவிதத்தில் மீனவர்கள் பெற்றுக்கொள்வதற்கு உகந்ததாக விளங்கவில்லை.

[6] இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் மீன் இறக்குமதிக்கான விளம்பரம் ஒன்று: http://fisheriescorporation.gov.lk/import-of-frozen-fish/

பாசிக்குடாவின் மீன்பிடிப் பொருளாதாரத்திற்கு மையமாக விளங்கும் உள்ளூரில் மீன்பிடி 'முதலாளிகள்/பொஸ்கள்' (bosses) எனக் குறிப்பிடப்படுபவர்கள் படகுகளையும், வலைகளையும் சொந்தமாகக் கொண்டிருப்பதற்கு மேலதிகமாக, படகு உரிமையாளர்களுக்கு எரிபொருள், விளக்கு மற்றும் வேறு வசதிகளை வழங்குகிறார்கள். மீன்பிடிக்கு எந்தளவு கொடுப்பனவு செய்வது என 'பொஸ்' தீர்மானிப்பதுடன், அவர்கள் வழங்கும் மூலவளங்களுக்கு 'செயல்படுத்தல் பணம்' என்ற வழியாக பணத்தையும் கழித்துக் கொள்கிறனர். (கல்குடா கிராம உத்தியோகத்தர் நேர்முகங்காணல், 3 மார்ச் 2015). மீனவர்களுக்கு பிரவேச ஆகுசெலவுகள் உயர்வானவையாகும்: சுனாமியின் பின் வாழைச்சேனையிலிருந்து கரங்கலைச்சோலையில் மீள்குடியேற்றப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த 27 வயதான 'சுமதி' என்ற பெண் ஒருவர் கூறினார்: அவர் ஒரு இல்லத்தரசி என்பதனால், மீனவர் ஒருவராக அவரது கணவரின் வேலையே அவர்களது ஒரேயொரு வருமானமாகும். படகு ஒன்றுக்காக ரூபா 50,000ஐக் கொண்ட கடனொன்றை அவர் கணவர் எடுக்க வேண்டியிருந்ததுடன், இதை மீளக்கொடுப்பனவு செய்வதற்கு இரண்டு வருடங்கள் எடுத்தன (நேர்முகங்காணல், 6 மார்ச், 2015).

பெருமளவில், இடைத் தரகர்களாக இந்த மீனவ 'பொஸ்'களே செயற்படுவதுடன், அவர்கள் ஊடாகவே மீன்கள் உல்லாசத்தளங்களினால் கொள்வனவு செய்யப்படுகின்றன. உள்ளூர் உயர்நிலைப் பிரமுகர்களினால் இயக்கப்படும் உள்ளூர் விநியோகச் சங்கிலிகள் மீது தங்கியுள்ள கொள்வனவின் இந்த அமைப்பானது தற்போது நியம நடைமுறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கல்குடாவின் முன்னாள் கிராம உத்தியோகத்தர் (ஆண், 68) ஒருவர் குறிப்பிட்டுள்ளவாறு, *'ஹொட்டேல்கள் பாரிய செயற்பாடுகளாகும் என்பதுடன், நாளாந்தவாரியான அடிப்படையொன்றின் மீது அவர்களுக்கு அவசியமான பொருட்கள் தொடர்பில் ஏற்றஇறக்கத்திலான விநியோகங்கள் மீது அவர்கள் நம்பியிருக்கமுடியாது. எனவே, ஹொட்டேல்களுக்கான பொருட்களின் தடையற்ற விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்கு ஒன்றில் முதலாளிமார்களுடன் (இடைத்தரகர்கள்) அல்லது பெரிய கம்பனிகளுடன் ஒழுங்குகளைச் செய்வது ஹொட்டேல்களுக்கு இலகுவானதாகும்'* (நேர்முகங்காணல், 6 மார்ச், 2015).

ஆனால், உள்ளூர் விநியோகச் சங்கிலிகளின் கட்டுப்பாட்டினைச் செலுத்தும் மீனவ 'பொஸ்'கள் அல்லது முதலாளிமார் தமது தரகுக்கூலிகளை அதிகபட்சமாக்குவதையே அக்கறையாகக் கொண்டுள்ளனர் ('மாரியா', மட்டக்களப்பில் உள்ள 50 வயதான பெண், சுற்றுலாத்துறை வியாபார முயற்சியாளர்). அத்துடன் ஹொட்டேல்களிலிருந்து சாத்தியமானளவு அதிகளவு பெற்றுக்கொள்கிற அதேவேளை, மீனவர்களுக்கு சாத்தியமானளவு குறைந்தளவையே கொடுப்பனவு செய்வதை நாடுகிறார்கள். வேறு சொற்களில் கூறுவது என்றால், உள்ளூரிலேயே உற்பத்தி விற்கப்பட்டாலும் கூட மீனவர்கள் ஆதாயத்தைப் பெறுவதில்லை (நேர்முகங்காணல், 27 ஜனவரி 2015). மற்றைய இடங்களில் உள்ளதைப் போன்று, நடைமுறையிலான அரசியல் பொருளாதார அதிகார உறவுகள் பாசிக்குடாவில் உள்ளூர் விநியோகச் சங்கிலிகளை உருமாற்றுகின்றன. அவ்வாறாக இந்த அதிகார உறவுகளினால் மத்தியஸ்தம் செய்யப்படும் உள்ளூர் கொள்வனவு, சங்கிலியின் கீழ்மட்டத்தில், இவ்விடயத்தில் மிகவும் வறிய மீனவர்கள் குறைந்தபட்சத்திலான பெறுமதியின் பங்கினை நோக்குவதையே உறுதிப்படுத்தும்.

மேலும், உதாரணமாக வீழ்ச்சியடையும் மீன்பிடி பற்றி பட்டியடிச்சேனையில் உள்ள வயது மூத்தோர் பேசினார்கள். அடையாளங் காணப்படுவதற்கு விரும்பாத மீனவர் ஒருவர் தமது நீர்நிலைகளுக்கு வரும் வெளியார் மீனவர்களினாலும், உல்லாசத்தளங்களின் நிருமாணத்தில் நிலைத்திருக்க முடியாததும், கெடுதலை விளைவிக்கின்றதுமான செயற்பாடுகளினாலும் அத்துடன் அடிக்கடியிலான அரசாங்க அதிகாரிகளிடமிருந்து மறைமுக ஆதரவினாலும் இந்தப் பிரச்சனை மோசமடைந்துள்ளதாக உறுதிபடக் கூறுகின்றார். *'உயர் அதிகாரிகள் ஆதரிக்கின்ற போது வெளியார்களின் "டைனமைற் மீன்பிடித்தலை" எவ்வாறு மீனவர்கள் நிறுத்தமுடியும்? இவ்வகையான மீன்பிடித்தலை மேற்கொள்கின்றவர்கள் அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுக்கிறார்கள். (உல்லாசத்தளம்X) கட்டப்பட்ட போது முருகைக் கற்களின் அழிவையிட்டு (நாம்) எதிர்ப்புத் தெரிவித்தோம். ஆனால், அரசாங்கமும் அவர்கள் பக்கமே இருந்தது'* (நேர்முகங்காணல், 3 மார்ச் 2015).

அதிகாரமுள்ள உல்லாசத்தளப் பொருளாதாரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ள கூட்டுச் சதியும் முறைமையானதும், முறைமை சாராததுமான அமைப்புக்களைக் கொண்ட ஆதரவையும் கொண்ட அத்தகைய விவரணங்கள் முறிந்ததும், நிறைவேற்றப்பட்டதுமான வாக்குறுதிக்கும், மீன்வர்களிடமிருந்து கிடைத்த பலவீனமான ஆதரவுக்கும் முற்றிலும் மறுதலையானவையாகும்.

சூழமைவை வழங்குகையில், பாசிக்குடாவிலும், அதனைச் சுற்றியும் உள்ள பெரும்பான்மையிலான குடித்தனங்கள் மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ள போதிலும், வாழ்வாதாரமொன்றாக மீன்பிடித்தலின் எதிர்காலம் பற்றி மக்கள் திட்டமாக இருக்கவில்லை என்பதுடன், உண்மையில், வாழ்வாதரங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக உல்லாசத்தளப் பொருளாதாரத்தையே நோக்குகின்றார்கள்.

மீன்பிடித்தல் இனிமேலும் ஒரு நிலையான வாழ்வாதாரமல்ல. மீன்பிடி கணிசமானளவு குறைவடைந்துள்ளது. முன்னர், எம்மால் 1 கி.கி. பெறுமதியான மீன்களை இலகுவாகப் பிடிக்கமுடியும். இப்போது இரவு முழுவதும் நீங்கள் தங்கியிருந்தாலும், அதிகளவைான மீனைப் பிடிக்காத நாட்களும் இருந்துள்ளன. ஹொட்டேல்களில் தொழில்கள் மிக அதிகளவில் நிலையானவையாகும். தோட்டக்காரர் ஒருவராகத் தொழில்புரிந்தால், அது உங்களுக்கு மாதாந்தத்திலான கொடுப்பனவுக் காசோலையொன்றை வழங்கும். தமது சொந்த வேகத்திற்கு ஏற்பவே தோட்டக்காரர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால், ஹொட்டேல் இன்னுமே அவர்களுக்கு நன்றாகவே கொடுப்பனவு செய்கின்றது. அது ஒரு தடையற்ற வருமானமாகும். மீன்பிடித்தலைப் பொறுத்தளவில் அதை அது வழங்குவதில்லை (வயது மூத்தோர் நோக்குக் குழுக் கலந்துரையாடல், பட்டியடிச்சேனை, 6 மார்ச், 2015).

ஏற்கனவே உள்ளூர் சமத்துவமின்மையினால் உட்செலுத்தப்பட்டதும், யுத்தத்தின் மரபுரிமையொன்றினாலும், சுனாமி தொடர்பான பேரழிவினாலும் சுமத்தப்பட்டதுமான மீன்பிடித்தலிலும், விவசாயத்திலும் (பிரதானமாக தெங்கு பயிர்ச் செய்கை) நிலையற்ற ஆரம்பநிலை உற்பத்தியின் காட்சிப் பரப்பின் மீது மூலதன செறிவினைக்கொண்டஉல்லாசத்தளப் பொருளாதாரமொன்றின் விதிப்புடன் பாசிக்குடா சித்தரிக்கப்படுகின்றது. பாதுகாப்பான வாழ்வாதாரமொன்றாக மீன்பிடித்தலைப் உல்லாசத்தளப் பொருளாதாரம் குறைத்து மதிப்பிடுவதனால், மீனவர்களைக் கவர்வதற்காக அதன் ஊதிய சரீர உழைப்பினை அது சமமாக அல்லது சரியாகச் செய்துள்ளது. அதனுடைய சிறப்புரிமை தொடர்பில் வீழ்ச்சியடைகின்ற மீன்பிடி போன்ற வேறு சூழல் காரணிகளுடன் இணைந்ததாகக் காணப்படுகிற மீனவர்களுக்கான ஆதரவின் பற்றாக்குறைக்கான காரணிகள் போன்றவற்றில் அரசாங்கத்தினால் அதிகளவு செய்ய வேண்டியுள்ளது.

இன்று பாசிக்குடாவில்,உள்ளூர் விநியோகச் சங்கிலியினுள் மீனவர்களின் ஒன்றிணைப்பானது பொதுவாக கீழ்மட்டத்திலேயே நிகழ்வதுடன், மீன்பிடித்தலின் நிச்சயமின்மையிலான தன்மையின் கருத்து என்னவெனில், பெறுமதிச் சங்கிலியின் அடிப்புறத்திலும் வேறு வாழ்வாதாரங்களுக்கு சார்புரீதியில் ஈடில்லாத ஆபத்துக்களுக்கு அவர்கள் முகங்கொடுக்கிறார்கள். அவ்வாறாக, உல்லாசத்தளமொன்றில் தோட்டக்காரர் ஒருவராக இருப்பது என்பது சார்புரீதியில் குறைந்த ஆபத்துடன் ஊதியக் குவியலின் அடிப்புற முடிவில் ஒன்றிணைப்பது கவர்ச்சிகரமாக வெளிப்படுகின்றது. ஊதிய சரீரஉழைப்பாளர் ஒருவராகவும், தன்னிச்சையிலான ஆரம்பநிலை உற்பத்தியாளர் ஒருவராகவும் இருப்பதுடன் தற்சார்புத்தன்மைகள் இருந்த போதிலும் சுதந்திரமானது குறிப்பிடத்தக்கவிதத்தில் வேறுபட்டதாக தளர்ந்ததாக இருந்தாலும், பின்னையதுடன் இணைந்துள்ள அதிகரித்து வருகின்ற நிச்சயமின்மையும், ஆபத்துக்களும் சுற்றுலாத்துறையில் ஊதிய சரீர உழைப்பினை நோக்கி மக்களைத் தள்ளுகிறது. இதன் சிறப்பியல்பு இனிவரவுள்ள பகுதியில் கலந்துரையாடப்படவுள்ளது.

பொதுமக்களின் பிரதிநிதித்துவ மன்றங்களை அணுகுவதில் சந்தேகங்களுடன் ஆரம்பநிலை உற்பத்தியின் குறைத்து மதிப்பிடுதல் விடுவித்துக்கொள்ளமுடியாதபடி இணைக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் கடற்கரையைப் பயன்படுத்துவது அதன் பழங்காலப் பண்பு கெடாததாக விளங்குவதற்கும், சுற்றுலாப்பயணிகளுக்கு ஒதுக்கிவைக்கப்படுவதற்கும் எதிராக சிக்கலை ஏற்படுத்துகிறது. உத்தியோகபூர்வ இறங்குதுறை அதிகளவு தூரத்தில் இருப்பதனாலும், சிறியதாக இருப்பதனாலும் உள்ள பிரச்சனைகளின் காரணமாக உல்லாசத்தளங்களுக்கு அருகிலுள்ள கடலோரத்துண்டினை சில மீனவர்கள் தொடர்ந்தும் பயன்படுத்துவதனால், அங்கிருந்து நகரும்படி உல்லாசத்தளங்களினால் தொடர்ச்சியான அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். கடற்கரைகளை காவல் காப்பதற்கு அனேகமாக தனியார் பாதுகாப்பினையே பாரிய உல்லாசத்தளங்கள்பயன்படுத்துவதுடன், அவர்கள் பிரவேசித்தலையும், வெளியேறுதலையும்கட்டுப்படுத்துகின்றனர். உண்மையில், சகல சுற்றுலாப்பயணிகளும் ஒரே மாதிரியானவர்கள் அல்லர். உள்ளூர் சுற்றுலாப்பயணிகள் ஒரு 'பொதுப் பகுதியைக்' கொண்டுள்ளனர். இது பிரத்தியேகத்தன்மையையும்,உல்லாசத்தளங்களைச் சார்ந்திருக்கும் கடற்கரை முகப்பின் நிதர்சனமான தனியார்மயப்படுத்தலையும் பொருள்படுத்துகிறது.

முருகைக்கல் அழிவின் காரணங்கூறல்களைப்பற்றி பிரதேச மற்றும் மாவட்டச் செயலக அலுவலர்களுடனான கலந்துரையாடல்களில் வெளிப்பட்டன. முன்னைய அரசியல் ஆட்சியுடனான நெருக்கமான அனுசரணை உறவுகளுடன் ஒரு உல்லாசத்தளத்தின் உரிமையாளர்கள் *'தமது விருந்தினர்களுக்கு நீச்சலடிப்பதற்காக நீரை மிகவும் பொருத்தமானதாக்குவதற்காக ஆதனத்தின் (ஹோட்டேலின்) முன்னால் உள்ள முருகைக்கற்பாறைத் தொடரை உடைத்ததாக ஓர் அலுவலர் குறிப்பிட்டார். தற்போது அவர் கடலரிப்புப் பிரச்சனைகளைக் கொண்டிருப்பதுடன்,*

*அதற்காக பிரதேசச் செயலக அலுவலகத்திற்கு அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்'* (நேர்முகங்காணல், 28 ஜனவரி 2015). எனினும், இந்தக் குற்றச்சாட்டினைக் கொழும்பில் உள்ள கரையோரப் பேணல் திணைக்களத்தைச் சேர்ந்த மத்திய அரசாங்கப் பிரதிநிதியொருவர் மறுத்துரைத்தார். சந்தேகத்தில் உள்ள உல்லாசத்தளத்தின் முகாமையாளர் ஒருவருடனான நேர்முகங்காணல் ஒன்றில், முருகைக் கற்பாறைத் தொடர் குறித்து நாம் கேள்வியொன்றை முன்வைத்தோம். *'அது (கற்பாறைத்தொடர்) ஹொட்டேலின் சரியாக முன்புறத்தில் நீர் விளையாட்டுக்களை நாம் வழங்க முடியாதபடி இருப்பதனால் எமக்கு பிரதிகூலமொன்றாக விளங்கியது. ஆனால், சூழல் கரிசனைகளையிட்டு நாம் புரிந்துகொண்டுள்ளதுடன், கரையோரப் பேணல் திணைக்களத்துடன் பணியாற்றுவதுடன், அவர்களது விதிகளுக்கு இணங்குகின்றோம். வருடமொன்றுக்கு மூன்றிலிருந்து நான்கு வரையிலான தடவைகள் அவர்கள் சோதனைக்காக வருகின்றார்கள்'* என முகாமையாளர் பதிலளித்தார் (நேர்முகங்காணல், 4 மார்ச் 2015). தனது பதிலில் முகாமையாளர் நம்பகமாகவும், விசுவாசமாகவும் விளங்கிய அதேவேளை, அதன் மைய அலங்கார மேசை போல உல்லாசத்தளத்தின் விறாந்தையில் முருகைக்கல்லின் பாரிய துண்டொன்று அலங்கரிக்கப்பட்டிருப்பதை நாம் கவனித்தோம்.

கல்குடாவில் குடிநீர் ஒரு பற்றாக்குறையிலான மூலவளம் என்பதுடன், அதை அடைவதற்கு கணிசமானளவு மக்கள் இன்னுமே போராடிக்கொண்டிருக்கின்றனர். விடயங்களை மோசமாக்கும் விதத்தில், நிருமாணத்தின் ஆரம்பக் கட்டங்களின் போது கட்டிடத்திற்காக அதிகளவு நீரைப் பெருமளவு உல்லாசத்தளங்கள் வாரி இறைத்ததுடன்,கிணறுகளைச் சொந்தமாகக் கொண்டிருந்த தனிப்பட்டவர்களிடமிருந்தும் நீரைக் கொண்டு வந்தன. நிருமாணத்தின் பாரிய அளவை வழங்குகையில், உள்ளூர் நீர் மேடையின் பாரதூரமான வீழ்ச்சிக்கு இந்த நடைமுறை விரைவிலேயே இட்டுச்சென்றது. *'இந்தப் பிரச்சனையைச் சீரமைப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற போதிலும், ஆரம்பத்திலேயே எதிர்காலப் பிரச்சனைகளுக்கு சாத்தியமானதாக தயார்படுத்தும்வழியொன்றில் இது பற்றி ஏதாவது எண்ணியிருக்க வேண்டும்'* என வாழைச்சேனையிலிருந்து பெண் அரசாங்க அலுவலர் ஒருவர் தெரிவித்தார் (நேர்முகங்காணல், 29 ஜனவரி 2015). தரவு சேகரிக்கப்பட்ட நேரத்தில், தமது நாளாந்தச் செயற்பாடுகளுக்கு நீரை இறைப்பதற்கு தமது சொந்த முறைமைகளை சகல உல்லாசத்தளங்களும் கொண்டிருந்தன. அவர்களது அழிவற்றதன்மையிலான நீலக்கல் நீச்சல்தடாகங்கள் எப்பொழுதுமே நிறைந்திருந்த அதேவேளை, அவர்களது புற்றரைகள் மரகதப் பச்சையாகவும், வெதுவெதுப்பாகவும் இருந்ததுடன், அவர்களது jaccuziகள் (அடியிலிருந்து நீரை விசிறும் முறையிலான பெரியளவு குளியல் தொட்டிகள்) தெளிவான நீரைச் சுற்றிச்சுழற்றின. ஆனால், கல்குடாவில் உள்ள கிராமவாசிகளுக்கு குடிநீரை அடைவது நாளாந்தப் போராட்டமாகவே இருந்தது. கோறளைப்பற்றில் ஏறத்தாள 30%ஐக் கொண்ட குடித்தனங்கள் 250 மீட்டர்களினுள் நீர் மூலமொன்றுக்கான அடைதலைக் கொண்டிருக்கவில்லை; தமது வீடுகளின் வளவுகளினுள் அதே சதவீதத்திலான குடித்தனங்கள் தகுந்தசுகாதார வசதிகளுக்கான அடைதலைக் கொண்டிருக்கவில்லை (மட்டக்களப்பு மாவட்டச் செயலகம், 2015).

## 4.3 பாசிக்குடாவின் சுற்றுலாத்துறைப் பொருளாதாரத்தில் நிச்சயமின்மை, ஊதியத்திலான சீர்உழைப்பு மற்றும் தொழில்

ஊதிய சீர்உழைப்பின் கருத்து நோக்கிலிருந்து பாசிக்குடாவின் பொருளாதாரத்தைக் கரிசனைக்கெடுக்கையில், அதிக வளமிக்க ஆடம்பரத் தாபனங்களினதும், அத்துடன் குறைந்த செலவு, மலிவான வீட்டு-அடிப்படையிலான அல்லது சிறிய அளவிலான படுக்கை மற்றும் காலை உணவு தாபனங்களினதும் முறைமையான உல்லாசத்தளப் பொருளாதாரத்திற்கு இடையிலான வேறுபாட்டினை மீள்-வலியுறுத்துவது முக்கியமானதாகும். ஏழு அதிகவளமுள்ள உல்லாசத்தளங்கள்உள்ளதுடன், சகலவையுமே கடற்கரை நீள்வரித்துண்டின் மீது அமைந்துள்ளன. பதினான்கு சிறிய தாபனங்கள் கடற்கரைக்கு அடைதலின்றி உட்புறமாக உள்ளன.

பாசிக்குடாவின் சுற்றுலாத்துறை வலயம் போன்ற ஏதேனும் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றி பாரிய வாதாட்டத்திலான ஒன்று என்னவெனில், அது விசேடமாக உள்ளூர் சமூகங்களுக்கு தொழிலையும், வாழ்வாதாரங்களையும் தோற்றுவிப்பதற்கான தகுதியைக் கொண்டுள்ளது என்பதேயாகும். இது தொடர்பில் சுற்றுலாத்துறையின் பெருக்கு எண்ணிக்கையிலான விளைபயன் அடிக்கடி குறிப்பிடப்படுவதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் 18-25 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மத்தியில், உயர்வாகவுள்ள தொழிலற்ற வீதத்தின் தொடர்பில் குறிப்பிட்ட முக்கியத்துவத்தை அனுமானிக்கின்றது (மட்டக்களப்பு மாவட்டச் செயலகம், நேர்முகங்காணல், 28 ஜனவரி 2015). பாசிக்குடா பகுதி வித்தியாசமானதல்ல என்பதுடன், ஒரு தொகையைக் கொண்ட தொழிலாற்றுபவர்கள், தொழிலானது தன்மையில் உறுதியானதோ, பருவகாலத்திலானதோ அல்லது இடையிடையிலானதோ என்றில்லாமல் தெங்குச் சபை காணி மீது

வேலை செய்வதிலிருந்து, கட்டுமானம் மற்றும் பூச்சுப் பூசுதல், மீன்பிடிப் படகுகளில் அல்லது பண்ணைகளில் வேலை செய்தல் அத்துடன் உண்மையில் உல்லாசத்தளங்களில் அல்லது விருந்தினர் இல்லங்களில் வேலை செய்வது வரை பலதரப்பட்ட ஊதியத்திலான சரீரஉழைப்பில் ஈடுபட்டுள்ளதாக இளைஞருடனான நோக்குக் குழு கலந்துரையாடல்களில் வெளிப்பட்டது.

விசேடமாக பாசிக்குடாவிலும், அதனைச் சுற்றியும் தேர்ச்சித்திறன்களுக்கான இடைவெளியின் காரணமாக உள்ளூரில் பணிக்கமர்த்துதலில் உள்ள கஷ்டங்கள் பற்றி இந்த ஆய்வுக்காக நேர்முகங்காணப்பட்ட பெருமளவு உல்லாசத்தள முகாமையாளர்கள் திரும்பத் திரும்ப குறிப்பிட்டார்கள். இக் கருத்து பற்றி கீழே மேலும் கலந்துரையாடப்படுகின்றது. ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களது தொழிலின் தன்மை மற்றும் எத்தனை பேர் உள்ளூர்வாசிகள் என்பன பற்றிய அச்சொட்டான விபரங்களை வழங்குவதற்கு உல்லாசத்தளங்கள் எதுவும் இணங்கவில்லை. இருந்த போதிலும், தமது பணியாளர்களில் 30-40% இனர் உள்ளூர்வாசிகள் என மூன்று முகாமையாளர்கள் வலியுறுத்திய அதேவேளை, 60% என்றவாறு எண்ணிக்கை உயர்வானது என இன்னொருவர் தெரிவித்தார்.

ஆனால், அரசாங்க அலுவலர்களினாலும், பாசிக்குடாவில் உள்ள சமூகங்களைச் சேர்ந்த மக்களினாலும் அத்துடன் சிவில் சமூக நிபுணர்களினாலும் வழங்கப்பட்ட தகவலை இந்த விகிதாசாரம் முரண்படுத்தியது. தமது சொந்தச்சமூகத்திலிருந்து ஒரு சிலரே உல்லாசத்தளங்களில் பணியாற்றுவதாக அவற்றில் தொழிலாற்றும் பெருமளவு உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். எல்லாமாக அண்ணளவாக 60 உள்ளூர்வாசிகள் மட்டுமே சகல உல்லாசத்தளங்களிலும் பணியாற்றுவதாக கல்குடாவில் உள்ள உள்ளூராட்சிச் சபை அலுவலர் ஒருவரும், வாழைச்சேனையில் உள்ள பிரதேசச் செயலக அலுவலகத்தில் உள்ள அலுவலர் ஒருவரும் தெரிவித்தனர். ‘உள்ளூர்வாசி’ என எவ்வாறு உல்லாசத்தள முகாமையாளர்கள் வரையறுக்கின்றனர் என்பதே முரண்பாட்டுக்கான ஒரு காரணமாகும். மாவட்டத்தில் அல்லது மாகாணத்தில் கூட உள்ள ஏதாவது இடத்திலிருந்து வரும் மக்களை உள்ளூர்வாசிகளாக அவர்கள் அனேகமாக கருதுகின்றார்கள்.

ஒரு நோக்குக் குழு கலந்துரையாடலின் போது, பட்டியடிச்சேனையிலிருந்த ஓர் இளம் நபர் பின்வருமாறு தெரிவித்தார்: *‘தமது வேலையில் ஹொட்டேல்கள் எம்மை அதிகளவு ஈடுபடுத்தினாலும் நாம் ஹொட்டேல்களில் வேலை செய்வதில் மகிழ்ச்சியடைகிறோம். எம்மால் கொழும்புக்குச் சென்று தொழில்களைக் கேட்கமுடியாது, ஏனெனில் அது எமது இடம் அல்ல. நாம் இங்கிருந்தே வருகின்றோம் என்பதுடன், அவர்கள் எமது நிலத்தில் இருக்கிறார்கள். ஆனால், எமக்கு இன்னுமே தொழில்கள் இல்லை’* (‘அருண்’, ஆண், இளைஞர் நோக்குக் குழுக் கலந்துரையாடல், பட்டியடிச்சேனை, 5 மார்ச் 2015).

வேறு வகையில் சொல்வது என்றால், சுற்றுலாத்துறைப் பொருளாதாரத்திலிருந்து தொழிலை நாடுகின்ற உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் உள்ளனர், ஆனால் அது அவர்களுக்கு கிடைப்பதில்லை. இளைஞர்கள் தொழிலாற்றக்கூடியதாக விளங்குவதற்கு பகுதியில் சிறந்த ஹொட்டேல் பாடசாலை இல்லாமையே ஹொட்டேல்களில் தொழிலாற்றும் உள்ளூர் இளைஞர்களுக்கு பற்றாக்குறை இருப்பதாக மட்டக்களப்பில் அரசாங்க அலுவலர் ஒருவர் தெரிவித்தார். அவரும், உண்மையில் ஏனையோரும் ஆங்கில அறிவின் பற்றாக்குறையை கீழ்கோடிட்டனர். உல்லாசத்தளங்களில் சில தொழில்களுக்கு அனேகமாக அவசியமொன்றாக ஆங்கிலம் இருப்பதே இன்னொரு காரணியாகும்.

இருந்தும், நிச்சயமின்மையை இடமாற்றாத விதத்தில் பாசிக்குடாவில் சுற்றுலாத்துறைப் பொருளாதாரத்தில் தொழில் தொடர்பில் திட்டமான தற்சார்புத்தன்மைகள் செயல்படுவது தெளிவாகும். தனது வயதை ஒத்த அதிகளவு படிக்காத அல்லது ஒரேயடியாகப் பாடசாலையை விட்டு விலகிச் சென்ற பெருமளவு ஏனையோரைத் தனக்குத் தெரியும் என பட்டியடிச்சேனையிலிருந்து 18 வயதான ‘நாதன்’ எம்மிடம் கூறினார். அவர் 15 வயதில் பாடசாலையிலிருந்து இடைநடுவில் விலகிக்கொண்டதுடன், ஸ்திரமானதொழிலொன்றை நோக்கிய அதேவேளை, பலதரப்பட்ட சூழ்நிலைக்கேற்ற தொழில்களில் ஈடுபட்டிருந்தார். தற்போது குழாய்களை இடும் தொழிலொன்றைக் கொண்டுள்ளார், ஆனால், இந்த வேலை தொடர்ச்சியானதல்ல. வெளிநாட்டுக்குப் புலம்பெயர்ந்து, குழாய்களை இடுகின்ற அல்லது வாகனமோட்டுகின்ற தொழிலொன்றைத் தேடிக்கொள்வதற்கு முயற்சிக்கின்றார். அவரது கூற்றுப்படி, வெளிநாடுகளில் தொழிலொன்றுக்காக ரூபா 50,000க்கும் ரூபா 1 இலட்சத்திற்கும் இடையிலான தொகையை எங்காவது உள்ளூர் முகவராண்மை ஒன்றுக்கு உள்ளூர் இளைஞர் கொடுப்பனவு செய்யலாம். இந்த முகவராண்மைகளில் ஒன்றுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னதாக, தனது வாகனம் செலுத்தும் அனுமதிப்பத்திரத்திற்காக அவர் தற்போது காத்திருக்கிறார். உல்லாசத்தளங்களில் பணியாற்றுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன, ஆனால், பெரும்பான்மையிலான ஊழியர்கள் சிங்களவர்கள் என்பதனால் இந்தத் தாபனங்களில் வேலை செய்வது அசௌகரியமானதாகும் என்பதை அவர் ஏற்றுக்கொண்டார் (நேர்முகங்காணல், 4 மார்ச், 2015).

மேலும் கலந்துரையாடப்பட்டவாறு, இந்த தற்சார்புத்தன்மைகளும், அவற்றுடன் இணைந்துள்ள உட்படுத்தலினதும், வெளியேற்றத்தினதும் விவரணங்களும் பால்நிலையிலான பரிமாணமொன்றையும் கொண்டுள்ளது. ஆனால், சுற்றுலாத்துறை பொருளாதாரத்தில் உள்ளூர்வாசிகளுக்கான தொழில் தெரிவுகள் பெரிதுமே திறன்தேர்ச்சியற்ற அல்லது குறைந்த பதவிவரிசைகளில் மட்டுமே இருந்தன என்பதை இந்த ஆய்வுக்காக பாசிக்குடா சமூகங்களிலிருந்து நேர்முகங்காணப்பட்ட பெருமளவு மக்களும், அரசாங்கச் சேவையில் இருந்தவர்களும் ஏற்றுக்கொண்டமையே தீர்மானமான பிரச்சனையொன்றாகும். ஹொட்டேல்களில் தாம் எவ்வாறு வேலையை தேடிக்கொண்டார்கள் என்பது தொடர்பில் பட்டியடிச்சேனையிலிருந்து இளம் ஆண்களைக் கொண்ட குழுவொன்று தெரிவித்தது:

ஹொட்டேல் ஒன்றில் அடித்தளத்தைக் கட்டுவதற்கு அல்லது தொழிலாளர்களாக வேலைசெய்வதற்கு உதவுமாறு எம்மிடம் கேட்கப்பட்டது. வேலை தற்காலிகமானது என்பதுடன், சிலநேரங்களில் அபாயகரமானது. நிருமாணத்திற்கு ஹொட்டேல் ஒன்றுடன் சரீரஉழைப்பு ஒப்பந்தமொன்றைக் கொண்டிருந்த கம்பனி ஒன்றுக்காக நாம் வேலை செய்தோம். அது ஒரு சரீரஉழைப்பு ஒப்பந்தம் என்ற காரணத்தினால், விரைவாகவே முடித்துவிடுவதற்காக எம் மீது மிக அதிகளவு அழுத்தம் இருந்தது. ('ரவி' ஆண், இளைஞர் நோக்குக் குழு கலந்துரையாடல், 5 மார்ச், 2015).

மேலும், உல்லாசத்தளப் பொருளாதாரத்தில் தொழிலாற்றும் உள்ளூர்வாசிகளின் உதாரணங்களும் உள்ளன. ஆனால், சமயாசமய அல்லது முறைசாரா ஒழுங்குகளின் கீழேயே துறையின் அங்கமாக உல்லாசத்தளங்கள் விளங்கிய போதிலும், ஸ்திரத்தன்மையையும், பாதுகாப்பினையும் பற்றாக்குறையாகவே வேலை கொண்டுள்ளது. உல்லாசத்தளங்களில் ஒன்றில் தோட்டக்காரர் ஒருவராகத் தொழிலாற்றுகின்ற பட்டியடிச்சேனையைச் சேர்ந்த பெண் ஒருவரான 'ஷீலா' கூறினார்: *'நான் எவ்வகையான ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கிறேன் என்பதையிட்டு எனக்குத் தெளிவில்லை. இது ஒரு வருடத்திற்கு அல்லது வெறுமனே ஒரு சில மாதங்களுக்கு இருக்கலாம்'* (நேர்முகங்காணல், 27 மார்ச் 2015). தோட்டக்காரர் ஒருவராக அவர் ஏதேனும் நன்மைகளைப் பெறுவதில்லை, ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (ஊ.சே.நி.) அல்லது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ஊ.ந.நி.) அவர் அடைதலைக் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் கூறினார். எனினும், ஒவ்வொரு ஊழியரும் ஊ.சே.நி./ஊ.ந.நி. ஆகியவற்றுக்கு பதிவுசெய்யப்பட வேண்டும் என்பதைக் கோரும் தொழில் திணைக்களத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான ஒழுங்குவிதிகளை இது முரண்படுத்துகின்றது.

ஊழியர்களுக்கு உரியதை வழங்குவதைத் தவிர்ப்பதற்காக புதுமையான வழிகளைப் உல்லாசத்தளங்கள் கண்டறிகின்ற தருணங்களையிட்டும் நாம் கேள்விப்பட்டோம். உதாரணமாக, ஒரு உல்லாசத்தளத்தில் ஆறு மாதங்களின் பின்னர் சேவைக் கட்டண அதிகரிப்பொன்றுக்கு ஊழியர்கள் உரித்துடையவர்களாவர். எனினும், ஆறு மாதங்களைக் கொண்ட காலத்தை அண்மிக்கின்றவர்களைப் பணியாளராக வைத்திருப்பது முகாமையாளருக்கு கஷ்டமென்றபடியால், அவர்களை வெளியேறும்படி செய்துவிடுவார் என பாரிய உல்லாசத்தளங்களின் ஒன்றில் ஏற்கனவே வேலை செய்த பட்டியடிச்சேனையைச் சேர்ந்த இளம் ஆண் ஒருவரான 'ராஜன்' (25) தெரிவித்தார். அடுத்து வேறு யாரேனும் ஒருவரை உல்லாசத்தளம் பணிக்கமர்த்தி, குறைந்த சேவைக் கட்டணங்களைக் கொடுப்பனவு செய்யும் (இளைஞர் நோக்குக் குழு கலந்துரையாடல், 5 மார்ச் 2015).

தமது உரிமைகளையிட்டு ஊழியர்கள் அனேகமாக அறிந்திருக்கவில்லை. இது உல்லாசத்தளங்களை தொழில் ஒழுங்குவிதிகளுக்கு ஒழுகி நடப்பதைத் தவிர்ப்பதற்கு இயலச்செய்துள்ளது. அவர்கள் ஊழியர்களை நடத்தும் விதத்தில் முரண்பட்ட தன்மையும் உள்ளது. அத்துடன் உல்லாசத்தளங்கள் வழங்கவேண்டியதாக ஊழியர்கள் கோரும் உரித்துரிமைகளுக்கும், உண்மையிலேயே ஊழியர்கள் எதைப் பெறுகிறார்கள் என்பதற்கும் இடையில் இடைவெளியொன்றுள்ளது. உதாரணமாக, பயிற்சியாளர்கள் சேவைக் கட்டணங்களைப் பெறுகின்றார்களா எனக் கேட்கப்பட்ட போது, தாம் வழங்குவதாக ஒரு உல்லாசத்தளத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். ஆனால், இதை ஊழியர் ஒருவர் மறுத்துரைத்தார். மேலும், கிரமமான மாற்று வேலையொன்றின் காலம் எட்டிலிருந்து ஒன்பது வரையிலான மணித்தியாலங்கள் என அதே முகாமையாளர் பட்டியலிட்டார். பத்திலிருந்து பன்னிரண்டு மணித்தியால மாற்று முறை வேலைகளே உண்மையில் வழமையானதும் என்றும், *'பகல் போசனத்திற்கு அல்லது இராப்போசனத்திற்கு ஒரு மணித்தியால இடைவேளை'* கூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் அதே உல்லாசத்தளத்தின் இன்னொரு முகாமையாளர் குறிப்பிட்டார் (மதுபான முகாமையாளர்,உல்லாசத்தளம் "RBA" நேர்முகங்காணல், 29 ஜனவரி 2015).

மூலதனத்தின் முறைமையான சுற்றினுள் சரீரஉழைப்பின் முறைசாராத்தன்மையை நிலைத்திருக்கச் செய்யும் தாபனங்களாக மட்டும் உல்லாசத்தளங்கள் விளங்கவில்லை. விருந்தினர் இல்லப் பொருளாதாரமானது உள்ளூர் சரீரஉழைப்பு மீது பெரிதுமே பிரத்தியேகமாக நம்பியிருக்கின்ற அதேவேளை, அதன் நிச்சயமின்மை முறைசாரா சிறப்பியல்பில் பிரதிபலிக்கின்ற நிலைமைகளில் அவ்வாறாகச் செய்கின்றன. இந்த ஆராய்ச்சியின் அங்கமாக உள்ளூர்

விருந்தினர் இல்லங்களிலிருந்து ஏழு முகாமையாளர்கள் நேர்முகங்காணப்பட்டதுடன், ஊ.சே.நி./ஊ.ந.நி. ஆகியன தொடர்பில் தொழில் திணைக்களத்தின் விதிகளுடன் மூன்று முகாமையாளர்கள் இணங்குகின்ற அதேவேளை, ஊ.சே.நி./ ஊ.ந.நி. நன்மைகளை அல்லது சேவைக் கட்டணங்களை அல்லது சுகாதாரக் காப்புறுதியை வழங்காத தாபனங்களும் உள்ளன. குறைந்த இலாபங்கள் மீதான பற்றாக்குறையான நன்மைகளையிட்டு ஒரு விருந்தினர் இல்ல முகாமையாளர் குறைகூறியதுடன், இலாபங்கள் அதிகரிக்கும் வரை ஊழியர்களுக்கான நன்மைகளை ஏற்றுக்கொள்வது தாபனங்களின் உரிமையாளர்களுக்கு கட்டுப்படியாகாது எனத் தெரிவித்தார். முறைமையை அசட்டை செய்வதற்காகத் தொழில் திணைக்களத்தின் அனுகூலத்தை முன்னெடுப்பதற்கு ஏனைய முகாமையாளர்களினால் இயலக்கூடியதாகவிருந்தது.

மூன்று மாதங்களின் பின்னர் ஊ.சே.நி./ஊ.ந.நி. ஆகியவற்றைப் பெறுவதற்கு அவர்கள் (ஊழியர்கள்) உரித்துடையவர்களாவர். அவர்கள் தம்மை நிரூபிக்கும் வரை அவர்களுக்கு ஊ.சே.நி./ஊ.ந.நி. ஆகியவற்றை உடனடியாகவே வழங்க நாம் விரும்பவில்லை என்பதுடன், அவர்கள் சடுதியாக விலகிவிடமாட்டார்கள் என்பதையிட்டு நாம் நிச்சயமாகக்கவுள்ளோம். ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறையே தொழில் திணைக்களம் சோதனை செய்கின்றது. இதனால் ஊ.சே. நி./ஊ.ந.நி. ஆகியவற்றை நாம் வழங்குவதை நிறுத்திவைத்திருக்கிறோமா என அவர்களுக்குத் தெரிவதில்லை (உள்ளூர் விருந்தினர் இல்ல உரிமையாளர், நேர்முகங்காணல் 19 மார்ச் 2015).

உயர்வான மொத்த விற்பனை, குறைந்த மேல்நோக்கிய நகரும்தன்மை மற்றும் குறைந்த சம்பளங்கள் ஆகியவற்றினால் விருந்தினர் இல்லப் பொருளாதாரத்தில் தொழில் சித்தரிக்கப்படுகின்றது.

பொதுவாக, விருந்தினர் இல்லமொன்றில் ஊழியர் ஒருவர் தொடர்ந்திருக்கும் ஆகக்கூடுதலான காலம் ஒரு வருடமாகும். அறைப் பையன்கள் (Room Boy), சுத்திகரிப்பாளர்கள் மற்றும் சமையலறைப் பணியாளர் ஆகியோராக பணியாற்றுபவர்களுக்கான சராசரி வருமானம் மாதமொன்றுக்கு ரூபா 12,000க்கும் 15,000க்கும் இடைப்பட்டதாகும் என்பதுடன், இது எமது பெருமளவு பதிலிறுப்பாளர்களின் கூற்றுப்படி வாழுகின்ற ஊதியமொன்றல்ல. இத்தகைய குறைந்த சம்பளங்களுக்கு தம்மால் வேலை செய்யமுடியாது என்ற காரணத்தினால் தமது ஐந்து ஊழியர்களில் இருவர் விலகிச் சென்றுவிட்டதாக முகாமையாளர் ஒருவர் தகவல் வெளியிட்டார். தமது தாபனத்தில் உள்ள சகல ஊழியர்களும் நிரந்தரமானவர்கள் என அதே முகாமையாளர் தெரிவித்தார். ஆனால், தமது முறைமையான தொழிலைக் காட்டும் ஒப்பந்தங்களை அல்லது ஏதேனும் ஆவணங்களை அவர்கள் கொண்டிருக்கவில்லை என்பதைப் பணியாளருடனான நேர்முகங்காணல்கள் வெளிப்படுத்தின. சில விருந்தினர் இல்லங்கள் குடும்ப சரீர உழைப்பிலேயே நம்பி இருந்ததுடன், அவை குடும்ப ஊழியர்களுக்கு சம்பளங்கள் அல்லது நன்மைகள் வழங்கவில்லை என்பது இன்னொரு பிரச்சனையாகும்.

பெருமளவு உல்லாசத்தளங்களும், விருந்தினர் இல்லங்களும் கிரமமான பருவ காலத்திற்கும், பருவமற்ற காலத்திற்கும் வேறுபட்ட நேரங்களை வினைப்படுத்தியதுடன், இது வேலைசெய்யும் நேரங்கள், சம்பளங்கள் மற்றும் நன்மைகள் ஆகியவற்றில் முரண்பட்டதன்மையொன்றுக்கு இட்டுச்செல்கின்றது. சகல தாபனங்களும் தமது ஊழியர்களுக்கு ஊ.ந.நி./ ஊ.ந.நி. ஆகியவற்றுக்கான அடைதலை உறுதிப்படுத்துவதற்காக தொழில் பதிவு அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்வது அவசியம் என்ற போதிலும், ஒரு சில உல்லாசத்தளங்களும், விருந்தினர் இல்லங்களும் ஒரு போதுமே பதிவுசெய்யவில்லை என்றும், சோதனையொன்றை திணைக்களம் நடத்திய பின்னர் நிர்பந்திக்கப்பட்டது என்றும் மட்டக்களப்பில் தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த பெண் அலுவலர் ஒருவர் தெரிவித்தார் (நேர்முகங்காணல், 18 மார்ச் 2015). மேலும், விருந்தினர் இல்லங்கள் போன்ற சிறிய தாபனங்கள் புதிய ஊழியர்கள் பற்றி திணைக்களத்திற்கு அறிவிப்பதில்லை என்ற அதேவேளை, கொழும்பில் உள்ள தொழில் திணைக்களத்துடன் சில உல்லாசத்தளங்கள் பதிவுசெய்துள்ளன. இது தமது ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற்றைச் சேகரிப்பதற்கு அவர்களது ஊழியர்களின் தகுதியை சிக்கலாக்குகின்றது. ஏனெனில், அவ்வாறு செய்வதற்கு அவர்கள் தலைநகரத்திற்கு பிரயாணம் செய்யவேண்டியிருந்தது.

உல்லாசத்தள மற்றும் விருந்தினர் இல்லப் பொருளாதாரங்களில் வேலைசெய்பவர்களினால் அனுபவிக்கப்படும் முறைசாரா வேலைசெய்யும் நிலைமைகளைத் தொடர்ந்திருக்கச் செய்வதில் மாகாண மற்றும் மாவட்ட தொழில் திணைக்களத்திலான செயற்பாட்டிலும், நுண்ணாய்விலும் உள்ள இடைவெளிகள் பங்களிக்கின்றன. ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை தாபனங்களை

திணைக்களம் சோதிக்க வேண்டும். ஆனால், 1,800 தாபனங்களை அண்ணளவாக 25 வெளிக்கள அலுவலர்கள் சோதிக்க வேண்டும் என்பதனால், அவ்வாறாகச் செய்வதற்கு மூலவளங்களுக்கு பற்றாக்குறை உள்ளதாக அலுவலர்கள் குறிப்பிட்டனர். மேலதிகமாக, இணக்கமின்மையை அறிக்கையிடாமல் இருப்பதற்கு வெளிக்கள அலுவலர்களை இட்டுச் செல்லும் விதத்தில் ஊழலின் தருணங்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பால்நிலை, இனத்துவம், பயிற்சியாளர்

எதிர் நிரந்தரமான பணியாளர், உள்ளூர் எதிர் உள்ளூர் சாராத பணியாளர் மற்றும் ஒப்பந்தங்களினதும், தொழிலினதும் வேறுபடுகின்ற வகைகள் மற்றும் மட்டங்கள் ஆகியன தொடர்பிலான தகவல் சேகரிக்கப்படவில்லை என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டார். இந்தத் தகவலின் பெறுமதியை அலுவலர் ஏற்றுக்கொண்ட அதேவேளை, வழங்கப்பட்டுள்ள மூலவளங்களின் பற்றாக்குறையையும், தாபனங்களின் வெறும் எண்ணிக்கையையும் கொண்டு, இந்த மட்டத்திலான தரவுகளைச் சேகரிப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் சாத்தியமானதல்ல என்பதற்கு ஆதரவளித்தார்.

## 4.4 பாசிக்குடாவின் சுற்றுலாத்துறைப் பொருளாதாரத்தில் பெண்களின் தொழில்

(ஹொட்டேலில் வேலை செய்கையில் அதனுடன் இணைந்துள்ள களங்கத்தை அவர் எவ்வாறு கையாண்டார் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில்)'நான் அதைப்பற்றி கவனத்திற்கு எடுப்பதில்லை. நான் என்ன செய்கிறேன் என்று எனக்குத் தெரியும்; அத்துடன் வேலைக்குப் புறம்பாக வெளியில் நான் அதிகளவைச் செய்வதில்லை. நான் எனது குடும்பத்தைப் பற்றியே எப்பொழுதும் நினைக்கின்றேன். இவர்கள் (ஆசைகளைத் தூண்டுபவர்கள்) எனக்கு உதவுவதில்லை. இதனால் இவர்களைப் பற்றி என்னால் கவனத்திற்கெடுக்க முடியாது. கிராமங்களில் உள்ள ஹொட்டேல்களின் உள்ளே என்ன நடக்கிறது என்று ஆட்களுக்குத் தெரியாது என்பதுடன், இதை வைத்து அவர்கள் இந்தத்துறையில் வேலை செய்யும் பெண்களைத் மதிப்பிடுகிறார்கள்? ('பிரியா', பெண், 29, நேர்முகங்காணல், கரங்கலைச்சோலை, 28 மார்ச், 2015).

வாழ்க்கைக்காக நான் என்ன செய்கிறேன் என்று ஆட்கள் கேட்டால், ஹொட்டேல் ஒன்றில் வேலை செய்கிறேன் என்றே எப்பொழுதும் கூறுவேன். ஹொட்டேல்களில் வேலை செய்யும் பெண்களைப் பார்த்து முகம் சுளித்தாலும் உண்மையைச் சொல்வதில் எனக்குப் பிரச்சனைகள் இல்லை... பெண்களைப் பற்றித் தெரிந்த குடும்பத்திற்கு நெருக்கமான ஆட்கள் ஏதேனும் விஷமத்தனமாகக் கூறமாட்டார்கள். ஆனால், ஹொட்டேல்களில் வேலை செய்யும் பெண்களை நோக்கி ஏனையோர் - உறவினர்கள், அயலவர்கள் - மறுதலையிலான மனப்போக்குகளைக் கொண்டிருப்பார்கள். ஹொட்டேல் ஒன்றில் வேலை செய்வதற்கு நான் எனது மகளை அனுமதிக்கமாட்டேன் ('சாயா', பெண், 52, நேர்முகங்காணல், கரங்கலைச்சோலை, 6 மார்ச், 2015).

பொதுவாக, இது என் மீது நடத்தப்படாவிட்டாலும் கண்ணோட்டம் மறுதலையிலானதாகும். முன்னர் மறுதலையிலான மனவுணர்வுகளின் காரணமாக நான் நம்பிக்கையற்றவளாக விளங்கினேன். ஆனால், இவ்வாறு நினைப்பதை நான் நிறுத்திவிட்டேன். ஏனெனில் எனது வாழ்க்கையை இப்படித்தான் வாழ வேண்டும்... 10%ஐக் கொண்ட ஆட்கள் தவறு செய்யக்கூடும். ஆனால், 90%இனர் விசுவாசத்துடன் வேலை செய்கிறார்கள். ஒரு சில ஆட்கள் மீதான அடிப்படையில் முழு தொழிற்துறையையும் உங்களால் சீர்தூக்கிப் பார்க்க முடியாது ('செல்வி', பெண், 35, நேர்முகங்காணல், பட்டியடிச்சேனை, 27 மார்ச், 2015).

எந்தப் பெண்ணும் விருப்பத்துடன் ஹொட்டேலுக்குச் சென்று, வேலை செய்யமாட்டாள். ஆனால், குடும்பத்திற்கு அதிகளவு வருமானத்திற்கான அவசியம் இருந்தால் அல்லது கணவர் மது அருந்துபவராக இருந்து, பணத்தை வீண்விரயம் செய்தால் ஹொட்டேல் ஒன்றுக்கு பெண் ஒருவர் சென்று, வேலை செய்யத்தான் வேண்டும். சில இளம் பெண்கள் செல்வதற்கு இணக்கமாக இருக்கிறார்கள். ஆனால், திருமணமான பெண்கள் போவதில்லை ('வாணி', பெண், பெண்களுடனான நோக்குக் குழு கலந்துரையாடல், பட்டியடிச்சேனை, 5 மார்ச், 2015).

பாசிக்குடாவின் ஹொட்டேல் தொழிற்துறையில் வேலைசெய்யும் இரு ஆண்களையும், இரு பெண்களையும் நாம் சந்தித்தோம். சமூகக் கட்டுப்பாடுகளும், சவால்களும் இருந்த போதிலும், ஹொட்டேல் தொழிற்துறையினால் தோற்றுவிக்கப்பட்ட தொழிலை இப் பெண்கள் தழுவியுள்ளதுடன், அதை மதிக்கின்றார்கள். இருந்த போதிலும், மேலே வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள், தெரிவுத்தன்மை இன்மையின் மீது சிலவேளைகளில் ஓரம்கட்டியுள்ள ஆழமான பொருள் தெளிவின்மையொன்றுடன் எவ்வாறு அவர்களது உறுதிப்பாடு உடன் சேர்ந்திருக்கிறது என்பதை நினைவில் நிற்கச்செய்கிறது. ஹொட்டேல் தொழிற்துறையில் பெண்களுக்கான தொழில் 'தெரிவுக்கு அப்பாலானது' அல்ல என்று கூட புனையப்படுகின்றது. ஆனால், பதிலாக குடும்பத்தின் 'அதிகளவு தேவையினால்' செலுத்தப்படுகின்றது. பிரியாவினதும், வாணியினதும் கருத்துக்கள் எவ்வாறு 'குடும்பத்தின் பெயரில்' சக்திமிக்க சட்டபூர்வமான கருத்தாடலொன்று தொடர்கின்றது என்பதைக் கீழ்கோடிடுகின்றது.

[7]பாசிக்குடாவின் வாழ்க்கைச்செலவுரூபா 20,000–25,000ஆக கருதப்படுகிறது.
(நோக்குக் குழுக் கலந்துரையாடல், வாழைச்சேனை பிரதேச செயலகம் - ஜனவரி28, 2015).

தொழிற்துறையின் அறிவினதும், புரிந்துணர்வினதும் பற்றாக்குறையை தொழிற்துறையில் பணியாற்றும் பெண்கள் வலியுறுத்தினர் - அதாவது அவர்களை மறுதலையாகச் சீர்தூக்கிப்பார்க்கும் வெளியில் உள்ளவர்களின் சம்பந்தம் மீதான தப்பெண்ணமாகும். எனினும், வாழ்வாதாரத்தின் அவர்களது தெரிவு தொடர்பில் அவர்களது சுய-உறுதிமொழியானது சாயாவின் விடயத்தில் உள்ளவாறு தமது காலடிகளை அவர்களது மகள்மார்களும் பின்பற்றுவதற்கு அவர்கள் தேவையின்றி விரும்பமாட்டார்கள் என்பதை கருத்தாக வழங்கவில்லை. 10%ஐக் கொண்டவர்களால் சார்த்துரைக்கப்பட்ட 'தப்பான காரியங்களிலிருந்து' உட்பட நிச்சயமற்ற நிலைமைகளும், அழுத்தங்களும் அத்துடன் மட்டுப்படுத்தல்களும் (செல்வியின் கூற்றுப்படி) கீழே வேறு பெண்களின் அவதானிப்புகளினால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு எவ்வழிகளிலேனும் குற்றங்குறை காணும் தகுதியற்றவையாகும்.

பெண்கள் வெளிநாடுகளுக்கு (மத்திய கிழக்கு புறநீங்கலாக) செல்வது சரியானதாகும். ஆனால், ஹொட்டேல் தொழிற்துறையில் வேலை செய்யும் போது, அது அவர்கள் மோசமான ஒழுக்கத்தைக் கொண்டவர்கள் என்ற கருத்தினை ஆட்களுக்கு வழங்கும் ('ஸ்ரீ', 27 நேர்முகங்காணல், கரங்கலைச்சோலை, 6 மார்ச், 2015).

பெண்கள் ஹொட்டேல்களில் வேலை செய்யும் போது அவர்கள் பற்றி சமூகம் வம்புபேசும். இது பெண்களின் கௌரவத்திற்கு சரியானதல்ல ('தீபம்', பெண்களுடனான நோக்குக் குழு கலந்துரையாடல், பட்டியடிச்சேனை, 5 மார்ச், 2015).

ஹொட்டேல்களில் வேலை செய்யும் பெண்கள் எதிர்மறையான பின்னணியொன்றில் நோக்கப்படுகின்றனர். ஹொட்டேல்களில் அதிகளவு வெளியார் சுற்றித்திரிவதே இதற்கான காரணமாகும். ('சாரதா', பெண்களுடனான நோக்குக் குழு கலந்துரையாடல், பட்டியடிச்சேனை, 5 மார்ச், 2015).

ஹொட்டேல் ஒன்று நன்றாகக் கொடுப்பனவு செய்தால், அதில் வேலை செய்வதையிட்டு நான் பொருட்படுத்தமாட்டேன். ஆனால், அதை எனது பெற்றோர் அனுமதிக்கமாட்டார்கள். ஹொட்டேல்களில் வேலை செய்யும் பெண்களைப் பற்றி இக் கிராமத்தில் உள்ள இளைஞர்கள் கேவலமாகக் கதைக்கிறார்கள். ஹொட்டேல்களில் பெரும்பான்மையான ஊழியர்கள் ஆண்கள் என்ற காரணத்தில், பெண்கள் கேலியும், தொந்தரவும் செய்யப்படுகிறார்கள் என அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், சும்மா வேலைக்குச் செல்லும் போது கூட வீதியில் அதிகளவு கேலி செய்யப்படுகின்றோம். ஹொட்டேல்களில் வேலை செய்யும் பெண்களை அவர்கள் ஏன் இலக்குப்படுத்துகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஹொட்டேல்கள் ஆண் ஆதிக்கத்திலான இடமொன்றாக இருப்பதன் காரணமாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன் ('அனு', 21, நேர்முகங்காணல், கரங்கலைச்சோலை, 6 மார்ச் 2015; மேற்படி சாயாவின் மகள்).

ஹொட்டேலின் உள்ளே நீங்கள் வேலை செய்தால் ஆட்கள் மோசமாகக் கதைப்பார்கள். ஹொட்டேலின் உள்ளே வேலை செய்ய நான் விரும்பவில்லை. சலவை செய்தல் மற்றும் அறையைப் பராமரித்தல் ஆகியனவே சாத்தியமான தொழில்களாகும். ஆனால், இந்தத் தொழில்களுக்கு ஆண்கள் மட்டுமே செல்கிறார்கள். ('பவி', 37 நேர்முகங்காணல், பட்டியடிச்சேனை, 27 மார்ச் 2015).

ஹொட்டேல்களில் பெண்களுக்கான இடத்தையிட்டு கலந்துரையாடுவதற்கான அக்கறையிலான அணுகுமுறையொன்றை பவியின் கருத்துக்கள் சுட்டிச்சொல்கின்றன. 'ஹொட்டேலின் உள்ளே' என்பதை - அதாவது சலவைசெய்தல் மற்றும் அறையைப் பராமரித்தல் ஆகியவற்றை தோட்டச்செய்கை அல்லது முன்புற அலுவலகத்தில் வேலை செய்தல் போன்ற வேறு, மிகவும் கண்கூடான, வெளியிலான இடங்களில் இருந்து அவர் வித்தியாசப்படுத்தினார். பெண்களுக்கு சார்புரீதியில் பாதுகாப்பினை வழங்குவதாகப் பின்னைய இடங்களைப் பார்க்கக்கூடியதாகக் தோன்றுகின்றது. ஹொட்டேல்களில் தொழிலாற்றும் பெண்கள் முகங்கொடுக்கும் சவாலானது ஒரு கருத்து (ஸ்ரீ) என்பதுடன், அனுபவ அடிப்படையிலான உண்மை நிலையாக விளங்குவதை விட, மறுதலையிலான பின்னணியொன்றில் (சாரதா) ஹொட்டேல்களில் பெண்கள் பார்க்கப்படுகிறார்கள் என்பதே தோற்றமானதாகும்.

ஹொட்டேல்களில் வேலை செய்யும் இளம்பெண்களுடன் இணைந்துள்ள கௌரவத்திலான ஆபத்து, அனு போன்ற இளம் பெண்கள் மீது குறைந்தளவு சுமையையே நிறையாகக் கொண்டுள்ளது. அனுவைப் பொறுத்தளவில், ஹொட்டேலில் வேலை செய்வது முதலாவது இடமாக அது சிறந்த கொடுப்பனவை வழங்கினாலும் கூட, பெற்றோரின் எதிர்ப்பு ஒரு தடையாகவே விளங்குகின்றது. பெண்கள் *'கேலி செய்யப்பட்டு, தொந்தரவு செய்யப்படும்'* சகல பொது இடங்களிலும் வம்சாவழியிலான தன்மையிலான அவரது சக்திமிக்க வேண்டுகோள் குறிப்பிடத்தக்கதாகும். *'ஓர் ஆண் ஆதிக்கத்திலான இடமொன்றாக'* ஹொட்டேல்களையிட்டு அவரது சமிக்ஞையானது பெருமளவு வேறு பெண்களினால் (அத்துடன் ஆண்கள்) எதிரொலிக்கப்பட்டது, இது *'ஹொட்டேல்களில் அதிகளவு வெளியார் சுற்றித்திரிகிறார்கள்'* என்ற சாரதாவின் கருத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும்.

உல்லாசத்தளங்களும், விருந்தினர் இல்லங்களும் ஆண் இடங்களாக மட்டும் நோக்கப்படாமல், ஆனால் குறித்துக்கூறுவதென்றால் ஆண் 'ஏனையோரால்' குடியிருக்கப்படும் இடங்களாக நோக்கப்பட வேண்டும். இது இனத்துவ மற்றும் கலாசாரப் பரவுகையின் விவரணங்களை தோற்றுவிக்கின்றது. இது விருந்தினர் இல்லங்களில் முஸ்லிம் வர்த்தகர்கள் உள்ளூர் தமிழ்ப் பெண்களுடன் சினேகபாவத்துடன் நடந்து கொள்ளுதல் அல்லது வெளிநாட்டினர்களுடன் அல்லது சிங்களவர்களுடன் கூட தொடர்பினைக் கொண்டிருத்தல் ஆகியன பற்றிய ஆண்களினதும், பெண்களினதும் விவரணங்களில் பிரதிபலிக்கின்றது. *'அதிகளவு ஆண்களுடன்; அதிகளவு வெளியார் ஆண்களுடன் பரஸ்பரம் தொடர்புகொள்வதையே ஹொட்டேலின் அமைப்பு கருத்தினைக் கொண்டிருப்பதால் ஹொட்டேல்களில் வேலை செய்வது பெண்களுக்குப் பொருத்தமானதல்ல'* என வயதான பெண் ஒருவர் வலியுறுத்தினார் (சிங்களம்). இது திட்டமாக நோக்கப்படவில்லை (நேர்முகங்காணல், 4 மார்ச் 2015). இவை யாவுமே பெண்களின் அதிகளவிலான ஒழுக்கத்தை நிலைநிறுத்துவதற்கு ஊக்கமளிக்கின்றது.

ஹொட்டேல்களில் பெண்கள் வேலை செய்வதற்காக மட்டும் சில ஆண்கள் எதிராக இருக்கவில்லை, ஆனால், பொதுவாகவே வீட்டுக்கு வெளியே பெண்கள் வேலை செய்வதற்கும் எதிராகவே உள்ளனர். *'ஹொட்டேல்களில் வேலை செய்வது பெண்களுக்கான ஒரு நல்ல இடம் என்று நான் நினைக்கவில்லை. பொதுவாக பெண்கள் வெளியே சென்று, வேலை செய்ய வேண்டும் என்று நான் நினைக்கவில்லை'* என பட்டியடிச்சேனையைச் சேர்ந்த 26 வயதான 'அசோக்' குறிப்பிட்டார் (நேர்முகங்காணல், 28 மார்ச் 2015). ஹொட்டேல்களில் வேலை செய்வதற்கு அவரது சகோதரிகளை அவர் *'அனுமதிக்க'* மாட்டார் எனப் உல்லாசத்தளங்களின் ஒன்றில் வேலை செய்யும் கரங்கலைச்சோலையைச் சேர்ந்த 23 வயதான 'நிரஞ்சன்' கூறினார். இது அவர்களுக்கு *'ஒரு பொருத்தமான வேலை'* அல்ல, *ஏனெனில் 'சில விருந்தினர் நல்லவர்கள் அல்லர் என்பதுடன், சிலவேளைகளில் நீங்கள் உடல்ரீதியிலான வேலையைச் செய்யவேண்டியிருக்கும்' என அவர் வலியுறுத்தினர். 'இளம்பெண்கள் மென்மையானவர்கள் என்பதுடன், இவ்வகையான வேலையை அவர்களினால் கையாள முடியாது. பெண்களுக்கு அரசாங்க வேலைகள் தான் சிறந்தவை. ஏனெனில் அவர்களது வீட்டுப் பொறுப்புக்களுடன் வேலை செய்யும் நேரம் பொருந்துகிறது'* (நேர்முகங்காணல், 6 மார்ச் 2015). வேறு சொற்களில் குறிப்பிடுவதென்றால், தாபிக்கப்பட்ட பால்நிலை வகிபங்குகளில் தலையிடுவதற்கு அல்லது மாற்றுமுறை வேலையொன்றை முன்பின் ஆராயமல் இருப்பதற்கு முயல்கின்றவாறு நோக்கப்படுகின்ற தொழில்கள் அதிகளவு ஏற்றுக்கொள்ளத்தக்கது எனத் தெரிகிறது. எனினும், அரசாங்கத் தொழிலுடன் இணைந்துள்ள பாதுகாப்பினதும், நன்மைகளினதும் பாரிய உணர்வுக்கான தொடர்பில் *'அரசாங்கத் தொழில்களுக்கான'* விருப்பு பார்க்கப்படவேண்டும்.

ஆனால், ஹொட்டேல்களில் பெண்கள் தொந்தரவு செய்யப்பட்டு, கேலி செய்யப்படுகின்றார்கள் என்ற மனவுணர்வு ஒன்றின் காரணமாக ஹொட்டேல்களில் வேலை செய்யும் பெண்களையும், யுவதிகளையும் பற்றி *'மக்கள் கேவலமாக பேசுகின்ற' அதேவேளை, 'பெண்கள் எங்கும் கேலி செய்யப்படலாம் என்பதுடன், இது எமது கிராமத்தில் கூட நடப்பதை நான் பார்த்திருக்கிறேன். எனவே, ஹொட்டேல்களைப் பிரித்துப்பார்ப்பது நியாயமல்ல'* என மேற்படி விடயத்தைக் குறிப்பிட்ட அதே இளம் ஆண் புலம்பினார். மேலே அனுவின் கருத்துக்களுடன் சேர்த்து வாசிக்கையில், ஒருபுறத்தில், வழமையானது என ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆணின் பார்வைக்கு பெண்களினதும், யுவதிகளினதும் பொதுவிலான ஊறுபடுந்தன்மை ஹொட்டேல்களுக்கு உருமாற்றப்பட்டுள்ளது என்பது கண்கூடானதாகும். இன்னொரு புறத்தில், சமூகத்தின் நேரடியான கட்டுப்பாட்டில் அத்துடன் கருத்தொன்றில் அதன் பார்வைக்கு வெளியே கூட செயலெல்லைக்கு அப்பால் உள்ள சமூக உறவுகளில் உள்ள இடங்களாக ஹொட்டேல்கள் பார்க்கப்படுவதுடன், அவ்வாறாக அங்கீகரிக்கப்படாத வழிகளில், அதுவும் கூட 'வெளியார்களுடன்' தம்மை வெளிப்படுத்துவதற்கு பெண்களுக்கும், யுவதிகளுக்கும் உத்தேசமானரீதியில் வாய்ப்புக்களை வழங்குகின்றது. ஹொட்டேலில் அல்லது சுற்றுலாத்தொழிற்துறையில் வேலை செய்யும் யுவதி ஒருவரை அவர்கள் திருமணம் செய்யமாட்டார்கள், ஏனெனில் *'ஹொட்டேல்களில் பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு மிக அதிகளவு வாய்ப்புக்கள் உள்ளன. இத்தகையதொரு சூழலில் பெண்கள் இருக்கும் போது அத்தகைய விடயங்களைச் செய்வதற்கு சில பெண்கள் ஆசைகாட்டி இணக்கப்படுகின்றார்கள்'* என பட்டியடிச்சேனையைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் (18-25) தெரிவித்தனர் (இளைஞர் நோக்குக்குழு கலந்துரையாடல் 5 மார்ச் 2015).

அவ்வாறாக, குறிப்பாக *'வெளியார்களினால் 'இரையாக்கப்படுவோம்'* என்ற அச்சங்களுக்கு அப்பால், நடத்தையில் தாபிக்கப்பட்ட எல்லைகளை உடைக்கும் வழிகளில் செயற்படும் ஹொட்டேல்களில் உள்ள பெண்களையும், யுவதிகளையும் சுற்றியுள்ள அச்சங்களினால் பாசிக்குடாவின் ஹொட்டேல்களில் வேலைசெய்யும் பெண்களுக்கான எதிர்ப்பு உருக்கொடுக்கப்படுகின்றது. உள்ளூர் கலாசாரத்திற்கும், வாழ்க்கையின் வழிக்கும் ஹொட்டேல்களும், சுற்றுலாத்துறையும் பயமுறுத்தலொன்றை முன்வைக்கின்றன என்ற பெருமளவு ஆண்களினாலும், பெண்களினாலும் எதிரொலிக்கப்படும் கருத்துக்களை ஆராய்ந்தறியும் விதத்தின் முக்கியத்துவத்தை மேற்படி கலந்துரையாடல்

கீழ்கோடிடுகின்றது. பால்நிலையிலான வகிபங்குகளையும், உறவுகளையும் மாற்றுவதாக காணப்படக்கூடிய அரசியல், பொருளாதார நகர்வுகளுக்கான எதிர்ப்பினை தோற்றுவிக்கக்கூடியதாக விளங்கும் பால்நிலையிலான சமூகக் கட்டுப்பாட்டின் காரணமாக வேரூன்றியுள்ள அமைப்புக்களின் தன்மை யுத்தத்திற்குப் பிந்திய மாறுபாடான தோற்றப்பாடாகும். சுனாமிக்குப் பிந்திய காலத்தில் பெண்களுக்கு ஒரு தொகையிலான தொழில் வாய்ப்புக்களை பெரும் எண்ணிக்கையிலான அரச சார்பற்ற தாபனங்கள் உருவாக்கிய போது, இதையொத்த எதிர்விளைவுகள் தோன்றியதாக மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்ணியவாதியான கல்விமானும், ஆராய்ச்சியாளருமான ஒருவர் நினைவுபடுத்தினார். அவரது கூற்றுப்படி, 'இங்குள்ள சமூகம் வேலை செய்வதற்கான பெண்ணின் உரிமையை அங்கீகரிப்பதில்லை' என்பதுடன், பால்நிலை வகிபங்குகளிலும், உறவுகளிலும் அதிகளவு தன்னாட்சியை அல்லது நகர்வினை இயலச்செய்யக்கூடிய பொருளாதார ஆதாரத்தை பெண்கள் ஈட்டுவதைப் பார்ப்பதற்கு விரும்பாதவர்களினாலேயே அதிகளவு எதிர்ப்பு உள்ளது (நேர்முகங்காணல், 19 மார்ச் 2015). பாசிக்குடாவின் ஹொட்டேல் தொழிற்துயைில் தொழிலானது ஒன்றில் பெண்களுக்கு இன்றியமையாதவிதத்தில் அதிகாரமளிக்கின்றது (இவ்விடயத்தில் ஆண்களுக்கும்) அல்லது சமூக-பொருளாதார உருமாற்றத்தினை முன்பின் ஆராய்வதில்லை என்பதற்கு சிறிதளவு சான்று உள்ளஅதேவேளை, தெளிவாக விளங்குவது என்னவெனில் உள்ளூர் சமூகங்களினுள் தொழிற்துறை தொடர்பான எதிர்ப்பு அல்லது அக்கறை ஆழமான விதத்தில் வம்சாவழியாகியுள்ளதும், இனரீதிப்படுத்தப்பட்டதுமான சமூக உறவுகளின் நடைமுறையிலான கட்டமைப்புக்களுக்கான பயமுறுத்தல்களின் முன்னுணர்வுகளின் ஊடாக ஊகிக்கப்படுகின்றது.

உள்ளூர் பெண்களையும்,'வெளியார்' ஆண்களையும் சம்பந்தப்படுத்தும் 'சம்பவங்கள்' பற்றி ஏதேனும் உண்மையான விபரமின்றி நேர்முகங்காணப்பட்ட ஒரு தொகையிலான நபர்கள் பேசினார்கள். உள்ளூராட்சிச் சபையின் ஆண் செயற்பாட்டாளர் ஒருவர் அத்தகைய ஒரு சம்பவத்தை விபரித்தர். *'முஸ்லிம் ஆள் ஒருவர் வந்து, விருந்தினர் இல்லமொன்றில் தங்கியிருந்ததுடன், கிராம யுவதி ஒருவருடன் காதல்வயப்பட்டார்'* (நேர்முகங்காணல், 6 மார்ச் 2015). அந்த ஆள் யுவதியைத் திருமணம் செய்தார், ஆனால் யுவதி மதம் மாற வேண்டியிருந்தது என்பதுடன், இது *'சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை'* எனச் செயற்பாட்டாளர் தெரிவித்தார். அத்தகைய *'சம்பவங்களை'* சில சமூக உறுப்பினர்களும், உள்ளூராட்சிச் சபை அலுவலர்களும் வலியுறுத்தியதுடன்,இச் சம்பவங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்த போதிலும், அதிகளவு பொதுத்தன்மையிலான எதிர் விளைவுகளுக்கும், அக்கறைகளுக்கும் அல்லது சுற்றுலாத்துறை மீது ஒழுக்கத்திலான அச்சத்தின் நிலையொன்றுக்கும், *'முன்வைக்கப்பட்டுள்ள அபாயத்தின் அளவிடக்கூடிய அல்லது எடுத்துக்காட்டக்கூடிய மட்டத்திற்கான விகிதாசாரத்திற்கு அப்பால்'* இட்டுச் சென்றன (Goode and Ben-Yehuda, 2009, in Krinsky, 2008: 7).

ஆனால், கலப்பு-இனத்துவப் பாலியல்ரீதியில் சிநேகமாக நடந்துகொள்ளுதலுடன் சுற்றியுள்ள ஒழுக்கத்திலான அச்சமானது பெண்கள் அதிகளவு ஒழுக்கத்தை நிலைநிறுத்துவதை இயலச்செய்கின்றது. ஆண் 'ஏனையோரின்' மாயத் தோற்றம் ஒரு குறிப்பிடத்தக்க படிப்படியான ஏற்ற இறக்கத்தைத் தூண்டுகின்றது. அதனில், 'சமூகத்திற்கான ஒருவகையான பயமுறுத்தல் அல்லது சவால் வேறொரு, வெளிப்படையாக ஒத்ததன்மையிலான, வியத்தகு நிகழ்வுடன் ஒன்று சேர அது உருமாற்றப்பட முடியுமானால், பாரியதாகவும், அதிகளவு பயமுறுத்தலாகவும் தெரிகின்றது (Hall et al., 1978, in Krinsky, 2008: 6). தரம்குன்றிய அல்லது வேறுபட்டதாக கருதப்படும் குழுக்களிலிருந்து சமூகத்திற்கு இடையிலான தூரத்தை வேறுபடுத்துவதற்கும், அத்துடன் பராமரிப்பதற்கும் பயன்படுத்தப்படும் பால்நிலையிலான ஆட்சியமைப்புக்களின் வரிசைப்படுத்தலை 'ஏனையவற்றின்' விவரணங்கள் அனேகமாக வெளிப்படுத்தும் என்பது நன்கு அறியப்பட்டதாகும் (Nagel, 2000). இந்த ஆட்சியமைப்பினுள் இனவாத விவரணங்கள் அச்சுறுத்தலாக காணப்படுகின்ற 'ஏனைய' ஆண்களிடமிருந்து பாதுகாப்பு அவசியப்படும் பெண்களைக் கட்டிக்காக்கின்றது. அவ்வாறாக, பாசிக்குடாவில் ஹொட்டேலிலும் அத்துடன் சுற்றுலாத்துறைத் தொழிலிலும் பெண்கள் சூறையாடப்படுதல் அல்லது அவர்களது பிரவேசத்திற்கான சாத்தியவளம் கூட, சமூகத்தினுள் ஏனைய ஆண்களிடமிருந்தும், ஆனால் இல்லாதிருப்பவர்களிடமிருந்தும் கூட 'தமது' பெண்களைப் பாதுகாப்பதற்காக 'பாதுகாப்பளிப்பவர்களாக' தமது வகிபங்குகளை பரிந்து வினையாற்றுவதற்கு ஆண்களைத் தூண்டுகின்றது.

[8]பெண் போராளிகள் பற்றி பெருமைப்படும் LTTE இனர் கூட அரச சார்பற்ற நிறுவனக்களில் (NGO) வேலை செய்யும் பெண்களுக்கு ஒழுக்க விதிமுறைகளை இட்டிருந்தனர்

இருந்தும், 'வெளியார்' என்ற விவரணத்திலும் வேறு பரிமாணங்கள் உள்ளன. ஒன்று, இலங்கையின் கிழக்கில் நீண்ட காலம் நீடித்த இனத்துவ மோதலினதும், அடையாள அரசியலின் வலுவான நிலையினதும் சிக்கலான அமைப்பின் சூழமைவில் 'ஏனையோரின்' நம்பிக்கையீனமும் கண்டறியப்பட வேண்டும். எல்.ரி.ரி.ஈ. இனால் பெருந்திரளான முஸ்லிம்களின்வெளியேற்றத்தைத் தொடர்ந்து 1990இல் காத்தான்குடிக்கு அருகிலும், ஏறாவூரிலும் முஸ்லிம் சிவிலியன்களின் படுகொலைகள் மற்றும் வன்முறையில் இலங்கை இராணுவத்துடன் முஸ்லிம்களின் (சில ஆயுதபாணிகள் உட்பட) சிக்கல்தன்மை மற்றும் கூட்டுமுயற்சி, அத்துடன் தமிழ் குடிமக்களைச் சம்பந்தப்படுத்தும் படுகொலைகள் ஆகியன தொடர்பிலான விவரணங்கள் கிழக்கில் இனத்துவ உறவுகள் மீதான நீண்ட நிழலொன்றை வார்த்தெடுப்பதைத் தொடருகின்றன. 2007இல் 'கிழக்கின் விடுதலை' முதல் யுத்தம் தொடர்பான சொத்துப்பறிப்பு மற்றும் இடம்பெயர்வு, காணி மற்றும் பொருளாதார மூலவளங்கள் மேலான யுத்தத்திற்குப் பிந்திய போட்டித்தன்மைகள் அத்துடன் தீவிரமான இனத்திற்கு இடையிலானதும், இனத்திற்கு உள்ளேயுமான அரசியல் போட்டியின் மரபுரிமை ஆகியவற்றிலிருந்து விளைகின்ற கெடுபிடிநிலைகளின் பின்னணியில் இந்த உறவுகள் பார்க்கப்படுவது அவசியமாகும். மேற்படி பிரபலமான 'சம்பவங்களும்' முஸ்லிம்களையும், உள்ளூர் தமிழ்ப் பெண்களையும் சுற்றியுள்ள விவரணங்களும் 'தமிழ்-முஸ்லிம் கெடுபிடிநிலை பற்றி மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டுகின்றன' என உள்ளூராட்சிச் சபைச் செயற்பாட்டாளர் குறிப்பிட்டார்.

எனினும், 'வெளியாரின்' அல்லது 'ஏனையவரின்' இனத்துவரீதியிலான தூரநோக்குகள் வகுப்புப் பிரச்சனைகள் ஊடாகவும் ஊகிக்கப்படுகின்றன. 2005க்கும் 2013க்கும் இடையில் பகுதியில் பதவிக்கமர்த்தப்பட்ட உள்ளூராட்சிச் சபை செயற்பாட்டாளர் ஒருவர் கூறினார்: 'தமது சரீர உழைப்பை வழங்குவதற்காக ஹொட்டேல் நிருமாணத்தின் போது பகுதிக்குள் சிங்கள ஆண்கள் வந்தனர். அவர்கள் திருமணம் செய்யவில்லை என்பதுடன், நிலைகொள்ளவும் இல்லை, ஆனால், கிராமத்தில் உள்ள பெண்களுக்கு பிரச்சனைகளை விளைவித்தார்கள்' (நேர்முகங்காணல், 28 மார்ச் 2015). சுற்றுலாப்பயணிகளை விட அவர்களது சாரதிகளே பிரச்சனைக்குரியவராவர் என தற்போதைய உள்ளூராட்சிச் சபை செயற்பாட்டாளர் (ஆண், 30) கூறினார். அவர்களுக்கு (சாரதிகள்) 'அனேகமாக சிறிய விருந்தினர் இல்லங்களில் விடுதிகள் வழங்கப்பட்டன. விருந்தினர் இல்லங்களில் அவர்கள் தங்கியிருக்கும் போது, அவர்கள் குடிப்பார்கள். சில வேளைகளில் அவர்கள் வெளியே அரைக் காற்சட்டையில் குளிப்பார்கள். இதைக் கிராமவாசிகள் விரும்புவதில்லை. ஏனெனில் அதைச் சுற்றி பெண்களும், பிள்ளைகளும் உள்ளனர்' (நேர்முகங்காணல், 6 மார்ச் 2015). வேறு சொற்களில் குறிப்பிடுவதென்றால், அவர்கள் உள்ளவாறு உண்மையாக, பால்நிலை, வகுப்பு மற்றும் இனத்துவ அடையாளங்கள் மற்றும் அக்கறைகள் ஆகியவற்றுடன் அடுக்கப்பட்டுள்ள பாசிக்குடாவில் சுற்றுலாத்துறையின் தற்சார்புடைய பொருளாதாரமொன்றைத் தோற்றுவிப்பதற்கு இனத்துவத்தையும், 'வேறு' வகுப்பினையும் சுற்றியுள்ள அக்கறைகள் ஊடறுக்கின்றன.

## 4.5 தேர்ச்சித்திறன்களின் இடைவெளி மற்றும் பாகுபாட்டினதும், வெளியேற்றத்தினதும் விவரணங்கள்

உல்லாசத்தளங்களின் முகாமையாளர்கள், தொழிற்துறை நிபுணர்கள் மற்றும் கொழும்பைத் தளமாகக் கொண்ட சுற்றுலாத்துறை அலுவலர்கள் ஆகியோருடனான எமது உரையாடல்களில் ஒரு மீளவரும் கருப்பொருளாக தேர்ச்சித்திறன்களின் இடைவெளி விளங்கியது. இது உல்லாசத்தளங்களில் தொழிலாற்றும் மக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான பிரதான தடையாக பாசிக்குடாவில் உள்ள உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த சகலரினாலும் கீழ்க்கோடிடப்பட்டது. அதேநேரம், சமூகத்தின் உறுப்பினர்களுடனும், குறிப்பாக இளைஞர்களுடனும் அத்துடன் சில உள்ளூராட்சிச் சபை அலுவலர்களுடனும் எமது உரையாடல்களில் மீள்வரும் கருப்பொருளாக பாகுபாடும், வெளியேற்றமும் விளங்கின.

பாசிக்குடாவில் 'பாகுபாட்டினதும்' அத்துடன் 'தேர்ச்சித்திறன்களின் இடைவெளியினதும்' விவரணங்கள் உண்மையில் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன. எனினும், ஒருபுறத்தில் அரசாங்க ஆதரவை அனுபவிக்கும் பாரிய (அத்துடன் அனேகமாக உலகளாவிய) மூலதனத்திற்கும் மறுபுறத்தில் பாசிக்குடாவில் யுத்தத்தினால் சின்னாபின்னமாகியதும், சுனாமியினால் பாதிக்கப்பட்டதுமான உள்ளூர் சமூகங்களின் நிச்சயமற்ற ஊதிய சரீர உழைப்புக்கும் மற்றும் ஆரம்பநிலை உற்பத்திக்கும் இடையிலான போராட்டத்தின் பின்னணியில், அவற்றை எல்லைப்படுத்துவது முக்கியமானதாகும். சமவளவில் பாகுபாடு மற்றும் தேர்ச்சித்திறன்களின் இடைவெளி ஆகிய இரு விவரணங்களும் விளைவில் குணங்குறியறிதலுக்கு ஈடாகின்றவையாகும்; சிதைவடையும் நிலையினாலும், வெளியேற்றத்தினாலும் குறிக்கப்பட்டுள்ள சூழமைவொன்றில், ஆடம்பரத்தையும், விருந்தோம்பலையும் சந்தைப்படுத்துவதன் மீது செழிப்படைகின்ற அரசியல் பொருளாதாரமாக விளங்குகின்ற பாசிக்குடாவில் உல்லாசத்தளம் அடிப்படையிலான சுற்றுலாத்துறையின் கட்டமைப்பு ஒன்றையுமே உண்மையாகவே கைப்பற்றிக்கொள்ளவில்லை.

இதில் சிலருக்கு பொருளாதார வாய்ப்புக்களை பாசிக்குடாவின் உல்லாசத்தளப் பொருளாதாரம் வழங்கவில்லை என்பதை மறுப்பதில்லை. உண்மையில், 'வெளியேற்றங்களையும் அத்துடன் உள்ளடங்கலையும் வரவழைக்கும்' கைத்தொழில்மயமான விருந்தோம்பல் என்ற அடிக்கடியிலான சிறப்பியல்பை அது வெளிப்படுத்துகின்றது (McNeil,2008b, in Bell, 2009: 30). ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு, இந்த உள்ளடக்கங்கள் அனேகமாக பெறுமதிச் சங்கிலியின் கீழ் பகுதி முடிவில், நிச்சயமின்மையின் நிழலில் உள்ளன.

பாசிக்குடாவில் உல்லாசத்தளதொழிற்துறையில் வேலை செய்வதை அவர் கரிசனைக்கு எடுக்கமாட்டார் என பட்டியடிச்சேனையைச் சேர்ந்த இளைஞரான நாதன் தெரிவித்தார். ஏனெனில் 'சிங்கள மக்களுக்கு என்னை அடிமைப்படுத்துவதற்கு' இணங்குவதாகவே தொழிற்துறையில் ஈடுபடுவது விளங்கும் (நேர்முகங்காணல், 4 மார்ச்ச 2015). 'விசேடமாக சிங்கள மக்களின் பெருமளவிலான வருகையுடன் பெரிய ஹொட்டேல்கள் வந்தது முதல் இடத்தின் உரிமையின் உணர்வொன்றை உள்ளூர் சமூகங்கள் இழந்துள்ளனர்' என்பது பற்றி அவர் பேசினார். *'பொலிசார் சிங்களவர்கள் என்பதுடன், அவர்கள் வெளியார் பக்கமே சார்ந்திருக்கிறார்கள்'* எனவும் அவர் தெரிவித்தார்.

பட்டியடிச்சேனையிலிருந்து 18க்கும் 25க்கும் இடைப்பட்ட வயதுகளைக் கொண்ட ஐந்து இளைஞர்களைச் சம்பந்தப்படுத்தும் நோக்குக் குழு கலந்துரையாடல் (5 மார்ச் 2015) ஒன்றிலிருந்தான மூன்று மேற்கோள்கள் உள்ளூரில் விநியோகத்தில் உள்ள பாசிக்குடாவின் ஹொட்டேல் தொழிற்துறையில் தமிழர் ஓரங்கட்டப்படுதலினதும், சிங்கள ஆதிக்கத்தினதும் கருத்துக்களின் விவரத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றன.

நான் (உல்லாசத்தளம்**X**)இல் வேலை செய்வதுடன், அங்கு ஒரு வருடமாக இருக்கிறேன். முன்னர் ஒன்பது மாதங்களுக்கு (உல்லாசத்தளம்**Y**)இல் இருந்தேன். **Y**உல்லாசத்தளம் சிங்கள ஆதிக்கத்திலானது என்பதுடன், **X**உல்லாசத்தளம் பெரிதும் தமிழ் ஆகும். முன்னர் **Y**உல்லாசத்தளத்தில் என்னை மோசமாக நடத்தினார்கள். முகாமைத்துவம் நல்லது என்பதுடன் இணை-ஊழியர்களும் நல்லவர்கள். ஆனால், நடு முகாமைத்துவம் என்னை சரியாக நடத்தவில்லை. நான் தமிழன் என்ற காரணத்தினால் நான் எப்பொழுதும் இலக்குப்படுத்தப்பட்டேன் என உணர்ந்தேன்.

ஆங்கில அறிவுடன் ஆட்கள் இருக்கின்றார்கள் என்பதுடன், அவர்கள் முகாமைத்துவ டிப்ளோமாவையும் முடித்துள்ளார்கள். ஆனால், பெரிய ஹொட்டேல்களில், சகல மேல்நிலை முகாமைத்துவத்தில் உள்ளவர்கள் சிங்களவர்கள் என்பதுடன், அதன் காரணமாக உயர் மட்டத்திலான தொழில்களில் உள்ளூர்வாசிகள் வாய்ப்புக்களைப் பெறுவதில்லை.

அத்துடன் தமிழ்த் தொழிலாளர்களுக்கு கையினால் இயக்கப்படும் செய்கருவிகள் வழங்கப்படுவதுடன், சிங்களத் தொழிலாளர்களுக்கு இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இது தொழில் செய்யும் போது அதிகளவு ஆபத்தினையும், காயமடைவதற்கான அபாயத்தையும் எங்கள் மீது சுமத்துகிறது. தடித்த தொப்பிகளை வழங்குவதும், எமது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதும் ஒப்பந்தக்காரரின் வேலையாகும். ஆனால், எம்மை விட சிங்களத் தொழிலாளர்கள் பாதுகாப்பாக விளங்குகிறார்கள் எனத் தெரிகின்றது.

எனினும் வழங்கப்பட்டுள்ளவாறு, இனத்துவ வடிவமைப்பினை எடுப்பதை விட, சூழமைவில் இந்த இனத்துவரீதிப்படுத்தப்பட்ட விவரணங்களைக் கரிசனைக்கெடுப்பது முக்கியமானதாகும். தொழிற்துறையினுள் உள்ளூர் சமூகத்தின் உள்ளடங்கலின் தன்மையை, விசேடமாக பாசிக்குடாவின் உல்லாசத்தளப் பொருளாதாரத்தில் அவர்களை வேலைக்கு அமர்த்தி உண்மையில் கீழ்நிலைக்கு அவர்களைக் கட்டுப்படுத்தி, விவாதிக்கும்விதத்தில் மிகவும் நிச்சயமின்மையிலான தொழிலில் வைத்திருப்பது குறிப்பிட்ட சம்பந்தத்தைக் கொண்டதாகும்.

ஹொட்டேல்களில் *'தேர்ச்சித்திறன்பெற்ற ஊழியர்கள் யாவரும் சிங்களவர்கள்'* என்ற வாழைச்சேனை பிரதேசச் செயலகத்தின் அலுவலர் ஒருவரின் கருத்தினை உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த பலரும் எதிரொலித்தனர் (பெண், நேர்முகங்காணல், 29 ஜனவரி 2015).

உதாரணமாக, பாசிக்குடா உல்லாசத்தளங்களின் ஒன்றில் தொழிலாற்றும் பட்டியடிச்சேனையைச் சேர்ந்த 37 வயதுப் பெண்ணான 'இந்திராவின்' கருத்தினைக் கரிசனைக்கெடுத்தால்,*'எனது மேற்பார்வையாளர்கள் பெரும்பாலும் சிங்களவர்கள். ஆனால், சில தமிழர்களும் உள்ளனர். சுத்திகரிப்புப் பிரிவும், தொழிலின் கீழ்நிலை மட்டங்களும் உள்ளூர்வாசிகளையும், வெளியார்களையும் கொண்ட கலப்பினை உள்ளடக்குகின்றது. எனினும், வழமையாக சிங்களவர்களான வெளியார் உயர்ந்த பதவிநிலைகளை வகிக்கிறார்கள்'* (நேர்முகங்காணல், 27 மார்ச் 2015).

இவை யாவும் பாகுபாட்டின் பதத்தில் காணப்படுகிறது என்பது ஆச்சரியமல்ல; உள்ளூராட்சிச் சபை செயற்பாட்டாளர் ஒருவரின் கூற்றுப்படி, உதாரணமாக: *'பாகுபாடும் உள்ளது என நான் கூறுவேன். விசேடமான தேர்ச்சித்திறன்கள் அவசியப்படாத சில தொழில்களும் உள்ளன. இவற்றுக்கு அவை (ஹொட்டேல்கள்) உள்ளூர் ஆட்களை பணிக்கமர்த்தலாம். ஆனால், ஹொட்டேல்கள் அதைச் செய்யவில்லை; தேர்ச்சித்திறனற்ற சரீர உழைப்புக்குக் கூட வெளியிலிருந்து ஆட்களை அவர்கள் பணிக்கு எடுக்கின்றார்கள்'* (ஆண், 30, நேர்முகங்காணல், 6 மார்ச் 2015).

பாசிக்குடாவின் மிகப்பாரிய உல்லாசத்தளங்களின் ஒன்றில் பொது முகாமையாளரினால் ஹொட்டேல் தொழிற்துறையின் பதிலிறுப்பு எடுத்துரைக்கப்படுகின்றது: *'நாம் வெற்றிடங்களைக் கொண்டுள்ளோம். ஆனால், பாரிய தேர்ச்சித்திறன்கள் இடைவெளியொன்று இருப்பதன் காரணமாக, எம்மால் நிரப்புவதற்கு இயலாமல் இருக்கின்றது. எமக்குத் தேவையான தேர்ச்சித்திறன்களுக்கும், உள்ளூர்வாசிகள் வழங்குவதற்கு கொண்டிருக்கும் தேர்ச்சித்திறன்களுக்கும் இடையிலான இடைவெளி மிகவும் பாரியதாகும்'* (ஆண், நேர்முகங்காணல் 29 ஜனவரி 2015).

இது வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களில் சிறிய வியாபாரங்களுக்கு பாரிய பரஸ்பர நன்கொடையாளரிடமிருந்து மூலவளங்களைப் பரிவர்த்தனை செய்யும் வசதியொன்றைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரினால் எதிரொலிக்கப்பட்டதுடன், உண்மையில் விரிவும்படுத்தப்பட்டது. உள்ளூரில் பணிக்கு எடுப்பதற்கு இந்த வியாபாரங்களை ஊக்கமளிக்காதிருக்கும் தமது கொள்கையை ஆதரித்து அவர் பின்வருமாறு விவாதித்தார்: *'உள்ளூரிலேயே ஆட்களைத் தொழில் வழங்குனர்பணிக்கு எடுக்கவேண்டும் என்பதற்கான நிபந்தனைகளை நாம் கொண்டிருக்கவில்லை. அதைப் பரிந்துரைப்பது முட்டாள்தனமாகும். அங்கே தேர்ச்சித்திறன்களின் இடைவெளியும், எண்ணப்போக்கு இடைவெளியும் உள்ளன. குறித்த நேரம், தெளிவான பணிகள் போன்றவற்றுடன் கிரமமான தொழிலொன்றை மேற்கொள்வதற்காக ஆட்கள் பழக்கமாக இல்லாதிருப்பது பற்றியதே எண்ணப்போக்கு இடைவெளியாகும்'* (பெண், நேர்முகங்காணல், ஜனவரி 2014).

சுற்றுலாத்துறையில் உள்ளூர் சரீர உழைப்பினை மேம்படுத்தும் உல்லாசத்தள முகாமையாளர்களினதும், பரஸ்பர நன்கொடையாளர்களினதும் கருத்துக்கள் ஊதிய சரீர உழைப்பாளர்களின் புதிய வகுப்பொன்றை உருவாக்குகின்றதும் அத்துடன் வேலையையும், பணத்தையும் மதிக்கும் எண்ணப்போக்கொன்றை ஆழப்பதிய வைக்கின்றதுமான கருத்துக்களுடன் பின்னிப்பிணைந்துள்ளன (Mark, 1990). பாசிக்குடாவில் உல்லாசத்தள முகாமைத்துவத்தினதும் அத்துடன் சுற்றுலாத்துறையின் வேறு பரிந்துரைப்பாளர்களினதும் மத்தியிலான அனுமானம் என்னவெனில், விருந்தோம்பல் தொழிற்துறையில் வேலை செய்வதற்கான தேர்ச்சித்திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றலளவை அவர்கள் கொண்டுள்ள அதேவேளை, உள்ளூர்வாசிகள் 'பிற்போக்குத்தனமாக', 'அறியாமையைக் கொண்டவர்களாக', அல்லது சாதகமாகப் பயன்படுத்துவதற்கும் அத்துடன் மாற்றமடைவதற்கும் இணக்கமற்றவர்களாக விளங்குவதுடன், இது கிழக்கு இலங்கையில் ஆடைக் கைத்தொழில் மீதான அண்மைய ஆய்வுகளில் எதிரொலித்தது (Goger and Ruwanpura, 2014). உள்ளூரில் கிட்டுகின்ற தேர்ச்சித்திறன்களைக் கொண்ட ஊழியர்களின் பற்றாக்குறை பற்றி உல்லாசத்தள முகாமையாளர்கள் புலம்பிய அதேவேளை, அவர்களது வாழ்க்கைக்கு சுற்றுலாத்துறை கொண்டுவரக்கூடிய திட்டமான மாற்றங்களை உள்ளூர்வாசிகள் ஈடுசெய்வதும், நவீனமயப்படுத்துவதும் அத்துடன் அறிந்து கொள்வதும் அவசியமாகும் எனவும் அவர்கள் உணர்ந்தார்கள்.

உல்லாசத்தளப் பொருளாதாரத்தில் மேல்நோக்கிய நகரும் தன்மைக்கான பாதை நிறுவனரீதியிலான பயிற்சியே என பரந்தரீதியில் பரிந்துரைக்கப்படுகின்றது. ஆனால், ஒன்றில் ஹொட்டேல் பாடசாலைகள் போன்ற உள்ளூரில் அடையக்கூடிய நிறுவனரீதியிலான பயிற்சியானது நடைமுறையில் இருக்கவில்லை அல்லது மோசமான தரத்தைக் கொண்டிருந்தது என்பதே தொழிற்துறையையும், அரசாங்கத்தையும் சேர்ந்த மக்களின் பரந்தரீதியிலான கருத்தாகும். உள்ளூர்வாசிகள் சுற்றுலாத்துறையிலிருந்தும், உல்லாசத்தளக் தொழிற்துறைகளிலிருந்தும் ஈட்டக்கூடியதாக அவர்களுக்கு தகுந்த பயிற்சி மீதான அதன் வலியுறுத்தலின் பற்றாக்குறையை SLTDA உடன் நெருக்கமாகப் பணியாற்றும் முகவராண்மை ஒன்றின் அலுவலர் ஒருவர் விமர்சித்தார். ஆனால், பயிற்சி மற்றும் உள்ளூர் ஆற்றலளவுகளைக் கட்டியெழுப்புதல் ஆகியனவற்றில் அவற்றின் மூலதனம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியன தொடர்பாக தொழிற்துறையை அதாவது உல்லாசத்தளங்களைப் பற்றி கேட்கவேண்டிய கேள்விகளும் உள்ளன. *'அவை (உல்லாசத்தளங்கள்) எப்பொழுதுமே பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களுக்காக காத்திருக்க முடியாது'* என சிரேஷ்ட கல்விமானும், சிவில் சமூகச் செயற்பாட்டாளருமான ஒருவர் தெரிவித்தார் (நேர்முகங்காணல், 7 மார்ச் 2013).

கட்டமைக்கப்படாததும், தொழிலின் போதிலானதுமான பயிற்சியின் பின் சில மட்டங்களை உல்லாசத்தளங்கள் அறிக்கையிட்ட அதேவேளை, செல்வதற்கு நீண்ட தூரம் உள்ளது என்பது தெளிவானதாகும். உதாரணமாக, உல்லாசத்தளமொன்றில் தொழிலாற்றும் 35 வயதான பெண் ஒருவர் பின்வருமாறு சொன்னார்: *'நான் அறைப் பராமரிப்பில்*

*ஆரம்பித்தேன். ஆனால், இரு வருடங்களின் பின்னர் சிரேஷ்ட கவனிப்பாளராக வந்தேன். அதன் பின்னர் சம்பள அதிகரிப்பைப் பெற்றேன். அடுத்த மட்டத்திற்கு என்னால் செல்ல முடியும். அது மேற்பார்வையாளர் மட்டம். ஆனால் எனக்கு ஆங்கிலத் தகுதிகள் இல்லை. ஆங்கில வகுப்புக்களை மேற்கொள்வதற்கு (எனது உல்லாசத்தளம்) பணத்தை வழங்குவதில்லை'* (நேர்முகங்காணல், பட்டியடிச்சேனை, 27 மார்ச் 2015).

அடிப்படைரீதியில், நிறுவனரீதியிலான விருந்தோம்பல் பயிற்சி என்றால் எதைக் கருதுகின்றது அத்துடன் எந்தத் தேர்ச்சித்திறன்களை அது பிரதியெடுப்பதைக் கருதுகின்றது என்பன பற்றிய கேள்விகளை இக் கலந்துரையாடல் எழுப்புகின்றது. தேர்ச்சித்திறன்களும், ஆற்றலளவுகளும் சமூகரீதியாகவும், அரசியல்ரீதியாகவும் நடுநிலையாகப் புரிந்துகொள்ளப்படுகின்றது. ஆனால், Mann (2008:111-112) விவாதிக்கின்றவாறு, 'உயர்வானதேர்ச்சித்திறன் /குறைந்த தேர்ச்சித்திறன், குறுக்குவெட்டுப் பிரிவில் தேர்ச்சித்திறன்கள் அவையாகவே சமூகரீதியிலும், அரசியல்ரீதியிலும் வரையறுக்கப்பட்டதும், குறித்தொதுக்கப்பட்டதும் அத்துடன் பேணப்படுவதுமான ஒன்றாக விளங்குவதுடன் 'உற்பத்தியின் ஆதிக்க எல்லையின் உள்ளேயும், வெளியேயும் மூலங்களைக் கொண்டுள்ள சமூகப் பிரிவுகளை அமைப்பதுடன், பிரதியெடுக்கின்றது.' இதனால், 'திறனற்றவர்கள்' என்றவாறு மக்களைக் குறித்தொதுக்குதல் எப்பொழுதுமே நோக்கரீதியில் நிர்ணயிக்கப்படுவதில்லை, ஆனால், அரசியல்ரீதியாக நிர்ணயிக்கப்படுகின்றது (அதே கற்கை.: 117).

30 வருடங்களைக் கொண்ட யுத்தத்தின் காரணமாக, பெரும் எண்ணிக்கையிலான மரணம், உரிமையைப் பறித்தல், இடம்பெயர்வு, மனவதிர்ச்சி, நிர்ப்பந்திக்கப்பட்ட காணாமல்போகச்செய்தல்கள் மற்றும் பல்-எண்ணிக்கையிலான வேறு கெடுதல்கள் ஆகியவற்றுடன் 2004இல் இந்து சமுத்திர சுனாமியின் மனித, உளநிலைச்சமூக மற்றும் பொருள்செலவு ஆகியவற்றினால் குறிக்கப்பட்ட சூழமைவொன்றின் மீது ஆடம்பரமான உல்லாசத்தளத்தையும், விருந்தோம்பல் பொருளாதாரத்தையும் சுமத்துவதற்கான முயற்சியொன்றைப் பாசிக்குடா பிரதிநிதிப்படுத்துகின்றது. இந்தச் சூழமைவிலேயே 'தேர்ச்சித்திறன்களின் இடைவெளி' எழுந்துள்ளது. அதாவது, இழந்த அபிவிருத்தி நேரமாக மீள்-வடிவமைப்பதற்கு தற்போது நாடுகின்ற சில அனுபவமொன்றாக விளங்கும் யுத்தத்தினாலும், மோதலினாலும் அத்துடன் பேரழிவினாலும் உருவான இடமொன்றின் மரபுரிமையே 'இடைவெளியாகும்.' வளமிக்க சுற்றுலாப்பயணி இலக்காக பாசிக்குடாவைத் தயார்படுத்தலானது யுத்தம் தொடர்பான அழிவினதும், பேரிடரினதும் மரபுரிமையை எதிர்நோக்குவதை விட, மாற்றுவழி ஊடாக இடமொன்றை மீள்-வடிவமைப்பதற்கான முயற்சியொன்றைக் குறித்துக்கொள்கின்றது. எனவே, பாடசாலைக்குச் செல்லுதலும், பயிற்சியும் சில தேர்ச்சித்திறன்களை பகிர்ந்து கொள்வது பற்றியது மட்டுமல்ல, ஆனால், எண்ணப்போக்கு பற்றியதும் ஆகும். அதாவது உள்ளடங்களை மட்டுமல்ல, ஆனால் இந்த மீள்-தயார்படுத்தலின் ஏற்றுக்கொள்ளலை இயலச்செய்யக்கூடிய ஓர் ஒழுங்குபடுத்தலும், சீராக்கலும் ஆகும்.

## 4.6 சுய – தொழில் மற்றும் கடன்

வீட்டு அடிப்படையிலான வாழ்வாதாரங்களினதும் நுண்-தொழிற்றுறை உரிமைத்துவத்தினதும் ஊடாக சுய-தொழிலானது விசேடமாகப் பெண்களுக்கு பாசிக்குடாவின் அரசியல், பொருளாதார மேற்பரப்பு முக்கியமான அங்கமொன்றாகும். சுனாமியின் பின்னர், குறிப்பாக பெண்களை இலக்குப்படுத்தி அரச சார்பற்ற தாபனங்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட நுண் கடன்-இணைப்பிலான வாழ்வாதாரத் திட்டங்கள் இத் துறையின் குறிப்பிடத்தக்க விஸ்தரிப்பொன்றைக் குறித்துக் கொண்டதுடன், யுத்தத்திற்குப் பிந்திய காலத்தின் போது அதுவே கண்கூடானதாகவும் விளங்கியது என பாசிக்குடாவில் இளைப்பாறிய உள்ளூராட்சிச் சபை அலுவலர் குறிப்பிட்டார்.

பாசிக்குடாவில் வீட்டு அடிப்படையிலான வாழ்வாதாரங்களும் அத்துடன் நுண்-வியாபாரமுயற்சிகளும் ஊறுபடத்தக்க (இலகுவில் பாதிப்படையக்கூடிய) குடித்தனங்களுக்காக வாழ்வாதாரங்களை பலப்படுத்தும் வழிவகைகளாக அரசாங்கத்தினால் மேம்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, சுனாமியின் பின்னர் பாசிக்குடாவிலிருந்து இடம்பெயர்ந்தது முதல் கரங்கலைச்சோலையில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணியில் தனது குடும்பத்தில் 36 வயதான 'சவி' வாழ்ந்துவந்தார். ஒரு பிரசித்தமான பொரிக்கப்பட்ட சிற்றுண்டியான வடையை விற்பதற்காக தனது வீட்டுக்கு வெளியே சிறிய கடையொன்றை அமைப்பதற்காக சமுர்த்தி திணைக்களத்தின் ஊடாக ரூபா 2,000ஐக் கொண்ட சிறிய மானியமொன்று சவிக்கு கிடைத்தது. கடையிலிருந்து நாளாந்தம் ரூபா 300ஐக் கொண்ட வருமானத்தை ஈட்டுவதாக அவர் கூறினார். வருமானத்தைக் குறைநிரப்புவதற்காக அவரது கணவர் மீன்பிடித்தலிலிருந்து சம்பாதிக்கின்றார். ஆனால், அவரது மகள் சுகவீனமுற்றுள்ளதுடன், ஒரு கண் பார்வையை இழந்துள்ளார். சகல மருத்துவச் செலவினங்களையும் சரிக்கட்டுவதற்கு அவர்களது வருமானம் போதுமானதல்ல. ஆண்டுக்கணக்கில் நிதி உதவியை கிராம உத்தியோகத்தரிடமிருந்து அவர்கள்

கேட்டிருந்ததாக அவர் கூறினார். ஆனால், அண்மையில் தான் பதிலொன்றைப் பெற்றனர் (நேர்முகங்காணல், 6 மார்ச் 2015). இவ்விடயத்தில் சுய-தொழிலானது அனேகமாக ஆதரவற்ற நிலைக்கு எதிரான அடிதாங்கியொன்றாகும்.

சுய-தொழிலுக்கான ஆற்றலளவுகளைக் கட்டியெழுப்புவதற்கும், மானியத்திற்கு அப்பால் படிப்படியாக அளவு கணித்துக்காட்டுவதற்கும் அரசாங்கத்தின் ஆதரவைச் சிலர் நெம்புகோலாக்கியுள்ளனர். உதாரணமாக, பட்டியடிச்சேனையில் 'சீதா' தனது கணவருடனும், அவரது நான்கு பிள்ளைகளுடனும் வாழ்கின்றார். அவரது கணவர் மேசனாக வேலை செய்கிறார். உல்லாசத்தளங்களுக்கு கைவினைப்பொருள்களை விற்பனை செய்து அவர் வாழ்க்கையை நடத்துகிறார். கடற்கரையில் ஆண் ஒருவருக்கு அவற்றை விற்பனை செய்வதன் மூலம் அவர் ஆரம்பித்தார். ஆனால், சீதாவுக்கு மிகக் குறைந்தளவைக் கொடுப்பனவு செய்த அதேவேளை, அவர் சுற்றுலாப்பயணிகளுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்வதை சீதா கண்டறிந்தார். அதனால், தனது உற்பத்திப் பொருட்களை அவருக்கு விற்பனை செய்ய சீதா மறுத்தார்.

கடற்கரையில் நான் எனது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்கிறேன் என பிரதேசச் செயலக அலுவலகம் அறிந்து கொண்டதுடன், என்னையும், என்னைப் போன்ற ஏனையோரையும் கூட்டமொன்றுக்கு அழைத்தது. அலுவலர்கள் எமக்கு ஊக்கமளித்ததுடன், எமது உற்பத்திப்பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்காக பொருட்காட்சி ஒன்றையும் நடத்தியது. எமது உற்பத்திப் பொருட்களை மேம்படுத்துவதற்கும் அவர்கள் எமக்கு உதவினார்கள். அவர்களே ஹொட்டேல்களுக்கு எனது உற்பத்திப்பொருட்களை விற்பதற்கான ஆலோசனையை வழங்கினார்கள். என்னைப் போல அவர்கள் ஏனைய பெண்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். ஆனால், அவர்களில் எவருமே ஹொட்டேல்களுக்கு வரவில்லை. நான் ஆட்டோ ஒன்றை எடுத்து, நானாகவே மாலுமாலு மற்றும் உகபே ஆகியவற்றில் முகாமையாளர்களைச் சந்திக்கச் சென்றேன். எதிர்பார்க்கப்பட்டவாறு அது அச்சுறுத்துவதாக இருக்கவில்லை (நேர்முகங்காணல், 4 மார்ச் 2015).

அவரது விடயத்தில், அப்பால் நகர்வதற்கு மேலும் நடவடிக்கையொன்றை எடுப்பதற்காகவும், வருமானத்தின் உறுதியான மூலமொன்றை உருவாக்குவதற்கும், மூலதனத்தை ஒன்றுதிரட்டுவதற்குமான வழிவகைகளைப் பலப்படுத்துவதற்காகவும் அனேகமாக பயிற்சியும், ஆதரவும் இயலச்செய்தன. உண்மையில் எவ்வழிகளிலேனும் அவர் தனித்திருக்கவில்லை. கல்குடாவைச் சேர்ந்த தனது ஐம்பதுகளின் வயதில் உள்ள 'மேரி' கல்குடாவில் பொதுக் கடற்கரைக்கான வாகனத் தரிப்பிடப் பகுதியை நிருவகிக்கின்றார். கேள்விக்கு கொடுப்பனவு செய்வதற்காக Commercial Credit லிருந்து ரூபா 200,000ஐக் கொண்ட கடனொன்றை அவர் பெற்றுக்கொண்டார். தனது வேலை ஊடாக, அவர் வேறு நான்கு பேரை தொழிலுக்கு அமர்த்தியுள்ளதுடன், அதே காணி மீது கடைகளை ஆரம்பிப்பதில் பத்து விதவைகளுக்கு உதவுவதற்கு அவரால் இயலக்கூடியதாகவிருந்தது. சுயதொழிலில் ஈடுபடும் போது, லீவு எடுக்க முடியாது என்ற உண்மை போன்ற கஷ்டங்களை அவர் ஏற்றுக்கொண்டதுடன், அவரது தொழில் அவருக்கு என்ன வழங்கியுள்ளது என்பதையிட்டு அவர் மகிழ்ச்சியடைகின்றார்: *'எனக்கு வீட்டில் இருக்கவிருப்பமில்லை. எனக்கு தொடர்ச்சியாக எதையாவது செய்யத்தான் விருப்பம். எனக்கு எப்பொழுதும் தொழிற்றுறை உரிமைத்துவ மனப்பான்மை இருந்தது. அதைச் செய்வதற்கான ஆற்றலளவை நான் கொண்டுள்ளேன் என என்னைச் சுற்றியுள்ள ஆட்கள் கூறுவதுடன், பெண்கள் சங்கம் போன்ற விடயங்களுக்கு என்னை நியமிப்பார்கள்'* (நேர்முகங்காணல், 28 மார்ச் 2015).

சுற்றுலாத்துறைச் சந்தையை நெம்புகோலாக்குவதற்கு கடந்தகால அனுபவத்தையும், அறிவையும் சமூகத்தில் உள்ள ஏனையோரும் எடுத்துள்ளனர். அத்தகைய ஓர் உதாரணம் 'ரொமேஷ்' ஆவார். 50 வயதான ஆணான இவர் கரங்கலைச்சோலையைச் சேர்ந்தவர் என்பதுடன், 1970களில் முதலாவது சுற்றுலாத்துறையின் திடீரென்ற உயர்ச்சியின் போது, கடற்கரையில் cabana ஒன்றைச் சொந்தமாகக் கொண்டிருந்தார். யுத்தத்திற்குப் பிந்திய சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு பதிலிறுப்பாக, சவாரிகள் மீது சுற்றுலாப் பயணிகளைக் கொண்டுசெல்வதற்காக கண்ணாடிப் படகொன்றை அவர் வாடகைக்கு வழங்கியதுடன், மூச்செடுத்தல் குழாய்களையும் வழங்கினார். இலங்கையர்களையும், வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளையும் அவரது வாடிக்கையாளர்கள் உள்ளடக்குவதுடன், அவர்களிடம் அவர் ஆதரவை நாடுகின்றார். அண்மையில் அவர் ரூபா 350,000செலவிலான தனது சொந்தப்படகைக் கொள்வனவு செய்திருந்தார் (நேர்முகங்காணல், 5 மார்ச் 2015).

இக் கதைகள், ஒரு சில என்ற போதிலும், குறிப்பிடத்தக்கவையாகும். ஏனெனில் சுற்றுலாத்துறைப் பொருளாதாரத்தின் அனுகூலத்தை எடுப்பதற்காக வெளிவாரியிலான ஆதரவின் இணைப்பொன்றையும் அத்துடன் தமது சொந்த அனுபவத்தையும், தேர்ச்சித்திறன்களையும் அத்துடன் முன்னெடுப்பினையும் ஈர்த்தெடுத்து சுய தொழிலுக்கான வழிவகைகளைக் குறைந்தபட்சம் சிலராவது உண்மையில் தழுவிக்கொள்ளலாம் என்பதை அவர் கீழ்க்கோடிடுகின்றார். இந்த அனுபவங்களும் முக்கியமானவையாகும். ஏனெனில் தங்கியிருக்கும் மனப்பான்மை ஒன்றில் உள்ளூர் சமூகம் சிக்கியுள்ளதுடன், பொருளாதார வாய்ப்புக்களை அடையாளம் காண்பதிலும், நெம்புகோலாக்குவதிலும் முன்னெடுப்பதிலும்

பற்றாக்குறையொன்றை எடுத்துக்காட்டுகின்றது என்கிற எண்ணத்துக்கு மறுதலையாக உள்ளார்.

உள்ளூர் சமூகத்தின் இந்த மறுதலையிலான கருத்தினை நாம் பேசிய சில உல்லாசத்தள முகாமையாளர்கள் பரிமாறினார்கள். உதாரணமாக, ஒருவர் சொன்னார்: *'சிறிய உணவகங்கள், நினைவுச்சின்னக் கடைகள், சோற்றுக்கடைகள் மற்றும் சுற்றுலாத்துறைக் கட்டமைப்புக்கு சேர்க்கப்படக்கூடிய விடயங்கள் ஆகியவற்றில் காலடி எடுத்துவைத்து, ஆரம்பிப்பதற்கான அதிகளவு ஆற்றலளவு உள்ளது. ஆனால், அவர்களுக்கு கிட்டுகின்ற வாய்ப்புக்களை அவர்கள் இன்னுமே அடையாளங் காணவில்லை'* (ஆண், நேர்முகங்காணல், 4 மார்ச் 2015).

பாசிக்குடாவில் சுற்றுலாத்துறை உருவாக்கியுள்ள பொருளாதார வாய்ப்புக்களை முழுவதும் பயன்படுத்திக்கொள்வதற்கான பொறுப்பினை எடுப்பதற்கு மக்கள் தவறுகின்றார்கள் என்பதே இங்கு கீழ்க்கோடிடப்பட்டுள்ள விவரணமாகும். சுய தொழிலானது எல்லையற்ற தொடுவானமாகத் தெரிகின்றது. அதாவது, 'மிக அதிகளவு ஆற்றல் இருக்கின்றது', அதைப் பின்தொடர்ந்து செல்பவர்களுக்கு இன்றியமையாததாக அதிகாரமளிக்கின்றதும், தன்னம்பிக்கைக் கட்டியெழுப்புகின்றதுமான பொருளாதார இடமொன்றாகவும் அது சித்தரிக்கப்பட்டுள்ளது (Cain, 2007; de Haan, 2012 Sanyal, 2007: 227). ஆனால், இது முக்கியமான கட்டமைப்பிலான இயக்காற்றல்களை மறைத்து வைக்கின்றது. உண்மையில், கரங்கலைச்சோலையில் தனது சகோதரியுடனும், தனது குடும்பத்தினருடனும் வாழ்கின்றதும், கோழிக் குஞ்சுகளை வளர்ப்பதன் ஊடாக பணத்தை ஈட்டுகின்றதும், துணிகளை விற்பதுமான 'லக்சுமி'சொன்னார்: *'சில பெண்கள் தாம் வியாபாரம் செய்ய வேண்டும் என விரும்பும் காரணத்தினால் அதை ஆரம்பிக்கின்றார்கள்; மற்றவர்கள் அவர்களுக்கு ஏதாவது தெரிவு இல்லாத காரணத்தினால் அவ்வாறு செய்கிறார்கள்'* (நோக்குக் குழுக் கலந்துரையாடல், கரங்கலைச்சோலை, 4 மார்ச் 2015).

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை போன்ற தருணங்களுக்கு முற்றிலும் மாறானதன்மையில், சுயதொழில் வருமானங்களை அதிகரித்த, அல்லது வாழ்வாதாரங்களின் பரவலாக்கத்தை இயலச்செய்த இடத்தில் கட்டமைப்பிலான காலவரைகளுக்கு நேரெதிராக பரந்த அரசியல் பொருளாதார உறவுகளில் சுய-தொழிலைப் புரிந்துகொள்வது முக்கியமானதாகும். கிழக்கு மாகாணத்தில் கல்விமானும், பெண்கள் தாபனமொன்றின் செயற்பாட்டாளருமான ஒருவர் கீழ்கோடிட்டவாறு, முறைமையான பொருளாதாரத்தில் தொழிலைக் கண்டறியாத ஆட்களுக்கு மாற்றுவழியிலான வாழ்வாதாரத் தெரிவொன்றை சுய-தொழில் வழங்கக்கூடும் என்ற அதேவேளை அபிவிருத்தித் தலையீடுகள் சமூகப் பாதுகாப்புகள் அல்லது பாதுகாப்பு வலைகள் இல்லாத முறைசாரா சந்தைச் செயற்பாட்டினை சுய-தொழிலை மேம்படுத்தி உண்மையில் பரந்ததாக்குகின்றன (நேர்முகங்காணல், 29 செப்ரெம்பர் 2015). Sanyal மற்றும் Bhattacha arya (2009:36) ஆகியோரைப் பின்தொடர்ந்து, முறையான ஒன்று திரட்டல் பொருளாதாரத்திலிருந்து நன்மையை அடையாதவர்களைப் பேணுகின்ற பொருளாதார இடமொன்றான, 'அவசியமான பொருளாதாரத்தின்' முறைசாராத் துறையினுள்ளேயான ஆக்கமொன்றாக பாசிக்குடாவில் சுய-தொழிலை நாம் புரிந்துகொள்ளலாம்.

மூலதனத்தின் முறைமையான சுற்றுக்களின் வரம்பின் மீது தொழிற்றுறை உரிமைத்துவச் செயற்பாடுகள் ஊடாக வாழ்க்கையை செதுக்கியெடுத்த சீதா, மேரி மற்றும் ரொமேஷ் போன்ற மக்களையும் அது வைத்திருக்கின்றது. முறைசாராத் துறையை அங்கீகரிப்பதினதும்,ஆதரவளிப்பினதும் அத்துடன் வறுமையில் உள்ளவர்களுக்கு உதவுவதில் அதன் 'வகிபங்கினதும்' முக்கியத்துவத்தையிட்டு, உலக வங்கி போன்ற சர்வதேச அபிவிருத்திச் செயற்பாட்டுத் தாபனங்கள் பேசுகின்றன (Sanyal, 2007,151). தெளிவாக உச்சரிக்கப்பட்ட இந்த ஆதரவினதும், அதனுடையதுமான வகிபங்கினதும் ஊடான ஒரு முக்கியநடைமுறையாக நுண்நிதியும், நுண்கடனும் விளங்குகின்றன. பெருமளவு வேறு அமைவிடங்களைப் போன்று பாசிக்குடா சுனாமியிலிருந்தும், யுத்தத்திற்குப் பிந்திய சகாப்தத்திலிருந்தும் கருத்தினை தீவிரமாக மேம்படுத்தும் அரசாங்கத்துடனும், அரச சார்பற்ற தாபனங்களுடனும் அத்துடன் வங்கிகளுடனும் மற்றும் வேறு வர்த்தக நிறுவனங்களுடனும் அபிவிருத்தியின் துரிதமான நிதிப்படுத்தலொன்றைச் சான்றுபகன்றுள்ளது. இந்த மக்கள் வாழுகின்ற சூழமைவினை வரையறுக்கின்ற ஆபத்துக்களின் புரிந்துணர்வொன்று இன்றி நுண்-நிதி செலுத்தலிலான சுய-தொழில் உரிய இடத்தில் வைக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது.

உண்மையில் நுண்-நிதி முகவராண்மைகள் அரச சார்பற்ற தாபனங்களில் புதிய கூட்டணிகளைக் கண்டறிவதில் உள்ளன. அண்மையில் உள்ள இலங்கையின் பாரிய வங்கியாடல் நிறுவனமொன்றின் கிளையொன்றின் முகாமையாளர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

நாம் அரச சார்பற்ற தாபனங்களுடன் ஒன்றுகூடுவோம். அது ஒரு - வெற்றி சூழ்நிலையாகும். இந்தக் கூட்டுமுயற்சியானது மனிதாபிமான குறிக்கோளை ஆதரிப்பதற்கும் அதேவேளை சமூகங்களுடன் வியபாரத்தை மேற்கொள்வதற்கும் உதவியது. தமது நிகழ்ச்சித்திட்டங்களின் அங்கமாக கடனுக்கும், நுண் நிதிக்கும் அடைதலை அவர்கள் மேம்படுத்திய

போது என்னால் அதிகளவு கணக்குகளை ஆரம்பித்து, மக்களுக்கு கடன்களை வழங்கக்கூடியதாக இருந்தது. எனவே, இது வியாபாரத்திற்கு நல்லதாகும் (ஆண், நேர்முகங்காணல், 4 மார்ச் 2015).

பொறுப்புடனும், 'ஒழுக்கத்துடனும்' அவர்களது இணைப்பினை வழங்குகையில், அரச சார்பற்ற தாபனங்களினதும், வங்கிகளினதும் மற்றும் நிதிசார் நிறுவனங்களினதும் விருப்பப்படுகின்ற இலக்குகளாக பெண்கள் விளங்குகிறார்கள். (Young,2010). எனினும், அவர்கள் தவறுகின்ற போது, "நிதிசார்ரீதியிலான பொறுப்பான" பெண்ணின் கட்டுமானம் சிதைவடைகின்றது (McClean, 2012:8). இதற்கு அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நுண்-நிதியில் உள்ள மறுதலையிலான பின்விளைவுகளையிட்டு கல்குடாவின் முன்னாள் கிராம உத்தியோகத்தர் ஒருவர் வருத்தம் தெரிவித்தார்.

எனது கருத்தில், நுண்-கடன்களின் வழங்கல் எமது சமூகங்களில் பெண்களைக் கெடுத்துள்ளது. அரச சார்பற்ற தாபனங்களும், தற்போது வங்கிகளும் பெண்களுக்கு பாரிய தொகையிலான பணத்தை வழங்குவதுடன், இந்தப் பணத்தை எவ்வாறு நிருவகிப்பது என்று அவர்களுக்குத் தெரியாது. பாரிய எண்ணிக்கையைக் கொண்ட பணத்தைப் பெண்களால் கையாளத் தெரியாது. பாரிய வியாபாரம் என்று வரும் பொழுது அவர்கள் தகுதியற்றவர்களாக விளங்குவதுடன், அவர்கள் தோல்வியும் அடைந்துள்ளார்கள் (ஆண், 68, நேர்முகங்காணல், 6 மார்ச் 2015).

2013க்கு முன்னர் அரசாங்கச் சேவையில் தொழிலாற்றியவர்களுக்கு மட்டுமே கடன் வழங்கப்பட்டது என அருகில் உள்ள வாழைச்சேனையில் பாரிய வங்கியொன்றின் கிளை முகாமையாளர் ஒருவர் தெரிவித்தார். 2013இல்கடன் வழங்கும் நடைமுறைகள் தளர்த்தப்பட்டு, வாழ்வாதார அபிவிருத்தியை இலக்குப்படுத்தி, பெண்களுக்காக நுண்-நிதி கடன் திட்டமொன்றை வங்கி ஆரம்பித்தது. வாழ்வாதாரச் செயற்பாடுகளின் சாத்தியவளத்தையும், மீள்-கொடுப்பனவு செய்வதற்கான பெண்களின் தகுதியையும் மத்திய வங்கியிலிருந்து வெளிக்கள அலுவலர்களைக் கொண்ட குழுவொன்று ஆராய்ந்த போது, பங்கெடுத்த சகல பெண்களும் கடன்களை மீள்-கொடுப்பனவு செய்யத் தவறியுள்ளதைக் கண்டறிந்ததுடன், அதன் தொடர்ச்சியாக நிகழ்ச்சித்திட்டம் நிறுத்தப்பட்டது. இந்த பெண்கள் ஏன் தவறினார்கள் என்பதற்கான பெருமளவு காரணங்களை முகாமையாளர் பட்டியல்படுத்தினார். பெண்கள் நிதிசார்ரீதியில் புலமையற்றவர்கள் என்பதுடன், ஆதலினால் வட்டி வீதங்களை அல்லது தவறுதலின் பின் விளைவுகளைப் பற்றிய புரிந்துணர்வையும் கொண்டிருக்கவில்லை என்பதே முதன்மையான ஒன்றாகும் (ஆண், நேர்முகங்காணல், 4 மார்ச் 2015).

நிதிசார் பற்றிய புலமையின்மை அல்லது ஆற்றலளவு விவரணத்தின் பற்றாக்குறை ஆகியன கடனினால் செலுத்தப்பட்ட சுய-தொழிலினதும் மற்றும் வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டங்களினதும் தகுதியின்மையையும், வேதனத்திலான, பாதுகாப்பிலான அத்துடன் நீண்ட காலத் தொழில் அல்லது ஆரம்பநிலை உற்பத்தி ஆகியவற்றின் செயலினில் உண்மையான முடிவுடன் விடுவித்துக் கொள்ளமுடியாத இணைப்பினைக் கொண்டுள்ளதாக விளங்கும் தோற்றமானது அபிவிருத்தியின் நிதிப்படுத்தலின் ஆழமான கட்டமைப்பிலான பரிமாணத்தையும் மறைக்கின்றன.

அத்துடன் விண்ணப்பத்தில் அவர் வாக்குறுதியளித்துள்ளதைச் செய்வதற்கான ஆற்றலளவைக் கூட கடனைப் பெறவுள்ள விண்ணப்பதாரி கொண்டுள்ளாரா என வங்கிகள் மதிப்பிடுவதில்லை. அவர்களது ஒரேயொரு அக்கறை மீள்-கொடுப்பனவாகும் என்ற கருத்துக்கு விளைவிலான நிச்சயத்தன்மையானது சுயநலத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. (முன்னாள் கல்குடா கிராம உத்தியோகத்தர், ஆண், 68, நேர்முகங்காணல், 6 மார்ச் 2015). இது அனேகமாக கடன் பெறுபவர்கள் - பெரும்பாலும் பெண்கள் - பழைய கடன்களை இணக்குவதற்காக புதிய கடன்களை எடுப்பதையும், இது கடன்பட்ட நிலைக்கு படிப்படியான ஏற்றஇறக்கத்தினையும் கருத்தாகக் கொண்டுள்ளது. பின்விளைவுகள் மிக மோசமானவை என்பதுடன், துயர்நிறைந்ததும் கூட. கடன்பட்ட நிலையின் விளைவொன்றாக பெருமளவு தற்கொலைகள் இடம்பெற்றுள்ளதாகவும், மீள்-கொடுப்பனவுகளைச் செய்ய பெண்கள் பிந்துவதனால், கடன் சேகரிப்பாளர்களிடமிருந்து தொந்தரவுக்கு முகங்கொடுப்பதாகவும் நேர்முகங்காணப்பட்ட இன்னொரு வங்கி முகாமையாளர் உறுதிப்படுத்தினார் (ஆண், நேர்முகங்காணல், 4 மார்ச் 2015). கடன்களை மீள்-செலுத்துவதற்காக இரு பெண்கள் கடன் பெறுவதைத் தொடர்ந்ததாகவும், இறுதியாக அவர்கள் முகங்கொடுத்த துஷ்பிரயோகத்தினதும், தொந்தரவினதும் காரணமாக தற்கொலை செய்ததாகவும் ஓர் உள்ளூர் ஆண் அரசியல்வாதி தெரிவித்தார் (நேர்முகங்காணல், 18 மார்ச் 2015).

பாசிக்குடா போன்ற சூழமைவொன்றில் கடன்-நம்பிக்கை மற்றும் கடன் செலுத்தலிலான சுய-தொழில் ஆகியன மீது தங்கியிருத்தல் என்பது உண்மையில் செயலாற்றும் இடத்தில் வெளியேற்றத்தை கீழ்க்கோடிடுகின்றது. கைக்கடக்கமான சார்புரீதியில் வெற்றிகரமான விடயங்களில் கூட சுற்றுலாத்துறை தொழிற்துறையினுள் சுய-தொழிலானது பரவலாக்கத்தை இயலச்செய்வதற்கான ஆரம்பநிலையாக செயலாற்றியுள்ளதுடன், நிச்சயத்தன்மையிலிருந்து இடைத்தங்கலொன்றை

இயலச்செய்கின்ற மூலதன ஒன்றுதிரட்டலானது இயலச்செய்வதை விட அபாயத்தைப் பரப்புகின்றது. ஹொட்டேல்களுக்கு விற்பனை செய்த வேளை அவரது வருமானம் அதிகரித்துள்ளதாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள கைவினைப்பொருள் விற்பனையாளராக சவி குறிப்பிடுகின்றார். *'எமக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர்; வருமானம் அதிகரித்தாலும் அது போதுமானதல்ல. ஆனால், நாம் சம்பாதிக்கின்ற மேலதிகப் பணத்தினால், நாம் எமது வீட்டை முன்னேற்றியுள்ளோம்'* (நேர்முகங்காணல், 4 மார்ச் 2015).

தற்போது கண்ணாடிப்படகொன்றை சொந்தமாகக் கொண்டிருப்பதும், படகுப் பயணங்களையும், கடலுக்கடியிலான நீச்சலையும் நடத்துகின்றதுமான ரொமேஷ் தனது வருமானம் பருவகாலத்தில் மட்டுமல்ல, ஆனால் நாளுக்கு நாள் ஏறி இறங்குகிறது எனக் குறிப்பிட்டார். சில நாட்களில் அவர் நாளொன்றுக்கு ரூபா 1,500 உழைக்கிறார்; வேறு நாட்களில் அது மிக அதிகளவாக அல்லது மிகக் குறைவாக இருக்கும் என அவர் கூறினார். இந்த வருமானத்தைக் குறைநிரப்புவதற்காக தமது வீட்டின் முன்புறத்தில் ஒரு சிறிய பலசரக்குக் கடையை அவரது மனைவி நிருவகிக்கின்றார். சுற்றுலாப்பயணிகளை நம்பி சுய-தொழிலில் ஈடுபடுவது எப்பொழுதுமே இலகுவல்ல என அவர் கீழ்கோடிடுகின்றார். ஒத்ததன்மையிலான உள்ளூரில் நிருவகிக்கப்படும் சுற்றுலாக்களில் பங்கெடுப்பதற்கு தமது விருந்தினர்களை அனுமதிப்பதற்கு சில உல்லாசத்தளங்கள் தயங்குகின்றன.

# 5 முடிவுரைகள்

## 5.1 உள்ளூர்வாசிகளின் வெளியேற்றம்

சிதைவடையக்கூடியதும், நிச்சயதன்மையற்றதுமான சமூக மற்றும் பொருளாதார நிலப்பரப்பு மீது ஆடம்பரத்தினதும், மேன்மிகையினதும் ஒன்றன் மேல் ஒன்றான அடுக்கினை பாசிக்குடாவின் ஆடம்பரச் சுற்றுலாத்துறை நிலப்பகுதி உதாரணங்காட்டி விளக்குகின்றது. உல்லாசத்தளங்களுக்கு ஏதேனும் பெறுமதியைச் சேர்க்கக்கூட முடியாத நிலையில் உள்ளூர் பொருளாதாரம் உள்ளது என்பதை வழங்குகையில், அவற்றை நிலைத்திருக்க வைப்பதை விலக்கிவிட்டு ஒன்றிணைப்பு செய்வதற்கு உண்மையாகவே வழியேதும் இல்லை. பாசிக்குடாவின் உல்லாசத்தளங்களின் முகாமையாளர்களுடனும் அத்துடன் வேறு சந்தை மூலங்களுடனுமான நேர்முகங்காணல்களிலிருந்து ஒன்று சேர்க்கப்பட்ட தகவலானது நிருமாணத்திற்கு சரீர உழைப்பினையும், சில அடிப்படையிலான நிருமாணப் பொருட்களையும் அத்துடன் சிறிய சதவீதத்தைக் கொண்ட வேலைப்படையையும் பயன்படுத்தியதற்கு அப்பால் உள்ளூர் சமூகத்திலிருந்து உல்லாசத்தளங்கள் முற்றுமுழுதாக தொடர்பற்றுள்ளது. உள்ளூரில் தமது உடன்கடல் உணவின் சிறிதளவு விகிதாசாரத்தை சில உல்லாசத்தளங்கள் பெறுகின்ற அதேவேளை, இதன் குறிப்பிடத்தக்க விகிதாசாரமும் அத்துடன் மரக்கறிகள், பாற்பண்ணை உற்பத்தி, கோழி உற்பத்தி, இறைச்சி மற்றும் உலர் பங்கீட்டுப்பொருட்கள் ஆகியன பாரிய அளவிலான கொழும்பைத் தளமாகக் கொண்ட வர்த்தகர்களிடமிருந்து அல்லது தம்புள்ளை, நுவரெலியா மற்றும் கொழும்பு ஆகிய சந்தைகளின் ஊடாக பெறப்படுகின்றன அல்லது இறக்குமதி செய்யப்படுகின்றன. இதுவே ஹொட்டேலில் உள்ள வன்பொருட்கள் அத்துடன் மரத்தளபாடங்கள், துணிவகைகள், அலங்காரம் ஆகியனவற்றுக்கும் விடயமாக விளங்குகின்றது.

உள்ளூர் பொருளாதாரத்திற்கு உல்லாசத்தளப் பொருளாதாரம் சிறிதளவே பங்களிக்கின்றது என்பதைக் கீழ்க்கோடிடுவது முக்கியமாகும். ஏற்கனவே கீழ்க்கோடிட்டவாறு, பாசிக்குடாவின் உல்லாசத்தளப் பொருளாதாரம் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது. பொதுவாக, சொந்த நாடுகளில் உள்ள சுற்றுலா ஒழுங்கமைப்பாளர்கள் தமது கிளைகளின் அல்லது உள்ளூர் இணைப்புக்களின் அல்லது சொந்த நாட்டு (பொதுவாக கொழும்பைத் தளமாகக் கொண்ட) ஒழுங்கமைப்பாளர்களின் ஊடாக வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளின், விசேடமாக குழுக்களின் பயணங்களை வசதிப்படுத்துகின்றனர். அவர்கள் வழமையாக உல்லாசத்தளங்களில் ஒன்றுக்கு வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றனர் அல்லது மட்டக்களப்பில் கடல் விமானம் மூலம் வந்திறங்குகின்றனர். பெரிதுமே அவர்களது சகல ஏற்பாடுகளும் 'சகலமும்' (அனைத்தும்) உள்ளடங்கலான பொதிகள்' மீது விளங்குகின்றன. உண்மையில், தமது இணையதளங்களில் கவர்ச்சிகரமான முழுமையான அல்லது பகுதித்தங்கலான பொதிகளை ஒரு தொகையிலான உல்லாசத்தளங்கள் தாமாகவே வழங்குகின்றன. உண்மைநிலையாக, அண்ணளவாக இரு மணித்தியால வாகனமோட்ட தூரத்தில் உள்ள பொலன்னறுவையில் உலக அந்தம் போன்ற கவரும் இடங்களுக்கான ஒரு நாள் பயணங்களை விட, விருந்தினர்கள் உல்லாசத்தளங்களை விட்டுச் செல்வதில்லை.

சகலமும் உள்ளடங்கலான சுற்றுலா சுற்றுலாப்பயணிகளுக்கு அந்த ஒழுங்கில் சுற்றுலா ஒழுங்கமைப்பாளர்களும், ஹொட்டேல் உரிமையாளர்களும் மிகவும் இலாபகரமாக உள்ள அதேவேளை, உள்ளூர்வாசிகளும் அத்துடன் செல்லுமிட நாட்டின் தேசியப் பொருளாதாரமும் குறைந்தபட்ச நன்மைகளைக் கொண்டிருப்பதாகவே முனைவுபடுத்தப்படுகின்றது. 'உள்ளூர் இயற்கைச் சொத்துக்களினதும், உட்கட்டமைப்பினதும் மீது மிக அதிகளவு கிராக்கியை இடுவதற்கு முனைகின்ற சகலமும் உள்ளடங்கலான பொதிகளைக் கையாளும் வெளிநாட்டு ஒழுங்கமைப்பாளர்கள் அரசாங்கத்துறை வருமானத்திற்கு குறைந்தபட்சத்தைப் பங்களிப்பதாகவே தோன்றுகின்றது' என கென்யா மீதான 2010 உலக வங்கி அறிக்கையொன்று கண்டறிந்துள்ளது (2010:20). 'பாரம்பரியமான முழு உணவுவசதி கடற்கரைச் சுற்றுலாப் பொதிகள் துறைக்கு குறைந்தபட்ச பொருளாதார நன்மையையே விளைவாக வழங்குகின்றன' என அதே ஆய்வு கண்டறிந்தது (அதே கற்கை.:51).

[9] ஹெலிடூர்ஸ் (Helitours), சினமன் எயார் (Cinnamon Air), சிம்பிளிப்(f)ளை (Simplifly) போன்றசில உள்நாட்டு விமான சேவைகள் வழங்கும் சில நிறுவனங்களால் நடத்தப்படும் உல்லாசத்தளங்களின் இணையத்தளத்தில் விளம்பரப்படுத்தப்படுத்தப்பட்டிருந்தது

உள்ளூர் பொருளாதாரங்களுக்கும், சமூகங்களுக்கும் சகலமும் உள்ளடங்கலான சுற்றுலாத்துறை கொண்டுவரும் மட்டுப்படுத்தப்பட்ட பெறுமதியை வலியுறுத்துகின்ற ஜமெய்க்காவிலிருந்து ஸ்பெயினில் உள்ள மலோர்க்கா வரை மற்றும் இந்தியாவில் உள்ள கோவா வரை சகலவையும் உள்ளடங்கலான கடற்கரை சுற்றுலாத்துறை மீதான சான்றினை Tourism Concern ஆவணப்படுத்தியுள்ளது. 2013இல், மூன்று நாடுகளில் உல்லாசத்தளங்களில் ஆய்வொன்று மீதான அடிப்படையில் சகலவையும் உள்ளடங்கலான உல்லாசத்தளங்களில் சரீர உழைப்பு நிலைகளையிட்டு ஆராய்ச்சி அறிக்கையொன்றை தாபனம் வெளியிட்டது. பலதரப்பட்ட ஹொட்டேல்களில் நிச்சயமின்மையிலான வேலை, குறைந்த தொழிற்சங்க அழுத்தங்கள், குறைந்த வேதனங்கள், நீண்ட வேலை செய்யும் நேரம், சமமற்ற வாய்ப்புக்கள் ஆகியன நிலவுவதாக இது வெளிப்படுத்தியுள்ளது. சகல உள்ளடங்கலான ஹொட்டேல்களிலும் தாக்கங்கள் மிக அளப்பரியவையாகும். விசேடமாக குறைந்த அறை வீதங்களுடன் பெறுமதிச் சங்கிலியை ஒருவர் இறக்குவதனால், என்றுமே இறுக்கமாகவுள்ள ஓரங்களினால் சித்தரிக்கப்பட்டுள்ளவாறு, பெறுமதிச் சங்கிலியின் அடிப்புறத்தில் ஹொட்டேல் ஊழியர்கள் அனேகமாக இருப்பதே இதற்கான ஆரம்பநிலையிலான காரணமாகும்.

பாசிக்குடாவினுள் சுற்றுலாப்பயணிகளுடனான சுற்றுலாக்கள் கூட அனேகமாக பகுதிக்கு வெளியே உள்ள வியாபாரங்களுடனான கூட்டுமுயற்சியுடன் நடத்தப்படுகின்றன. சாகசம், இயற்கை மற்றும் நீர் விளையாட்டுக்கள் ஆகியவற்றின் நிபுணத்துவத்தைக் கொண்டதும், பாசிக்குடா கடற்கரையில் சௌகரியமாக அமைந்ததும், கொழும்பில் தலைமையகத்தைக் கொண்டதுமான பிரயாண பங்காளரான Lanka Sportreizen இன் (LSR) சேவைகளையே அனேகமாக சகல உல்லாசத்தளங்களும் பெறுகின்றன. ஸ்கூபா (Scuba), நிலத்தடிநீர் நீச்சல், நீரில் பறத்தல், படகோட்டுதல், படகுப் பிரயாணங்கள், ஜெட் ஸ்கூட்டர் சவாரிகள், விரைவுப்படகுச் சவாரிகள் மற்றும் ஆழ் கடல் மீன்பிடித்தல் ஆகியவற்றினை LSR உடன் உல்லாசத்தளங்கள் கூட்டுமுயற்சிகளை மேற்கொள்கின்றன. உள்ளூர்வாசிகளுடன் வேலை செய்வதிலும் விட LSR உடன் பங்காளராக விளங்குவதற்கு ஏன் தாம் விரும்புகின்றனர் என ஒரு உல்லாசத்தளத்தின் முகாமையாளர் வெளிப்படையாக விளங்கினார்: *'நாம் அவர்களை (LSR) பரிந்துரைக்கின்றோம். ஏனெனில் எமது விருந்தினர்களின் பாதுகாப்பினை விட்டுக்கொடுப்பதற்கு நாம் விரும்பவில்லை. இதுவே உள்ளூர் மீனவர்களுடன் ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கு எமது விருந்தினர்களை நாம் அனுமதிக்காததிற்கு காரணமாகும். உள்ளூர்வாசிகள் போதியளவு பாதுகாப்புக் கருவிகளைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், ஏதாவது நடந்தால் அதற்காக எம்மைக் குற்றஞ்சாட்டுவதை நாம் விரும்பவில்லை'* (நேர்முகங்காணல், 4 மார்ச் 2015).

உள்ளூர் மூலவளங்களின் - குறிப்பாக நன்னீரின் - மிக அதிகளவு தொகையை பாசிக்குடாவில் உள்ள உயர் பெறுமதியிலான உல்லாசத்தளங்களில் உள்ள சுற்றுலாப்பயணிகள் நுகர்வதுடன், உள்ளூர் சமூகத்தை விட குறிப்பிடத்தக்க அதிகளவு கழிவைத் தோற்றுவிக்கின்ற அதேவேளை, உள்ளூர் பொருளாதாரத்திற்கு சார்புரீதியில் சிறிதளவையே உல்லாசத்தளப் பொருளாதாரம் பங்களிக்கின்றது. சில தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ள அதேவேளை,

(i) எண்ணிக்கையில் எத்தனை இருந்தது என்பதை விடவும், அரசாங்க அலுவலர்களினாலும் அத்துடன் உல்லாசத்தளங்களினாலும் இன்னுமே வலியுறுத்தப்படுகிற எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும். அத்துடன் (ii) உள்ளூர்வாசிகளுக்கான தொழில்கள் குறைந்த கொடுப்பனவிலானது, ஊதியக் கூம்பகத்தின் அடிப்புற முடிவில் விளங்குவதுடன், பெருமளவு விடயங்களில் நிச்சயதன்மையற்றவையுமாகும் என்பன தெளிவாகும்.

விருந்தினர் இல்லங்களினதும், அவற்றின் கொள்வனவு பெறுமதிச் சங்கிலியைப் பொறுத்தளவில் உள்ளூர் பொருளாதாரத்துடன் அவற்றின் ஒன்றுடன் ஒன்று தங்கியிருத்தலினதும் துரித மதிப்பீடொன்றானது, ஒன்றிணைப்பின் மிகவும் உயர்வான மட்டமொன்றை எதிர்பார்க்கப்பட்டவாறு வெளிப்படுத்தியது. அவற்றில் பெரும்பாலானவை உள்ளூர் மீன்பிடி வாடியிலிருந்து தமது கடல் உணவைக் கொள்வனவு செய்வதுடன், வாழைச்சேனையிலிருந்து அல்லது மட்டக்களப்பிலிருந்து மரக்கறிகள், இறைச்சி மற்றும் உலர் பங்கீட்டுப் பொருட்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்கின்றன. இதேபோல, மரத்தளபாடங்கள், துணிவகை போன்ற அனேகமாக அவற்றின் முழு உட்கட்டமைப்பும் பொதுவாக மட்டக்களப்பு நகரத்தில் இருந்தே வருகின்றன. சிறிய அளவிலான சுற்றுலாத்துறையின் நன்மைகளை இது நன்கு கீழ்கோடிடுகின்ற அதேவேளை, லீவு, வேலைசெய்யும் நேரம், ஒப்பந்தங்கள் மற்றும் நன்மைகள் போன்ற சில கணிப்புகள் மீது உள்ளூர் விருந்தினர் இல்லங்களில் வேலைசெய்யும் நிலைமைகள் உல்லாசத்தளங்களை விட மோசமானவை என்பதைக் குறித்துக்கொள்வது முக்கியமானதாகும். சிறிய விருந்தினர் இல்லங்களில் பெண்களின் சரீரஉழைப்பின் சுரண்டலின் உயர்வான மட்டமொன்றும் உள்ளது. இங்கு பெண்கள் அனேகமாக பங்களிக்கும் குடும்ப ஊழியர்கள் (அல்லது அறவே கொடுப்பனவு செய்யப்படுவதில்லை) என்பதுடன், தமது விருப்பத்திற்கேற்ப தொழில் ஒன்றில் ஈடுபடுவதற்கு மிகவும் சிறிதளவு வாய்ப்புக்களையே கொண்டுள்ளனர்.

[10] பார்க்க : https://www.tourismconcern.org.uk/all-inclusives/

[11] இதனையும் பார்க்க : also http://www.theguardian.com/travel/2014/mar/08/all-inclusiveholidays-travel-ethical-tourism

## 5.2 இனத்துவ விரோதத்தையும், வம்சாவழி தரங்களையும் பிரதியெடுக்கும் தற்சார்புத் தன்மைகள்

நிச்சமின்மையின் நிலப்பரப்பொன்றினதும் அத்துடன் வேதனையின் மரபுரிமையொன்றினதும் மேலாக, யுத்தத்திற்குப் பிந்திய பாசிக்குடாவின் ஆடம்பர சுற்றுலாத்துறையின் சுற்றுப்பகுதிகள் தெளிவின்றி தோன்றுகின்றன. உள்ளூர் சமூகங்களின் அடைதலுக்கு அப்பாட்பட்ட வசதிகளுடனும், சேவைகளுடனும் சூழவுள்ள அல்லது பின்தங்கிய பகுதிகளின் குடியிருத்தல் ஒன்றாக 'உள்ளகக் குடியேற்றத்தின்' வகையொன்றாகவே சுற்றுப்புற சுற்றுலாத்துறையை Mbaiwa (2005: 159–160, after Ceballos-Lascurain, 1996) குறிப்பிடுகின்றார். உல்லாசத்தளங்களை ஊடுருவுகின்ற ஏதேனும் 'இனத்துவ' சிறப்பியல்புகள் அத்துடன் தற்சார்புத்தன்மை ஆகியன பொதுவாகவே மிகத் தெளிவாக சிங்களவர்களை முனைவுபடுத்துவதில் 'உள்ளூர்வாசியின்' வெளியேற்றம் வெளிப்படுத்துகின்றது. பெருமளவு உல்லாசத்தளங்களில் சிங்கள வரவேற்று வழக்கொன்றான 'ஆயுபோவன்' ஒன்றுடனேயே ஒருவர் வரவேற்கப்படுகின்றார். ஆனால், 'வணக்கம்' என்ற சமமான தமிழ் சொல்லுடன் அல்ல. ஆனால், உல்லாசத்தளங்களில், குறிப்பாக விருந்தினர் இடைமுகப் பதவிநிலைகளில் எவ்வளவு தமிழ் பேசுபவர்கள் உள்ளனர் என்பதை வழங்குகையில், பகுதியானது 98%ஐக் கொண்ட தமிழ் பேசும் பகுதியாக விளங்குகின்ற போதிலும் கூட, இது ஆச்சரியப்படத்தக்கதல்ல. கலை மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றிலிருந்து Habala Pool Bar மற்றும் Ruwala Restaurant - Sri Lankan போன்ற ஹொட்டேல்களிலும், அவற்றினுள் இருக்கும் பகுதிகளிலும் மொழி மற்றும் அவற்றின் பெயர்கள் யாவுமே பாசிக்குடாவின் உல்லாசத்தளம் முற்றுமுழுதான சிங்களமயமானதாகவே விளங்குகின்றது.

உல்லாசத்தளங்களில் சிறந்த வாழ்க்கையொன்றுக்கான வாய்ப்புக்களை உள்ளூர் சமூகத்திலிருந்து ஒரு கைநிறைவான உல்லாசத்தள ஊழியர்கள் கண்டறிகின்ற அதேவேளை, வர்த்தக நோக்கங்களுக்காக தமது காணி, கடற்கரைகள் மற்றும் கலாசாரம் ஆகியவற்றின் வெளியார் - வாசிக்க சிங்களவர்கள் குடியிருப்பவையாக மனவுணர்வு கொள்ளப்படும் விடயம் அசௌகரியம் என்பதே தலையாய விவரணமாகும். உல்லாசத்தளங்களில் ஊழியர்களாக சில உள்ளூர்வாசிகளின் பிரசன்னமானது உள்ளடக்கலிலான உணர்ச்சியின் அர்த்தமொன்றாகப் பொருள்விளக்கமளிக்கின்றது என்பதை அனுமானிப்பது தவறொன்றாகும் என்பது தெளிவானதாகும். உல்லாசத்தளங்களினுள் பதவிவரிசை மற்றும் பதவிநிலைகள்,தேர்ச்சித்திறன்கள், மொழி அல்லது வாய்ப்புக்கள் ஆகியன தொடர்பில் அவர்களின் ஓரங்கட்டப்படுதலின் உள்ளடக்கங்களை கருத்தாகக் கொண்டிருக்கவில்லை என்பதை கீழ்க்கோடிடுகின்றது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுலாத்துறை விருத்திசெய்யப்படுகின்ற வழியானது, இனத்துவப் பிரச்சனைக்கு உள்ளீடாகவுள்ள உறுதியான நிலைப்பாட்டுக்கும், கட்டமைப்பிலான வெளியேற்றத்திற்கும் பொருளாதார அபிவிருத்தி என்றுமே சஞ்சீவியொன்றாக விளங்கலாம் என்ற மிக எளிமையிலான விவரணத்தின் குறுக்கு விசாரணையொன்றையிட்டு மன்றாடுகின்றது.

வாய்ப்புக்களின் புகலிடமொன்றாக சுற்றுலாத்துறையை முன்னேற்றுதல் தொழிற்துறையில் பிரவேசிப்பதில் பெண்கள் முகங்கொடுக்கும் பல்-எண்ணிக்கையிலான தடைகளுக்கு அபூர்வமாகவே பொறுப்புக்கூறுகின்றது (நாணயக்கார, 2016). உல்லாசத்தளங்களில் வேலைசெய்வதில் சமூகத்திலிருந்து பெண்களுடன் இணைந்துள்ள களங்கமானது பாசிக்குடாவில் அதிகளவு கண்கூடானதாகும். தொழிலுக்கான பெண்களின் விருப்புக்களை நிர்ணயிப்பதில் மட்டுமன்றி, ஆனால் வீட்டு அதிகார எல்லைக்குள் அவர்கள் கட்டுப்பட்டிருத்தல் பற்றிய பலமான சமிக்ஞை ஒன்றை அனுப்புவதிலும் பெண்களின் வம்சாவழியிலான சமூகக் கட்டுப்பாட்டின் அமைப்பொன்றாக இது செயல்படுகின்றது. இருந்த போதிலும், பாசிக்குடாவில் தாபிக்கப்பட்ட பால்நிலை உறவுகள் மீதான பிளவை ஏற்படுத்துகின்ற தாக்கமொன்றை உல்லாசத்தளப் பொருளாதாரத்தின் படையெடுப்பு கொண்டுள்ளது என்பது தெளிவானதாகும். ஆனால், நிச்சயமின்மையுடன் உல்லாசத்தள வேலை சுமத்தப்பட்டிருப்பதால், அதிகாரமளிப்பினுள் இது சமவளவில் பொருள் விளக்கமளிக்கவேண்டியது என்பது கட்டாயமல்ல.

ஆண் 'ஏனையோரின்' இடங்களாக உல்லாசத்தளங்கள் கருதப்படுவதனால், இனங்களுக்கிடையிலான மோதலினதும், மனக்குறைகளினதும் வரலாறு நிச்சயமின்மைத்தன்மையின் இன்னொரு அடுக்கினைச் சேர்த்துக்கொள்கின்றது.

எனவே, கலப்பு-இனத்துவப் பாலியல்ரீதியலான நேசங்கொள்ளுதலைச் சுற்றியுள்ள ஒழுக்கத்திலான பயம் மீதான அடிப்படையில்



பொதுக் கடற்கரை மீதான விற்பனைக் கூடங்கள்: ஊறுபடத்தக்க குடித்தனங்களின் வாழ்வாதாரங்களைப் பலப்படுத்தும் வழிவகைகளில் ஒன்றாக அரசாங்கத்தினால் பாசிக்குடாவில் நுண்-வியாபார முயற்சிகள் முன்னேற்றப்படுகின்றன.

பாரதூரமான கௌரவத்திலான அபாயங்களுக்கு இந்த இடங்களில் வேலை செய்யும் பெண்கள் முகங்கொடுக்கிறார்கள். சமூகத்தினுள் இளம் பெண்களுக்கு கவர்ச்சியாகவும், பரபரப்பூட்டுவதாகவும் சுற்றுலாத்தொழிற்துறை அதிகளவு முன்னேற்றப்படுகின்ற போதிலும், வாழ்க்கைத்தொழில் நகரும் தன்மையினதும் (நெடுங்குத்தாகவும், கிடையாகவும்) மற்றும் உயர்வான வருமானங்களினதும் வாய்ப்புவளமொன்று இருந்தால் கூட, துறையில் பிரவேசிப்பதிலிருந்து பெண்களை அத்தகைய பால்நிலையிலான சமூகப் பெறுமானங்கள் தடுக்கும்.

## 5.3 அபிவிருத்தியின்மையின் ஒரு கருத்துருவம்

உல்லாசத்தளப் பொருளாதாரத்திற்கு பாசிக்குடாவிலும், அதைச் சுற்றியும் ஆரம்பநிலை உற்பத்தி அல்லது தொழில் மற்றும் ஊதியச் சரீர உழைப்பு ஆகியவற்றில் நெருக்கடிநிலையைச் சாட்டுவது எளிமையாக விளக்கும் விடயமொன்றாகும். அதுவாகவே அபிவிருத்தியின் மாதிரியின் திறனாய்வொன்று பாசிக்குடாவின் உல்லாசத்தளப் பொருளாதாரத்தின் திறனாய்வாகும். உல்லாசத்தளப் பொருளாதாரத்தைப் பாசிக்குடாவின் உள்ளூர் பொருளாதாரத்தினால் உறிஞ்ச அல்லது ஆதரவளிக்க முடியாது என்ற வலியுறுத்துதலானது திரும்பத் திரும்ப கூறுவது போல மிகவும் ஆரோக்கியமாக இருக்கும். ஆனால், அந்த மூலதனத்தைக் கவர்வதற்காக நெம்புகோல்படுத்தப்பட்ட தனியார் மூலதனத்தினதும் மற்றும் அரசாங்க நிதிசார் மற்றும் இயற்கையான முதலினதும் தொகையளவு சார்பாக உள்ளூர் பொருளாதாரத்திற்கு ஒப்பீட்டிலான பெறுமதியின் சிறிதளவையே உல்லாசத்தளப் பொருளாதாரம் பங்களிக்கின்றது. உள்ளூர் மற்றும் தேசியப் பொருளாதாரத்திற்கு அதன் தேறிய பங்களிப்பினை மதிப்பிடுவதற்காக மிகவும் விரிவானதொரு பெறுமதிச் சங்கிலிப் பகுப்பாய்வு அவசியமாகும்.

ஆனால், பெருமளவு தொடர்புகளில், முதலீட்டாளர்களுக்கு நன்மையளிக்கும் உலகளாவிய மூலதனப் பாய்வில் இன்னொரு முடிச்சே பாசிக்குடாவின் உல்லாசத்தளப் பொருளாதாரமாகும்; கைவினைப்பொருட்களில் அல்லது நுண்-வியாபார முயற்சிகளில் சுற்றுலாத்துறை தொடர்பான சுய-தொழில் போன்றவாறு அதன் உள்ளூர்வாசிகள் நன்மையடைகின்றனர். ஆனால், இது ஒரு விபத்தேயாகும். கொழும்பிலிருந்து நேரடியாகச் செலுத்தப்படுகின்றதும், ஆதரவளிக்கப்படுகின்றதுமான முதலீட்டு முதல் உள்ளூர் சமூகங்களில் கருத்தாழமிக்க சமூக அபிவிருத்திக்காக அதன் மீதான ஏதேனும் குறிப்பிடத்தக்க பொறுப்பினை இடுவதற்காக பொறுப்பேற்பதைவிட, மிகக் குறைந்த தடங்கலுடன் செயற்படுத்தப்பட முடியும் என்பது தோற்றமானதாகும். சுனாமி தொடர்பான மரணங்கள், உரிமையைப் பறித்தல், இடம்பெயர்வு, காணாமல்போதல், நிறுவனரீதியிலான பாகுபாட்டின் விவரணங்கள் மற்றும் வெளியேற்றம் அத்துடன் யுத்தம் தொடர்பில் நீதிக்கான நிவாரணம் சாராத கோரல்கள் ஆகியவற்றின் ஊடாக பாசிக்குடாவில் 'விருந்தோம்பலின் காட்சி' (Tataryn, 2014) ஊடாக ஊகிக்கப்படுகின்றது.

ஆனால், விருந்தோம்பலின் விவரணங்களும், கட்புலன் சார்ந்தவைகளும் இப்பொழுதுள்ளவற்றை அழகுணர்ச்சிப்படுத்துவதையும், அயற்பண்புபடுத்தலையும் (வேறு வகையான சூழலொன்றுக்கு பழக்கப்படுத்தல்)நாடுவதன்

மூலமும், அப்பட்டமான வன்முறையினதும், அநீதிகளினதும் மரபுரிமைகளை அழிப்பதன் மூலமும் இவை யாவற்றையும் இடம்பெயரச் செய்வதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது: 'இந்த மறக்கப்பட்ட புவியின் மூலங்களில் நீங்கள் காலடி எடுத்து வைக்கும் போது நீங்கள் எதிர்நோக்குகின்ற நட்புறவிலான உள்ளூர்வாசிகளின் புன்னகைக்கும் முகங்கள் அந்த மோசமான ஆண்டுகளின் கதைகளைக் கூறும்'

## 5.4 முன்னோக்கி நகருதல்: மெதுவாக நகர்வதிலிருந்து பங்கிடப்படுகின்ற நீதிவரை

விசேடமாக, உள்ளூர் வேதனம் மற்றும் சுயதொழில் ஆகியவற்றின் அமைப்பிலும் அத்துடன் தேசியரீதியில் குறித்துரைக்கப்படாத பெறுமதி சேர்ப்பிலும் சில வழிந்தோடலின் சான்றின் மீது பாசிக்குடா மாதிரி ஒரு வெற்றி என்ற வலியுறுத்தலுக்கு அப்பால் செல்வது முக்கியமானதாகும். ஆரம்பமாக, ஏதேனும் சமூக அல்லது சூழல் ஆகுசெலவுகளை (ஆகும் செலவுகளை) வெளிப்படுத்தாமல், ஆகுசெலவுகளின் மிகவும் விரிவான கணக்கீட்டினைப் பொறுப்பேற்பது முக்கியமானதாகும்.

உள்ளடங்கலுக்கு ஒரு தேசப்படத்தை விருத்திசெய்வதற்கு உல்லாசத்தளப் பொருளாதாரத்தில் சக்திமிக்க பங்காளர்களுடன் உறுதியானதும், நோக்கிலானதுமான அரசாங்க மத்தியஸ்தத்திலான ஈடுபாடு முக்கியமானதாகும்.

உள்ளடங்கலையும், ஒப்புரவையும் மேம்படுத்துவதற்கு கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு போன்ற அப்பாலான உள்மைய வியாபாரத்தையும் அத்துடன் முன்னெடுப்புகளையும் அத்தகைய ஒரு வீதி தேசப்படம் நெம்புகோல்படுத்த வேண்டும். ஆனால், அத்தகையதொரு வீதித் தேசப்படமொன்றை வரைவதற்கான அடிப்படை சமூக ஒன்றுதிரட்டலை வசதிப்படுத்துவதே ஆகும் என்பதுடன், சமூக மற்றும் குடித்தன மட்டத்தில் தேவைகள், சொத்துக்கள் மற்றும் ஆற்றலளவுகள் ஆகியவற்றின் விரிவான பங்கெடுப்பிலானதும் மற்றும் சமூக அடிப்படையிலானதுமான மதிப்பீடுகள் இதற்கு முக்கியமானவையாகும். நடைமுறையில் பெண்களினதும், பெண் தலைமையிலான குடித்தனங்களினதும் வகிபங்கினையும், 'இடத்தையும்' பெற்றுக்கொள்ளுதல் சமவளவில் முக்கியமானதாகும்.

இது மறுபுறத்தில், அரசாங்கத்தின் பங்கின் மீதான அணுகுமுறையில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்றை வேண்டுகின்றது. உள்ளூர் மற்றும் தேசிய நன்மைகளை உச்சமாக்குவதற்காக உல்லாசத்தளங்களை மதிப்பிடுவதற்கும், கண்காணிப்பதற்கும் அத்துடன் ஈடுபடுத்துவதற்கும் இசைவான நிறுவனரீதியிலானதும் மற்றும் கொள்கைரீதியானதுமான வரைச்சட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கும், விருத்திசெய்வதற்கும் மாகாண, மாவட்ட மற்றும் உள்ளூராட்சி ஊழியர்களை அதிகாரமளிப்பது முக்கியமானதாகும். ஆரம்பத்தில், உல்லாசத்தள மற்றும் விருந்தினர் இல்லப் பொருளாதாரங்களில் தொழில் மற்றும் சூழல் ஒழுங்குவிதிகளுடனும், தரங்களுடனும் இணங்குவதையிட்டு கடுமையான கண்காணித்தலுக்கான அவசரமான அவசியமொன்றுள்ளது.

முக்கியமான கரிசனைகளை இருப்புக்கு எடுத்து, அரசாங்க மற்றும் உள்ளூர் சமூகங்களிலிருந்து பிரதிநிதிகளையும் அத்துடன் பலமான சுதந்திரமான சிவில் சமூக குரல்களையும் மற்றும் நிபுணர்களையும் உள்ளடக்குகின்ற இணைப் பொறிமுறையொன்றைத் தாபிப்பதும் அத்துடன் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத் திட்டங்களை விருத்திசெய்வதும் இன்றியமையாத ஒன்றாகும். ஒரு விருந்தினர் இல்லப் பொருளாதாரம், ஆரம்பநிலையிலான உற்பத்தி, விசேடமாக மீன்பிடித்தல் மற்றும் விவசாயம், சுய-தொழில், வேறு வடிவங்களைக் கொண்ட ஊதியச் சரீரஉழைப்பு போன்ற ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படும் விதத்தில் பாசிக்குடாவின் உல்லாசத்தளப் பொருளாதாரம் பல்-எண்ணிக்கையிலான பொருளாதாரங்களில் ஈடுபடுவதற்கு ஏதேனும் அத்தகைய நடைமுறை பொறுப்புக்காட்டுவதும் முக்கியமானதாகும்.

மூலதனத்தை நோக்கி அரசாங்கத்தின் அதிகாரத்தின் சமநிலை அதிகளவு சுமையேற்றப்பட்டுள்ளது என்பதை வழங்குகையில், சிவில் சமூகத்தினதும், பரிந்துரைக்கும் குழுக்களினதும் கணிசமானளவு அழுத்தம் இன்றி இது எதுவோ அது அனேகமாக நடக்கமாட்டாது. உண்மையில், பாசிக்குடாவை இன்று சித்தரிக்கின்ற சமநிலை இன்மைகளுக்கும், வெளியேற்றங்களுக்கும் நிவாரணமளிப்பதற்கு அழுத்தத்தைத் தோற்றுவிப்பதற்கு சர்வதேசப் பரிந்துரைப்பும், உலகளாவிய பங்காளித்துவமும் அத்துடன் முன்னெடுப்புகளும் கூட அவசியமானவையாகும். உல்லாசத்தளங்களினதும், அரசாங்கத்தினதும் மீது ஒரே மாதிரியாக பொறுப்பு சுமத்தப்பட வேண்டும். ஆனால், உள்ளூர் ஒன்றுதிரட்டலே இதற்கு முக்கியமானதாகும்; இதைச் செய்வதற்கு உகந்த அரசியல் தருணமொன்று எப்பொழுதாவது இருந்தால், அது இப்பொழுதே இருக்கவேண்டும்.

## உசாத்துணைகள்


Ahiakpor, J.C.W. (1985) 'The success and failure of dependency theory: The experience of Ghana', International Organisation 39: 535–53.

Altheide, D. (1996) 'Process of document analysis', in Qualitative media analysis. Thousand Oaks, CA: SAGE Publications: 23–43.

Asbury, J.E. (1995). 'Overview of Focus Group Research', Qualitative Health Research 5: 414-420.

Ashley, C., de Brine, P. and Wilde,H. (2007) The role of the tourism sector in expanding economic opportunity. Corproate Social Responsibility Initiative Report 23.Cambridge, MA: Kennedy School of Government, Harvard University.

Bagchi, D., Blaikie, J., Cameron,M., Chattopadhyay, N., Gyawali, N. and Seddon, D. (1998) 'Conceptual and methodological challenges in the study of livelihood trajectories: Case studies in Eastern India and Western Nepal', Journal of International Development 10:453–68.

Batticaloa District Secretariat (2014) Batticaloa statistical handbook. 2013/2014. Batticaloa : Batticaloa District Secretariat.

Bell, D. (2009) 'Tourism and hospitality', In T. Jamal and M. Robinson The Sage handbook of tourism studies. London: Sage Publications Ltd.

Bernhardt, A., Dresser, L. and Hatton, E. (2003) 'The coffee potwars: unions and firm restructuring in the hotel industry', in E. Applebaum, A. Bernhardt and R.J. Murnane Low-wage America: How employers are reshaping opportunity in the workplace. New York: Russell Sage Foundation.

Berg, B. (2001) Qualitative research methods for the social sciences. Boston, MA: Allyn and Bacon.

Blank, U. (1989) The community tourism imperative. State College, PA: Venture Publishing, Inc.

Bohle, H.G. and Funfgeld, H. (2007)'The political ecology of violence in eastern Sri Lanka', Development and Change 45(4): 665–87.

BRA (British Resorts Association)(2000) UK seaside resorts –behind the facade. South port: BRA.

Britton, S.G. (1982) 'The political economy of tourism in the third world', Annals of Tourism Research9: 331–58.

Bryceson, D.F. (1999) Sub-Saharan Africa betwixt and between: Rural livelihood practices and policies. Working Paper 43. Leiden: Afrika Studiencentrum.

Cain, A. (2007) 'Housing micro finance in post-conflict Angola. Overcoming socioeconomic exclusion through land tenure and access to credit", Environment and Urbanization 19: 361-390.

Carney, D. (1998).Sustainable rural livelihoods: What contributions can we make? London: DFID.

Creswell, J. (1998) Qualitative inquiry and research design choosing among five traditions. Thousand Oaks, CA: Sage Publications.

De Haan, A. (1999) 'Livelihoods and poverty: The role of migration– a critical review of the migration literature', Journal of Development Studies 36(2): 1–47.

De Haan, A. and Brock, K. (2000)Migration and livelihoods: Case studies in Ethiopia, Bangladesh and Mali. Brighton: IDS.

De Haan, L. (2012) ‘The livelihood approach: A critical exploration’, Erdkunde, 66(4): 345–57.

De Kadt, E. (1979) ‘Politics, planning and control’, in Tourism: Passport to development? Oxford: Oxford University Press.

Department of National Planning(2010) Mahinda Chinthana, vision for the future: The development policy framework of the government of Sri Lanka. Colombo: Department of National Planning.

Eadington, W.R. and Redman, M.(1991) “Economics and tourism’, Annals of Tourism Research 41–56.

Evans, P. (1979) Dependent development: The alliance of multinational, state and local capital in Brazil. Princeton, NJ: Princeton University Press.

Fernando, P. and Moonesinghe, S.(2012) Livelihoods, basic services and social protection in Sri Lanka. Working Paper 6. London: SLRC.

Francis, E. (2000) Making a living: Changing livelihoods in rural Africa. London: Routledge.

Gereffi, G. (1978) ‘Drug firms and dependency in Mexico: The case of the steroid hormone industry’, Industry Organisation 32: 237–86.

Goger, A. and Ruwanpura, K. (2014)Ethical reconstruction? Primitive accumulation in the apparel sector of Eastern Sri Lanka. Colombo : International Centre for Ethnic Studies.

Good hand, J., Hulme, D. and Lewer, N. (2000) ‘Social capital and the political economy of violence: A case study of Sri Lanka’, Disasters 24(4):390–406.

Greico, J.M. (1990) Cooperation among nations: Europe, America and non-tariff barriers to trade. Ithaca, NY: Cornell University Press. Hall, C. (2000) Tourism planning : Policies, processes and relationships. New York: Prentice Hall.

Hemmington, N. (2007) ‘From service to experience: Understanding and defining hospitality’, Service Industries Journal 27(6): 747–55.

Hudson, R. and Townsend, A. (1993)‘Tourism employment and policychoices for local government’, in P. Johnson and B. Thomas Perspectives on tourism policy. New York: Mansell Publishing Limited.

Hyndman, J. (2015) ‘The securitisation of Sri Lankan tourismin the absence of peace’, Stability : International Journal of Security &Development 4(1): 1–16.

ICG (International Crisis Group)(2008) Sri Lanka’s Eastern province:Land, development, conflict. Brussels: ICG.

ILO (International Labour Organization) (2014) ‘Report on value chain analysis of the tourism sector in Ampara and Batticaloa districts’. Local Economic Development through Tourism Project. Colombo: ILO.

Keohane, R.O. and Milner, H.V.(1996) Internationalisation and domestic politics. Cambridge: Cambridge University Press.

Krinsky, C. (2008) ‘Introduction : Moral panic concepts’, in The Ashgate research companion to moral concepts. Surrey: Ashgate Research Limited.

Krasner, S.D. (1991) ‘Global communications and national power: Life on the Pareto frontier’, World Politics 43: 336–66.

Lazzarato, M. (2014) Signs and machines: Capitalism and the production of subjectivity. Los Angeles, CA: MIT Press

Leatherman, J. and Marcouiller, D.W.(1996) ‘Estimating tourism’s share of local income from secondary data sources’, Review of Regional Studies317–39.

Lee, C.K. and Kang, S. (1998) 'Measuring earnings inequality and median earnings in the tourism industry', Tourism Management341–48.

Leiper, N. (1999) 'A conceptual analysis of tourism-supported employment which reduces the incidence of exaggerated, misleading statistics about jobs', Tourism Management 605–13.

Lejarraga, I. and Walkenhorst, P.(2006) Of linkages and leakages : How tourism can foster economic divsersification. New York: WorldBank.References30 www.securelivelihoods.org

Luloff, A.E., Bridger, J., Graefe, A.,Saylor, M., Martin, K. and Gitelson,R. (1994) 'Assessing rural tourismefforts in the United States', Annals of Tourism Research 46–64.

Mann, G. (2008) 'The social production of skill', in R. Fletcher Beyond resistance: The future of freedom. New York: Nova Science Publishers.

Maclean, K. (2012) 'Gender, risk and micro-financial subjectivities',Antipode 00(0): 1–19.

Marx, K. (1990) Capital: A critique of political economy. London: Penguin Books.

Mbaiwa, J.E. (2003) 'Enclave tourism and its socio economic impacts in the Okavango Delta, Botswana',Tourism Management 26: 157–72.

McNeill, D. (2008) 'The hotel and the city', Progress in Human Geography32(3): 381–96.

Merriam, S.B. (2009) Qualitative research: A guide to design and implementation (2nd ed.). San Francisco, CA: Jossey-Bass.

Ministry of Economic Development(2011) Tourism Development Strategy 2011-2016. Colombo : Ministry of Economic Development.

Mitchell, J. and Faal, J. (2006) The Gambian tourist value chain and prospects for pro-poor tourism. London: ODI.

Murray, C. (2001) Livelihoods research: Some conceptual and methodological issues. Manchester : CPRC.

Nagel, J. (2001) 'Racial, ethnic, and national boundaries: Sexual intersections and symbolic interactions', Symbolic Interaction 24(2): 123–39.

Nanayakkara, S.A. (2016) 'Women's Participation in Tourism Development in Sri Lanka: An Exploratory Research into LowLevels of Women's Employment inthe Hotel Industry". Master's Thesis, University of Colombo.

News.lk. (2015) 'Economic policy statement made by Prime Minister, Ranil Wickremesinghe in Parliament', 6 November, accessed28 June 2016. http://www.news.lk/fetures/item/10674-economicpolicy-statement-made-by-primeminister-ranil-wickremesinghe-inparliament

News.lk. (2016) "'Decisions taken by the Cabinet of Ministers at its meeting held on 02-03-2016', 3 March, accessed 28 June 2016. http://www.news.lk/cabinetdecusions/item/12447-decisionstaken-by-the-cabinet-of-ministersat-its-meeting-held-on-02-03-2016.

Pierce, J., Martin, D.G. and Murphy,J.T. (2011) 'Relational place-making: The networked politics of place', Transactions of the Institute of British Geographers 36(1): 54–70.

Pond, C. (1988) 'Invisible earnings : Pay and employment in tourism',Planning Practice and Research 12–13.

Samaranayake, H.M.S. (2012) A lifetime in tourism: A memoir of my association with tourism in Sri Lanka and abroad. Colombo: Vijitha Yapa.

Sanyal, K. (2007) Rethinking capitalist development: Primitive accumulation, governmentality and post-colonial capitalism. New Delhi:Routledge.

Sanyal, K. and Bhattacharyya R. (2009) 'Beyond the factory: Globalisation, informalisation of production and the new locations of labour', Economic and Political Weekly 44(22): 35–44.

Sarvananthan, M. (2016) The pains of labor in the post-civil war development in the city of Jaffna, Northern province, Sri Lanka. Colombo: Solidarity Center in Sri Lanka.

Scott, D.G. (2006) 'Socialising the stranger: Hospitality as a relational reality'. Doctoral Dissertation, University of Otago.

Senaratne, K. (2014) 'Sri Lanka's post-war development discourse & its impact on accountability and autonomy', in 13th Annual Symposium of CEPA: Post-war development in Asia and Africa. Colombo: CEPA.

SLTDA (Sri Lanka Tourism Development Authority) (2014a) Monthly statistical bulletin 2014. Colombo: SLTDA.

SLTDA (Sri Lanka Tourism Development Authority) (2014b) Passikudah resort. Colombo: SLTDA.

Stynes, B.W. and Pigozzi, B.W. (1983)'A tool for investigating tourism related seasonal employment',Journal of Travel Research 19–24.

Tataryn, A. (2014) 'Revisiting hospitality: Opening doors beyond Derrida towards Nancy's Inoperativity', Re-Orienting Hospitality, Re-Orienting Law 17(10):184–210.

Timothy, D.J. (1999) "Participatory planning: A view of tourism in Indonesia', Annals of Tourism Research 371–91.

Tosun, C. and Jenkins, C.L. (1999)'The evolution of tourism planning in Third World countries: A critique', Progress in Tourism Research and Hospitality Research 101–114.

Tosun, C. and Timothy, D.J. (2001) 'Shortcomings in planning approaches to tourism development in developing countries: The case of Turkey', International Journal of Hospitality Management 352–359.

Tourism Concern (2013) 'The impacts of all-inclusive hotels on working conditions and labour rights in Barbados, Kenya & Tenerife'.London: Tourism Concern.

Van Onelson, C. (1996) The life of Kas Maine, a South African sharecropper 1894-1985. New York : Hill & Wang.
Wagner, J.E. (1997) 'Estimating the economic impacts of tourism', Annals of Tourism Research 592–608.

Westmore land, M. (2008) 'Interruptions: Derrida and hospitality', KRITIKE 2(1): 1–10.

World Bank (2010) Kenya's tourism : Polishing the jewel. Washington, DC : World Bank, Finance and Private Sector Development: Africa Region.

Yin, R. (2012) Applications of case study research (3rd ed.). Thousand Oaks, CA: Sage Publications.

Young, S. (2010) 'The moral hazards of micro finance: Restructuring rural credit in India', Antipode 42(1):201–23.



சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் மற்றும் இலங்கையில் போருக்கு பின்னரான சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் விளைவுகள் போன்றவற்றை புரிந்துகொள்வதே பாசிக்குடாவை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்விடய ஆய்வினுடைய நோக்கமாகும். போருக்கு பின்னரான சுற்றுலாத்துறையின் வளர்ச்சியானது உள்ளூர் மற்றும் உள்ளூருக்கு அப்பாற்பட்ட நலன்கள் மற்றும் மோதல் தொடர்பான நலிந்த விடயங்களில் எவ்வாறு ஈடுபடுத்தப்படுகின்றது என்பதை இந்த ஆய்வானது வெளிச்சமிட்டு காட்டுகின்றது.

cepa
centre for poverty analysis

29, R. G. Senanayake Mawatha,
Colombo 7, Sri Lanka.

T +94 (011) 4690200, 2676955
F +94 (011) 2676959
E info@cepa.lk
W www.cepa.lk

ODI

Secure Livelihoods Research Consortium

ISBN: 978-955-1040-96-3